
KALKI
18-11-84. ரூ.1-50
கல்கி



நேரம் நல்ல நேரம்

''உங்கள் ஐம்பதாண்டு நாடக மேடை அனுபவங்களைத் தொகுத்து 'நேரம் நல்ல நேரம்' நிகழ்ச்சி தயாரித்து வழங்குங்களேன்!'' என்று கல்கி ஆசிரியர் கேட்க, தமது அரை நூற்றாண்டு அனுபவங்களை சுவாரசியமாக வழங்கினார் **பூர்ணம் விசுவநாதன்** இந்த நிகழ்ச்சிகளில் அவருடைய குழுவினரும் பங்கு கொண்டார்கள். உரையாடல் மூலமும், இடையிடையே மௌலி, சுஜாதா இவர்களின் நாடக வசனங்கள் மூலமாகவும் நிகழ்ச்சியை அமர்க்களமாக அமைத்துக் கொடுத்தார் பூர்ணம். நடிப்புக்குப் பின்னால் சில நாடகங்களை மட்டுமின்றி நடிப்புக் கலையின் நயங்களையும் நாடகக் கலையின் நுணுக்கங்களையும் ரசமாக எடுத்துக் கூறுவதாக அமைந்தன நிகழ்ச்சிகள்.

நடிப்புக்குப் பின்னால் சில நாடகங்கள்

இரண்டு மூனு வருஷத்துக்கு முன்னாலை, நடந்தது இது. நாடகம் ஆரம்பிக்க மொதல் மணி எப்பவோ அடிச்சாச்சு. மேடையிலிருந்து தெரை இடுக்கு வழியாப் பார்த்தப்போ, ஹால் நெரம்பியிருக்கது தெரிஞ்சிச்சு. நாடகத்தை ஆரம்பிச்சிரலாம்னு ரெண்டாவது மணி அடிக்கப் போனேன். அப்பத்தான் பல்தேவ் ஓடிவந்து குப்புசாமி இன்னும் வரலேங்கற அனகான சேதியைச் சொன்னார். எனக்கு மூச்சே நின்னு போன மாதிரி டென்ஷன் ஆரம்பிச்சிரிச்சு. அவரை வச்சுக்கிட்டுத்தான் மொதல் ஸீனே ஆரம்பிக்கணும். மேக்அப் போடாம நின்னுக்கிட்டு இருந்த ரவிதான் சட்டுனு தன்னோட ஸ்கூட்டரை எடுத்துக்கிட்டுக் கிளம்பினாரு குப்புசாமி வீட்டுக்கு...

ஆனா குப்புசாமிய வீட்டுல காணம்! உடனே ரவி, வழக்கமா அந்த ஆளு சீட்டு விளையாடற க்ளப்புக்குப் போய்ப் பார்த்தா, அங்க இந்தக் குப்புசாமி டிராமாவைப் பத்தின நினைப்பே இல்லாம சீட்டு விளையாடித் தோத்துக்கிட்டிருந்தார்!

அப்புறம், 'ஐய்யோ இன்னிக்கு நாடகம் இருக்கா? பேப்பரே பார்க்கலையே?' —ன்னு ரவியோட ஸ்கூட்டர் பின்னால தொத்திக்கிட்டு அடிச்சுப் பொரண்டு தியேட்டருக்கு வந்தார். அதோட இல்லாம, நாடகத்துல தனக்கு வேண்டிய டிரஸ்ஸை எடுத்துக்கிட்டு வராம அப்புறம் எரவல் டிரஸ்ஸைமாட்டிக்கிட்டு... மெதுவா ஏழே மூக்கா லுக்கு ரெடியாயி... நல்ல வேளை, ஆடியன்ஸ் போலீஸ் வரைக்கும் போகாம எங்களை மன்னிச்சுட்டாங்க!

முகம் வீங்கிய பாட்டி

● ஹ்ம்ம்... அமெச்சூர் நாடகக் குழுக்கள்ள இப்படியெல்லாம் வகை வகையான டென்ஷன்கள்: யாருக்கோ தகவல் போகாது; வேற யாரோ ஆபீஸ்ல மாட்டியிருப்பாங்க; இன்னொருத்தருக்கு வழியில சைக்கிள் டயர் பங்ச்சர் ஆயிருக்கும்... ஃப்ளாஷ் பார்த்தாச் சிரிப்பு வரும்... ஆனா அந்தச் சோதனைகளை அனுபவிச்சப்போ என்ன பாடுபட்டோம் சுறதக் கூடவே நெனச்சுப் பார்த்தா, வந்த சிரிப்பு வாயோட நின்னு போகுது.

● டெல்லிக்குநாடகம் போடப்போறப்போ, சென்ட்ரல் ஸ்டேஷன் சூப்பிரண்டெண்ட் சீன் ஸெட்டிங்கை எல்லாம் பிரேக்வேன்ல எங்க கூட அனுப்ப முடியாதுன்னு அழ வச்சது... இன்னிக்கல்ல 1939—ல், ஸீன் ஸெட்டிங் எடுத்துட்டு வந்த லாரி வழியில நொடிச்சுப் போய் அதெல்லாம் இல்லாமயே ஒரு வழியாக நாடகம் போட்டுச் சமாளிச்சது... 'வாஷிங்டனில் திருமணம்' நாடகத்துல பாட்டி வேஷம் போடற

○ டாக்டர் நரேந்திரனும் மதுவும்





○ நளிக்குருத்துநளத்தில் ஒரு காட்சி

கிருஷ்ணமூர்த்தி ஷேவ் பண்ணாம கடைசி நிமிஷத்துல வந்திட்டு, 'எல்லாம் மேக்—அப்புல சரி பண்ணிக்கலாம்'னு சமாதானம் சொன்னதையும், அவரோட சொர சொர மொகத்துக்கு ஸ்பெஷலா மேக்—அப்பை அள்ளிப் போட்டதுல அவரு மூகம் வீங்கிப் போன பாட்டி மாதிரி அன்னைக்கி மேடைல நடமாடினதையும் மறக்க முடியுமா?

● இன்னொரு நாடகத்துல ரொம்ப சீரியஸான காட்சி நடந்துட்டிருந்தப்போ, பின்னால தோழி வேஷத்துல நின்ன டோப்பா நடிகருக்கு உச்சந்தலையில அரிப்பு ஏற்பட்டு, அதை அவர் சொறியப் போய் டோப்பா அவர் கையோட வந்திரிச்சு. அவரோட வழுக்கை மண்டையைப் பார்த்து ஆடியன்ஸ் திகைக்கறதுக்குள்ளே அவர் டோப்பாவை மறுபடி தலையில வச்சுக்கத் தாறுமாறு ட்ரை பண்ணிப் பார்த்து, கடசில தலைப்பின்னல் முன்னால வர்ர மாதிரி அதை வச்சுக்க... ஆடியன்ஸ் வாய்விட்டு அழுதே புட்டாங்க!

நடு மேடையில் நாரதர்

● நாரதர் வேஷக்காரர் ஒரு தடவை சில சிம்மாசனங்களை எடுத்துப் போட உதவி பண்ணினார் மேடையில. இடுப்புல பான்ட், கையில மணிக்கட்டுல எல்லாம் பூவளையம்: வெத்து ஒடம்பு, நெத்தியில நீள கோபிச் சந்தனம், தலையில நாரதரோட நெடுங் கொண்டை — அதுலயும் ஒரு பூ வளையம், கையில சிம்மாசனம்: இவ்வளவு தோரணையோட அய்யா நடு மேடையிலே நிக்க, ஒளி ஒளி நிபுணர் திடீர்னு தவறிப்போய் லைட்டைப் போட்டுட்டார்! நாரதர் வேஷக்காரர் சிரிப்பாய்ச் சிரிச்சுட்டாரு... அவரு மட்டுமில்லே, ஆடியன்ஸும்தான்!

● ஆரம்ப நாட்கள்ளே, எங்க ஊர்ல பெரிய வக்கீல் ஒருத்தருக்கு ஏகப்பட்ட ஆர்வம் இருந்தும் நடிக்கச் சந்தர்ப்பமே கிடைக்காம போயிட்டிருந்தது. எங்க 'மார்க்கண்டேயன்' நாடகத்துல அடம் பிடிச்சு சித்திரகுப்தன் ரோல் வாங்கிக்கிட்டார். ஒத்திகைக்கு வர்றப்போ அவர் வீட்டுல தயார் பண்ணின அசல் நெய் ஸ்வீட்டுகளோட தயாரா உட்கார்ந்திருப்பார். ஒரு சித்திரகுப்தன் வேஷத்துக்காக அவர் தன்னோட சொத்துக்களையே பாழாக்கிடுவாரோன்னு நாங்க பயந்தே போனோம்.

நாடக நாள் வந்தது. அன்னைக்கி நாலஞ்சு மணி நேரம் முன்னாடியே தியேட்டருக்கு வந்து கண்ணாடி எதிர்லயே ஒக்காந்து, கொஞ்சம் கூட அலுக்காம தன்னைத்தானே அழகு பார்த்துட்டிருந்தாரு. நாங்க எப்பவாவது மேக்—அப்பைச் சரிபார்க்கணும்னு கண்ணாடியைப் பார்த்தாக் கூட அவர் மொகம் தான் தெரியும்...! யமன் தர்பார் ஸீன் வந்தது. யமன் ஒரே ஆர்ப்பாட்டத்தோட தர்பாருக்குள்ள வந்து "சித்திர குப்தா!" என்று ஒரு கத்துக் கத்தினாரு. உள்ளே நின்னு தெரை இடுக்கு வழியா ஆடியன்ஸைப் பார்த்துக்கிட்டிருந்த வக்கீல் சார், தர்பாருக்குப் போறதுக்குப் பதிலா காஸ்ட்யூம் சலசலக்க ஓட, நாங்க பதறிப் போய் அவரை வெரட்டிப் பிடிக்க, மனுஷன் ஆடியன்ஸ் கூட்டத்தைக் கண்டு வெலவெலத்துப் போய், "என்னால நடிக்க முடியாது!"ன்னாரு. கடசில யமன் முதல் கொண்டு எல்லாரும் அவர் கால்ல விழுந்து கெஞ்சி அவரைச் சம்மதிக்க வச்சோம். அவர் தன்னோட ஸீன்ல எல்லாம் ஆடியன்ஸைப் பார்க்காம, யமனையே பார்த்துக்கிட்டு ஒரு மாதிரி ஒருக்களிச்சு உக்காந்து வசனத்தைப் பேசி நாடகத்தை ஒருவழியா ஒப்பேத்திக் குடுத்தாரு. அவரோட நாடக வாழ்க்கை அது ஆரம்பிச்ச அன்னிக்கே முடிஞ்சு போச்சு. அப்புறம் அவர் மேடைப் பக்கமே வரலே. நாங்க வர விடலே.

அதோட அவரைக் கண்டாலே நாங்க சந்து பொந்தெல்லாம் பாய்ஞ்சு ஓட ஆரம்பிச்சோம்...

● ஒரு தடவை ஒரு உள்ளூர் பெரியமனுஷர் 'நந்தனார்' நாடகத்தில நந்தனாரா வேஷம் போட மொரண்டு பிடிச்சார். அவருக்கோ பாட வரல்லே. ஒருமாதிரியா சரிக்கட்டி வேதியர் வேஷம் கொடுத்தோம். நந்தனார் வேதியர் கிட்ட வந்து, 'தில்லையம்பல ஸ்தலம் ஒன்றிருக்குதாம்'னு பாடிக்கிட்டு சிதம்பரம் போய் வர பெர்மிஷன் கேக்கறார். உடனே வேதியர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்து வீசி, ''அப்பா டேய் நந்தா, சிதம்பரமோ, சிக்காகோவோ எங்க வேணும்னாலும் நீ போய்க்கோடா. எனக்கு ஒரு சுகக்கேடும் வந்துடாது; கேட்டயா''ன்னு நல்ல பாலக்காட்டுத்தமிழ்லே கத்திட்டு, சட்டுனு உள்ளே போய்ட்டார். நாடகம் அங்கேயே முடிஞ்சு போச்சு!

ராஜாஜி காப்பாற்றினார்

● 1946–ல எனக்குப் பத்திரிகை மூலமா ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டுது. டில்லியில் அந்த வருஷம் நாங்க ஆசிரியர் கல்கியோட 'கள்வனின் காதலி'யை நாடகமாகப் போட்டோம். அப்போ மத்திய அரசாங்க மந்திரியாக இருந்த ராஜாஜி தலைமை. யாரோ சில பேர் இதைக்கண்டு பொறுக்காம ஒரு பிரபல பத்திரிகைஎடிடர் கிட்டப் போயி, இந்த நாடகத்தில முஸ்லிம்களைப் புண்படுத்தறாப்பல ஸீன்கள் இருக்கறதா வத்தி வச்சிட்டாங்க. அந்த ஆசிரியர் ஒரு தலையங்கமே எழுதி, அதுல என்னையும் நாடக டைரக்டர் கப்புடுவையும் பேரைச் சொல்லித் தாக்கிவிட்டு, 'இந்த நாடகம் நடந்தா முஸ்லிம்கள் சும்மா இருக்க மாட்டாங்க'ன்னு பயமுறுத்தியிருந்தார். ராஜாஜிகிட்டே ஓடினோம். நாடகத்துல கமலபதிங்கற பாத்திரம் பெண்வேஷம் போட்டுக்கிட்டு முஸ்லிம் பொண்ணு மாதிரி ஒரு புர்க்காவோடு கதாநாயகனைக் காட்டுல வந்து சந்திக்கிறதா ஒரு காட்சி வருது. அந்தக் காட்சியை ராஜாஜிக்குப் படிச்சுக் காமிச்சோம். உடனே ராஜாஜி அந்த ஆசிரியருக்கு நேரடியா போன் பண்ணி, தலையங்கத்தைக் கண்டிச்சதோட, மறுநாளே ஒரு மறுப்பு வெளியிடணும்னு சொன்னார். ரெண்டு நாள் அந்த நாடகம் போட்டோம். ரெண்டு நாளும் ராஜாஜி தலைமை தாங்கிப் பாராட்டிப் பேசினார். விபரீதம் எதுவும் நடக்கலே. நாடகம் பெருவெற்றியாகவே நடந்து முடிஞ்சுது. அதுனாலேயே அதுவரைக்கும் இருந்த டென்ஷன் பறந்தோடிப் போச்சு. நாடக போதைக்கு இப்படி ஒரு சக்தி.

இசைக்கு குருகுலம்னு இருக்கறமாதிரி இப்பல்லாம் நாடகத்துக்குக் குருகுலம்னு எதுவும் இல்லே. ஆனால் ஒரு காலத்துல இருந்தது. சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் ராஜமாணிக்கம் மாதிரி பெரிய கலைஞர்கள் அந்த நாள்ள பாய்ஸ் கம்பெனி நடத்தி, சின்ன பையன்களுக்கு முறையான பயிற்சி குடுத்திட்டிருந்தாங்களே, அது குருகுலம் மாதிரிதான். டில்லியிலே நாடகப் பயிற்சிப் பள்ளின்னு ஒண்ணு இருக்கு. அங்க எல்லாம் ஸிஸ்டமேடிக் ட்ரெயினிங்னு இருக்கறதுனால அதுக்குத் தனி வால்யூ உண்டு.

சமீபத்துல மேற்கு ஜெர்மன் நாடக நடிகர்கள் சில பேரைச் சந்திச்சேன். மேற்கு ஜெர்மனியில் இருக்கற நாடகக் கலைஞர்கள்ள அநேகமா எல்லாருமே ஏதாவது ஒரு நாடகப் பயிற்சிப் பள்ளியில் முறையா ட்ரெயினிங் முடிச்சு மேடையேறுறாங்களாம். இந்தப் பள்ளிகள் எல்லாமே அரசாங்கப் பொறுப்புல நாடு பூராவும் பரவிக் கெடக்கு

○ மேஜரின் கால்கட்டு நாடகத்தில்



ாரம். கேக்கப்ல எவ்வளவு சந்தோஷமா இருக்கு பாருங்க!

வசனத்தின் ஜீவன்

நாடக நடிப்புக்கு அழுத்தமான இலக்கணம் தேவை இல்லேன்னு சொல்றுங்க. அது சரி — சரியில்லேன்னு தீர்ப்பு சொல்ல வேண்டாம். இதெல்லாம் தனிப்பட்ட அபிப்ராயம். எனக்கு நான் அப்படி இலக்கணம் எதையும் வச்சக்கறதில்லே. இயல்பா நடிக்கணும்கறதுதான் என் லட்சியம். அதுக்காகத்தான் எப்பவும் முயற்சி பண்றேன். ஆனா முறையான பயிற்சிங்கறது ரொம்ப அவசியம். என்னை மாதிரி பல பேருக்கு மேடையேறினப்புறம் தான் பயிற்சி கெடைக்கது. இதுதான் சரின்னு சொல்ல முடியுமா? மேடையேற்றத்துக்கு முன்னாலேயே குரல் வளம், நடிப்பு, ஒப்பனை, ஆடை அணிகள் இப்படி பல அம்சங்கள்ள முறையான பயிற்சி கெடைச்சா எவ்வளவு நல்லா இருக்கும்? அப்படிப்பட்ட பயிற்சி இல்லாம மேடை ஏறினா, அந்த அளவுக்குத் தாமதமாத்தான் பக்குவம் வரும்.

வாய்ஸ் மாடுலேஷன்கறதுக்குக் குரல் ஏத்த இறக்கம்னு ஒரு மொழிபெயர்ப்புத் தர்ராங்க. என்னைக் கேட்டா மாடுலேஷன் தான் நாடக வசனத்துக்கே ஜீவன். நீள வசனமா இருக்கட்டுமே? பேசறபடி பேசினா அதோட ஒவ்வொரு அணுவையும் ரசிக்க மாட்டாங்களா? 'ஊர் வம்பு' நாடகத்துல, அய்யாசாமி பொகையிலே போட்டுக்கிட்டே எல்லார்ட்டயும் பேசுவார். நெஜமாகவே வெத்தலேயும் பொகையிலேயும் வாயில அடக்கிக்கிட்டாப் பேச்சே தெளிவில்லாமப் போயிடுமே! அந்த அய்யாசாமிங்கற காரக்டர் பொகையிலேயோட சேர்த்து ஊர் வம்பையும் மென்னுக்கிட்டிருக்கார்ன்னுக் காட்டத்தான் இப்படி டிவைஸ் பண்ணேன். மேடையிலே வெத்தலேயைக் கிள்றது, சுண்ணும்பைத் தடவறது, பொகையிலேயை எடுத்து உள்ளங்கையில வச்சக் கசக்கி வாயில போட்டுட்டு, கையில சொவடு இல்லாமத் தட்டிவிட்டுக்கறது — எல்லாமே இதோட சேர்ந்த நைஸமஸ். அவ்வளவு தான். எனக்கு வெத்தலே பொகையிலே பழக்கமே கெடையாது...

சுஜாதாவோட 'கடவுள் வந்திருந்தார்' ஒரு அருமையான நாடகம். நாடகத்தோட மொத ஸீன் நகைச்சுவையாகத்தான் ஆரம்பிக்கறது. நயமான நகைச்சுவைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. சாதாரணமா ஒரு வார்த்தை மூலமா எவ்வளவு விஷயத்தைச் சொல்லிர்ராரு பாருங்க. உதாரணமா, ''சுந்தர் என்னைக் கொஞ்சம் தொந்தரவு பண்ணுன்ப்பா...'' அந்தத் தொந்தரவுங்கற ஒரே ஒரு வார்த்தையில எவ்வளவு அடங்கியிருக்கு! நாடகத்துல நகைச்சுவைங்கறது அதுலயே பூராவா ஐக்கியமாயிருக்கணும். தனியாக நிக்கக் கூடாது. ஜோக் அடிக்கறதுக்கோ, வேற விதத்துல நீட்டி மொழக்கறதுக்கோ, கதையோட வளர்ச்சிவேகத்தை நிறுத்தி வெக்கறது நாடக தர்மத்துக்கே விரோதமானது.

சுஜாதாவின் சொற்சிக்கனம்

கதை சொல்றப்ப சொற்ப வார்த்தைகளைக் கொண்டே துல்லியமாகவும் முழுமையாகவும் ஒவ்வொரு காட்சியையும்நம்ம கண் முன்னால நிறுத்தக் கூடிய திறமையுள்ளவர் சுஜாதா. அவர் நாடக வசன அமைப்புலேயும் ரொம்பச் சிக்கனமா வார்த்தைகளை உபயோகிச்சு, ரொம்பச் சிக்கலான உணர்ச்சிகளைக் கூட வெளிப்படுத்தறார். ஒரு நாடக ஆசிரியருக்கு வேண்டிய அடிப்படையான இலக்கணம் இது. இந்தச் சிக்கனமான சொற் பிரயோகத்தை அவர் நகைச்சுவை விஷயத்துலயும் ரொம்ப இயல்பாக் கையாள்றபோது, அவரால நடிகனுக்கே பெருமை உண்டாகுது.

'டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு'ங்கற ஸீரியஸ் நாடகத்துல கூட அவரோட நுட்பமான நகைச்சுவையை எவ்வளவு இடத்துல பார்க்க முடியுது! அப்பா கோமாவுல படுத்திருக்கார். மனைவியும், மகன்களும், மகளும் சொத்தைப்



○ கூத்தபிரான்

ஒட்டடை தேடி...

மௌலி எழுதிய தனிக்குடித்தனம் நாடகத்தில் பூர்ணம் ஒட்டடை அடிப்பது போல் ஒரு காட்சி. இதற்காக ஒட்டடையைச் சேகரித்து ஒரு டப்பாவில் போட்டு நாடகம் நடக்கும் இடத்துக்கு எடுத்துப் போவோம்! பம்பாய் சென்ற போது இது மறந்துவிட்டது. உடம்பில் ஒட்டிக் கொள்ள ஒட்டடை இல்லையே என்று தவித்துப்போனார் பூர்ணம். நாடகம் நடந்த சண்முகாநந்த சபாவோ படு சுத்தம். தேடித் தேடி ஒட்டடை அகப்படாமல் நாங்கள் பட்டபாடு! பூர்ணத்திடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டோம். அவர் ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் எவ்வளவு கவனம் செலுத்துவார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

—கூத்தபிரான் கூறியது.

பத்தியே நினைச்சுக்கிட்டிருக்காங்களே ஒழிய, அந்த ஆளைப் பத்திய நெனைப்பே கொஞ்சம் கூட இல்லியே! இந்தக் கட்டத்துல சுஜாதா குடுக்கற நகைச்சுவை Black Humour ரகத்தைச் சேர்ந்தது. என்னம்மா இடிச்சுக் காட்டறாரு!

ரொம்ப ஸீரியஸ் நாடகத்துல கூட காமிக் ரிலீஃப்னு கொஞ்சமாவது நகைச்சுவை இருந்தாத்தான் சரிப்படும். அதுக்காக லேட்டா இருக்கற நகைச்சுவை நாடகங்களுக்கு மட்டும் தான் வரவேற்புன்னு சொல்றது தப்பு. ஆடியன்ஸ் ரெண்டையும் தான் விரும்பறாங்க. உண்மையில, பார்க்கறவங்களுக்கு மனக்கிளர்ச்சியை உண்டாக்கக் கூடிய ஸீரியஸ் நாடகங்களுக்கும் இப்போ நல்ல வரவேற்பு இருக்கு. இல்லேன்னு கோமல் சுவாமிநாதனோட 'தண்ணீர், தண்ணீர்', 'ஸ்வர்க்க பூமி', 'நள்ளிரவில் பெற்றோம்' மாதிரி நாடகங்களுக்கும், சுஜாதாவோட 'அடிமை'கள், 'டாக்டர் நரேந்திரன்' மாதிரி நாடகங்களுக்கும் சோவோட 'உண்மையே உன் விலை என்ன?' நாடகத்துக்கும் அமோகமான ஆதரவு கிடைச்சிருக்க முடியுமா?

இந்த மாதிரிப் பாத்திரங்களை எல்லாம் எடுத்து நடிக்கறப்போ நடிகனுக்கே முழு ஈடுபாடு தன்னை அறியாமல் வந்துரும். காரணம் இதுல எல்லாம் இருக்கற சோஷியல் பர்ப்பஸ் — சமூக நோக்கம்தான். இன்னிக்கி நம்ம சமூக மொறைமையில இருக்கற சீர்கேடுகளை எல்லாம் பார்க்கும் போது. மனச்சாட்சி உள்ள எவனுக்கும் கடுங்கோபம் வராம இருக்காது. சாதாரண ஜனங்களுக்கு வர்றதைப் போலப் பல மடங்கு கோபம், ஒரு உண்மையான நாடகாசிரியனுக்கு வரணும். செல்லரிச்சுப் போன நம்ம சமூகத்துக்கு எந்த விதத்துலேயும் மழுப்பலோ, காம்ப்ரமைஸோ இல்லாம சாட்டையடி குடுத்து, அதுக்கு ஒரு சொரணையை உண்டாக்கக் கூடிய கதாசிரியர்கள் நிறையத் தேவை. அத்தகைய நாடகங்களை ஆர்வத்துடன் அரங்கேற்றும் நாடகக் குழுக்களும் ஏராளமாய்த் தேவை. இந்த வகையில கலைஞர்களோட முயற்சி ஒரு கடுந் தவமாகவே நடக்கணும்னு எனக்குத் தோணுது.

''நேரம் நல்ல நேரம்'' நிகழ்ச்சியில் பங்கேற்று பூர்ணம் அவர்களுடன் ஒத்துழைத்த **பூர்ணம் நியூ தியேட்டர்ஸ்** நடிக நடிகையர் அனைவருக்கும் கல்கி நேயர்கள் சார்பில் நன்றி. நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவானபோது நடிக நடிகையரைப் பூர்ணம் டைரக்ட் செய்த விதம் — நகைச்சுவை இழையோட நாசூக்காகத் திருத்திய பாணி — அதுவே ஒரு மறக்க முடியாத அனுபவமாய் இருந்தது. நடிக நடிகையர் அவரிடம் வைத்துள்ள அன்புக்கும், மதிப்புக்கும் காரணமும் புரிந்தது.

—ஆசிரியர்.)

தொகுப்பு: **சாருகேசி**

வண்ணப்படம்: **உத்ரா**



வெள்ளித்திரை

"**போ**ன வாரம் அதென்ன அப்படி மாயமாய் மறைந்து போனாய்? என்ன அவசரம்?" என்று ஜெயமன்மதனின் கேள்வி.

"உங்கள் பாடு தேவலேப்பா. தலையை வலிச்சா மாத்திரை போட்டுப்பீங்க. நான் அப்படிச் செய்ய முடியுமா?" என்றது வேதாளம் தியேட்டரின் ஏ. ஸி. யில் நடுங்கியபடி.

காவல் கைதிகள்

ஆடுமி வைத்த அப்பாவி அண்ணன் மார்கள் அழகான தங்கையோடு, அன்பான அம்மாவோடு வேலை தேடி மெட்ராஸ் வருவார்கள். அண்ணன்களை டவுல்காரர்கள் டபாய்ப்பார்கள். தங்கை வில்லனிடம் சிக்கி, பலாத்கார முயற்சியில் மூச்சைத் துறப்பாள். அண்ணன்கள் கஷ்வரக்கடைக்குப் போய் வந்து, கிராப்போடு வில்லன்களைப் பழி தீர்ப்பார்கள். மூன்றும் வருஷத்து மத்காப்பையே மறுபடியும் பற்ற வைத்துக் காட்டுகிறார் டைரக்டர். சசிகலாவை நன்றாய் உரித்திருக்கிறார்கள் என்பது தவிர புதுசாய் ஏதுமில்லை. தியேட்டரின் உள்ளே மாட்டியவர்கள் தான் கா. கை.

"உருப்படியாய் ஒரு படம் அழைத்துப் போக மாட்டீர்களா?" என்று வேதாளம் ஜெயமன்மதனிடம் மண்டியிட்டுக் கேட்டது. பாவமாய் இருந்தது. "சரி, ரஜினி படத்திலாவது ஏதாவது தேறுகிறதா பார்ப்போம் வா."

நல்லவனுக்கு நல்லவன்

எஸ்.பி. முத்துராமன் முதல் பாதியையும், விசு இரண்டாவது பாதியையும் தந்து எடுத்துக் கொண்ட கதை.

மவுண்ட் ரோடு டிராஃபிக் ஸ்தம்பித்து நிற்கிற மாதிரி முதல் காட்சி. ரஜினி ஜெயிலிலிருந்து விடுதலையாகி வந்திருக்கிறாராம். அதைப் பார்த்துப் பிரமித்து நிற்கிறார்களாம். என்ன அமர்க்களமான ஆரம்பம். ரஜினியும்; பளப்பள கலர்களில் அவர் போடுகிற முரட்டு டிரஸ்களும் சரியான தீனி தான் என்று வாய் பிளக்க வைக்கின்றன. குறையே வைக்கவில்லை.

ஹோட்டலில் புகுந்து மேஜை, நாற்காலி, கண்ணாடி என்று அத்தனையையும் தூள் தூளாக்கி முதல் சண்டை. பாபுவின் சாமிராவா, ஜூடோ ரத்தினத்தின் பயிற்சியா இல்லை இரண்டின் கலவையுமா — சண்டைக் காட்சிகள் வெகு சுறுசுறுப்பு. அத்தனை உடைத்த பின்னாலும் ஹோட்டல்காரர்கள் நன்றி சொல்லி ரஜினிக்கு ஒரு டான்ஸ் பார்ட்டி வைக்கிறார்கள்!



வேதாளமும் ஜெயமன்மதனும் ④

அப்புறம் ராதிகா அறிமுகம். வீட்டை விட்டு ஓடிவந்தவரை மறுபடி அவர் வீட்டில் கொண்டு சேர்க்கிறார். "பொம்பிளைங்களெல்லாம் இப்படி தனியா ஓடி வரக்கூடாது". ஆனால் சேர்ப்பித்த இடம் தவறான எண்ணம் கொண்டவர்களின் இடம் என்று புரிந்து உடனே கையோடு அழைத்து வந்து, போலீசை சாட்சிவைத்துத் தாலி கட்டி ராதிகாவோடு குடித்தனமே ஆரம்பிக்கிறார். என்னடா இது. கதை இத்தனை சீக்கிரம் இந்தக் கட்டத்துக்கு வந்து விட்டதே என்று யோசனையாய் இருந்தது. ஆனால் அப்புறம் தான் சுவாரஸ்யமான கதைப் பின்னல்.

நியாயம் கேட்கப் போய் அடிதடி ஆகி ஜெயிலுக்குப் போய்விட்டுத் திரும்புகிற வழியில், பழைய எதிரிகள் புரட்டிப்புரட்டி அடிக்கிறார்கள். பதிலுக்குக் கையைத் தூக்க வேண்டுமே. ஊம்! ஏனாம்? 'யாரையும் அடிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணுங்க' என்று மனைவி சத்தியம் வாங்கியிருந்ததால். வீட்டிற்குப் போனதும் அதே மனைவியே பதறிப் போய், 'வீண் வம்புக்குத் தான் போகக் கூடாது. அடிச்சவங்களைக் கூடப்பதிலுக்கு அடிக்காம வந்திங்களா? போய் அவங்களை விளாசிட்டு வந்து அப்புறம் தலை பூவை வைங்க' என்றதும் ரஜினியின் ஆற்றாமை மறைந்து முகத்துத் தசைகள் தான் எப்படி இறுகுகின்றன!

ஆக முதல் பாதி முழுக்க டான்ஸ்கள், டிஷ்யூம்கள். ஸ்டைல்கள்.

இடைவேளைக்கப்புறம், ஓஹோய், விசுவின் பேனாவுக்கு நிறைய நெளிவு சுளிவு. மிடுக்கான அப்பா ரஜினி. பதவிசான அம்மா ராதிகா. குறும்பான குழந்தை துளசி. பதவிக்கான கம்பீரமும், வீட்டில் மனைவியிடம் விரல் கடித்து நிற்கும் குழைவும், பெண்ணிடம் அவள் அம்மாவுக்குத் தெரியாமல் ரகசியமாய்க் காட்டும் கனிவும் ரஜினிக்கு அட்டகாசமான ஸ்கோர். கம்மா ட்பூ ப்பூ என்று ஊதித் தள்ளுகிறார். கார்த்திக்குடன் அவர் மோதுகிற இடங்களும் டாப். பெண்ணின் கல்யாணத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டு, அவமானமும், விரக்தியும் புரள அவர் ராதிகாவின் மீது சாய்ந்து கொள்ளும் போதாகட்டும், கல்யாணத்தில் அம்மா என்று பெண் அழைத்தவுடன் 'அவர் அப்பா இல்லேன்னு நான் என்னடி சும்மா வேண்டியிருக்கு?' என்று வெடித்துச் சீறுவதாகட்டும் ராதிகா ரஜினிக்குச் சரியான போட்டி.

மனதில் நிற்கிற இன்னொரு சீன் ஸ்ட்ரைக்கை நிர்வாகம் சமாளிக்கும் ஸீன்.

விசு, ரஜினி, ராதிகா — தூக்கி நிறுத்துகிறார்கள்.

"அப்பாடா கொஞ்சம் நிம்மதியான படம்" என்றது வேதாளம், ஆசுவாச மூச்சு விட்டு.

"தமிழ்ப்படம் பார்த்து அலுப்பாயிருந்தால் ஒரு இங்கிலீஷ் படம் போலாமா?"

"இங்கிலீஷா? எனக்குச் சுட்டுப்போட்டாக்கூட — என்னைத்தான் சுட்டுப் போட்டாச்சே — தமிழைத் தவிர வேறு பாஷை ஏறாது ஜெயமன்மதா."

"இங்கிலீஷ் ஒளி, தமிழ் ஒலி."

"அது என்ன அப்படி ஒரு படம்?"

இயற்கையின் அதிசயங்கள்

மிருகங்களை வைத்து சுவாரசியமான டாக்குமெண்டரி எடுப்பது ஒரு தனியான கலை. நகத்து இடுக்கில் ஒளிந்து கொள்ளக் கூடிய எறும்பைத் திரை முழுக்கப் பெரிது பண்ணிக் காட்டுகிற போது பிரமிப்பாய் இருக்கிறது. குழுக்குழுவாய்ப் பிரிந்து கொண்டு மரத்து இலையைச் சுருட்டிக் கூடு கட்டும் காட்சி இன்றைய இன்ஜினியர்களுக்குச் சவால்.

மனத்தைத் தொடுகிற ஒரு காட்சி:


பிரசவ வலியுடன் காட்டெருமை ஒன்று. இரையென்று மோப்பம் பிடித்த நரிகளின் சேனை. பாதி ஈன்ற கன்றுடன் அசைய முடியாமல் அசைந்து தாய் எருமை பாதுகாப்பான இடம் தேடித் தேடி அலைகிறது. சுற்றிலும் ஆண் எருமைகளின் வியூகம். ஆனாலும் நரிகள் நம் அரசியல்வாதிகளைவிட தந்திரமானவை. எப்படியோ வியூகத்தை உடைத்துக் கொண்டு அந்தக் கன்றைக் கவ்வி எடுத்துக் கொண்டு... நாற்பது பக்க வசனத்தால் முடியாத கண்ணீரை இந்த ஒற்றைக் காட்சி கொண்டுவரும்.

பூச்சியைத் தின்னும் தவளை, தவளையைத் தின்னும் பாம்பு, பாம்பைக் குதறும் பருந்து, பருந்தைப் பிடிக்கும் வேட்டைக்காரன் என்று தத்துவங்களும் உண்டு.


கண்ணில் ஒற்றிக் கொள்ளும் படப்பிடிப்பு.


தமிழ் என்பதால் பாட்டுக் கூட சேர்த்து விட்டார்கள்!

புதுசாயில்லாவிட்டாலும், சந்தோஷமாய் ரசிக்க முடிகிறது.



தியேட்டரை விட்டு வெளியே வந்ததும் "ஸீ யூ நெக்ஸ்ட் வீக்" என்று வேதாளம் சொன்னதைப் பார்க்கலாம், ஜெயமன்மதன் அங்கேயே டமால்.


இவரைப் போல் உயரமானவர் பிரச்னைகளைச் சமாளிக்க முடியாதவர்னு சொன்னாங்களே..
மாண்டேல்
வரிச்சுமை
வேலையில்லாத் திண்டாட்டம்
பணவீக்கம்
ரேகன்


அமெரிக்க


ஆட்சி
கட்சி
தேர்தல்
ராஜீவ்



கல்கி

1984 நவம்பர் 18
மலர் : 43 இதழ் : 16
ரக்தாக்ஷி கார்த்திகை 3



சீக்கியர் நம் சகோதரர்

இந்திராகாந்தியின் மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சிக்கு இணையான மற்றுமொரு பேரதிர்ச்சியாக விளங்கியது நாடு முழுவதும் நடந்த கலவரங்கள். இந்தத் தேசம் முழுவதுமே ஒரு பெரிய மனநோய் மருத்துவமனையோ, இதில் உள்ள மக்கள் எல்லோருமே மன நோயால் பீடிக்கப்பட்டவர்களோ என்று கருதுமளவில் மக்கள் மட்டுமின்றிச் சில தலைவர்களும் நடந்து கொண்டிருக்கின்றனர்.

அன்னை இந்திராவை நம்மிடமிருந்து பிரித்த வெறிச் செயலை அடுத்து மக்கள் அறிவிழந்து தாறுமாறாக நடந்து கொள்வார்கள் என்பதை எதிர்பார்த்து அதற்கு ஏற்பப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கலவரங்களைத் தவிர்த்து விட மத்திய அரசும் மாநில அரசாங்கங்கள் பலவும் தவறி விட்டன. இதனால்தான் கோவை முதல் காஷ்மீர் வரை பல இடங்களில் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டதாகி விட்டது.

தலைநகரிலும் வேறு சில வடமாநிலங்களிலும் பல்லாயிரக்கணக்கான சீக்கியர் பழிவாங்கப்பட்டுள்ளனர். அகதிகள் முகாம்கள் நிரம்பி வழிகின்றன. லட்சக்கணக்கான மதிப்புள்ள பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. 'நடந்திருக்கிற அக்கிரமங்களில் மூன்றில் ஒரு பங்கு கூடப் பத்திரிகைச் செய்திகளில் இடம் பெறவில்லை. எனவே உண்மை நிலவரத்தை உங்களால் சரியாக எடை போட முடியாது' என்று புதுதில்லி நண்பர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் கொலை வெறியையும் கொள்ளைகளையும் இ. காங்கிரஸ் காரர்கள் சிலரே தூண்டிவிட்டனர் என்ற எதிர்க்கட்சிக் குற்றச்சாட்டு வன்மையான முறையில் மறுக்கப்பட்டுள்ளது என்றாலும் கொள்ளையடித்தவர் சிலரை புதுதில்லியில் போலீஸார் கைது செய்ய முற்பட்ட போது அவர்களைக் கடமையாற்ற விடாமல் இ. காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தடுத்துள்ளது மறுக்க முடியாத உண்மை. கொள்ளையடித்தவர்களுக்காகப் பரிந்து பேசியிருக்கிறார், புது தில்லி கரோல்பாக் தொகுதி இ. காங்கிரஸ் எம். பி. தரம்தாஸ் சாஸ்திரி.

துப்பறியும் பிரிவிலும் போலீஸ் துறையிலும் பலருக்குச் சீட்டுக் கிழித்தும் வேறு பலருக்கு உத்யோக உயர்வு அளித்தும் உலுக்கி எடுத்துக் கொண்டிருக்கும் பிரதமர் ராஜீவ்காந்தி, தமது கட்சியையும் தூசுதட்டித் துப்புரவாக்க முன்வரவேண்டும். தரம்தாஸ் சாஸ்திரி போன்ற பொறுப்பற்றவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திராகாந்தியைக் கொன்றவர்களின் வெறிச்செயல் மன்னிக்க முடியாதது. அவர்களுக்குக் கூட்டாளிகள் இருந்தால் அவர்களையும் கண்டுபிடித்துத் தண்டித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் ஒரு சில சீக்கியரின் வெறித்தனம் சீக்கிய சமுதாயத்தையே நாம் வெறுக்கக் காரணமாகி விடக்கூடாது. இந்த நாட்டின் விடுதலைக்கும், விடுதலைக்குப் பின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் சீக்கியரின் தியாகங்களும் உழைப்பும் மகத்தானவை, மறந்து விடக் கூடாது. அவர்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு இடையில் பல ஹிந்துக்களே சீக்கிய நண்பர்களைக் காப்பாற்றியும் இருக்கிறார்கள் என்ற உண்மைக் கதைகள்தாம் ஓரளவு ஆறுதல் அளிக்கின்றன.

பிரதமர், கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கோடி ஒதுக்கி ரணங்கள் ஆற வழி வகுத்துள்ளது ஒரு ஆரம்பமே. பஞ்சாபில் சுதந்திரச் சூழலை உருவாக்கி, தேர்தல்களை நடத்திப் பிரசாரத்தின் போது சீக்கியர் நம் சகோதரர் என்பதை வலியுறுத்தி, ஒருமைப்பாட்டை வளர்த்து பெரும்பான்மை சீக்கியரின் தேசபக்தியை விழிப்படையச் செய்து பேராதரவைப் பெறுவதே முக்கியம். அதற்கு வாய்ப்பான தருணம் இது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.



5

திருப்பதிப் பெருமானே சரண்

மார்க்கச் செட்டியார் சத்திரத்தில் அந்தி கருங்கும் நேரத்தில் விட்டோபா என்ற அந்தத் தன வணிகர் விஸ்தாரமாக அமர்ந்திருந்தார்.

அவர் பக்கத்தில் இரண்டு மூட்டைகள் கிடக்க, இன்டு ஒன்றில் அவர முதுகு சாய்ந்திருக்க, தார்ப்பாய்ச்சிய வேட்டியிலிருந்து அவரது இரண்டு கால்களும் செக்கச் செவேல் என்று வெளி நீட்டியிருந்தன.

முன்னே தாம்பூலத் தட்டு ஒன்று பல பரிமள சுகந்த திரவியங்களோடு மங்களமாக வியாபித்திருந்தது. திறந்த கரண்டாவில் சின்ன நிலா போல் சுண்ணாம்பு விகசித்தது.

பாண்டுரங்காவின் வாயெல்லாம் சிவந்து கறை படிய, அடிக்கொரு தரம் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார் அவர்.

நல்ல திடகாத்திர மேனி! தலையில் பிரிபிரியாகக் கட்டிய மராட்டியப் பாகை! மேலே மெல்லிய வெள்ளை நிற அங்கி! கழுத்தில் மணி தாழ்வடங்கள்! காதிலே வயிரக் கடுக்கன், கையிலே இடியாகக் கங்கணங்கள், விரலுக்கு மூன்று மோதிரங்கள்.

அவருக்கு அருகே சற்று ஒடுங்கி பயபக்தியோடு ஒரு இளம்பெண் நின்று கொண்டிருந்தாள்.

எட்டத்தில் ஒரு கணக்கன் பெட்டகத்தைத் திறந்து உள்ளே தீவிரத்தோடு சோதித்துக் கொண்டிருந்தான்.

''இவன்தான் அந்த இளைஞன்'' என்று மராட்டிக் காவலர் ஒருவர் சொல்ல, 'ஹி, ஹி ஹி' என்று அவனைப் பார்த்து இளித்தார் விட்டோபா பாண்டுரங்கா.

பிறகு ''தம்பி! என்ன சொல்லுகிறாய், சொல்லு. நாங்கள் சொன்னதை ஒத்துக் கொள்கிறாயா? நேரம் கடத்தாதே!'' என்று கேட்டார்.

அங்கே வந்ததிலிருந்து உணர்ச்சிவசமாக மாறியிருந்தான் வர்மன்.

இப்படி ஒரு சூழ்நிலை, வரும் என்று லவலேசமும் எதிர்பார்க்கவில்லை. பிடிக்காத வேலையைக் கொடுத்தால் அதை மறுக்க வேண்டும் என்று கூட நினைத்திருந்தான்.

ஆனால் இங்கே சத்திரத்து அறையுள்ளே அந்தப் பெண்ணைப் பார்த்ததும், பிரமித்தது மட்டுமல்ல, மனம் இளகிக் கூழாகி விட்டது.

இப்போது தான் அவளைச் சற்று நெடுவிழியாய்ப் பார்க்கிறான். வட்டமான முகவிலாசமும் வரி விட்டு ஓடிய கயல் விழிகளும் அவன் மனத்துள் இன்பமாய் நிறைந்தன. ஒரு மின்னல் துணுக்கு போல் நின்றாள் அவள். நின்ற இடம் கூட ஓர் ஒளிக்கூடமாக ஒளிர்ந்தது.

ஒரே ஒரு முறைதான் அவளைப்பார்த்தான். அவன் நா தேனுக 'சிந்து' என்று அழைத்தது. மனத்தின் அத்தனை தாபங்களும் கூடி எழுந்தன. நீண்டதாக ஒரு பெருமூச்சு விட்டு, கண்களைத் தாழ்த்திக்கொண்டான்.

மோகினித் திருக்கோலம்

உள்ளத்தில் எழுந்த ஆயிரம் எண்ணங்களும் ஆயிரம் இழை நெருமாக வழிந்தன.

''ஐயாப் பிரபுவே! நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்!''என்றான் அவன்.

விட்டோபா சிரித்தார். ''தம்பி உனது அசகாய சூரத்தனங்களைக் கேள்விப்பட்டேன். மிகவும் மகிழ்ந்தேன். உன்னைப் போல ஒரு இளைஞன் தான் எனக்குத் தேவைப்படுகிறான். சொல்லு. ஒரு ஆபத்தான காரியத்தைச் செய்வாயா நீ!'' என்று கேட்டார் அவர்.

வர்மனுக்கு இளக்காரமான கோபம் வந்தது. ''ஐயா! நீங்கள் கட்டளையிட்டதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உயிர் வாழமுடியாது என்று நிபந்தனை போட்டு விட்டீர்கள். இப்போது ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றான் சற்று படபடப்போடு.

''ஐயா! எனக்குத் திரவியம் தேவை இல்லை. நான் வடக்கே செல்லும் காரணம் அவசரமானது! என்னைத் தங்கள் சேவகர்கள் மறித்து...'' என்று அவன் சொல்ல,

குறுக்கே புகுந்த விட்டோபா, ''வடக்கேயா? எங்கே போகிறாய்?'' என்று கேட்டார்.

''புதுச்சேரிக்கு.''

புதுச்சேரி என்று சொன்னதும் விட்டோபாவின் கண்களில் ஓா ஒளி பாய்ந்தது. ''புதுச்சேரியா! அங்கே உனக்கு ஆகவேண்டியது என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''என் தந்தையை அங்கே கிடங்கில் போட்டிருக்கிறார்கள்!'' என்றான் வர்மன்.



உடனே பாண்டுரங்கா கோபமாகச் சுற்றிலும் பார்த்து யாரிடமோ சொல்லுவது போல், ''என்ன இது? யார் இப்படிச்சொன்னார்கள். இளைஞன் நல்லவனாக இருக்கிறானே! மிரட்டலாமா? யார் சொன்னது இது! ஏன் சொன்னார்கள்:'' என்று கடும் தொனியோடு கேட்டார்.

யாரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை.

பிறகு வர்மனைப் பார்த்து, ''தம்பி எதுவும் கவலைப்படாதே! நீ எனக்கு இந்த காரியம் செய்! உனக்கு நிறைய திரவிய சகாயம் செய்கிறேன். பெரும் பணக்காரன் ஆவாய்!'' என்று கூறினார்.

''யார் உன் தந்தை?'' என்றார் விட்டோபா.

''நெல்காட்டுஞ் செவல் பாளையத்தின் தளபதி'' என்றான்.

''யார்! வீர குலசேகரரா?''

வர்மன் உடனே துள்ளினான்.

''அவர் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றான் ஆத்திரத்துடன்.

''தெரியுமாவா? அவரிடம் நேரில் வியாபாரம் செய்தவனாயிற்றே! எப்படி நான் அவரை மறக்க முடியும்? அந்தத் தாமிரவருணிப் பரானத்தில் நெல்வயல் சூழ்ந்த நகரத்தில் நிகரில்லாத பாளையக்காரராக வீற்றிருந்தாரே! மறக்க முடியுமா? தம்பி அவர் இப்போது

ஸ்ரீ வேணுகோபாலன்

எங்கே இருக்கிறார்?'' என்றார் விட்டோபா சங்கேதமாக.

''புதுச்சேரிக் கோட்டைக் கிடங்கில்...'' என்று மனம் வெதும்பச் சொன்னான் வர்மன்.

உடனே விட்டோபா பல்லைக் கடித்தவாறு, ''யார்! அந்தப் பிரெஞ்சுக்காரத் துரோகிகளா?'' என்று சினத்தோடு கேட்டார்.

''ஆமாம்! அந்த மிலேச்சப் பரங்கிகள் தான்'' என்றான் வர்மன்.

விட்டோபா தமது தலைப்பாகைமேல் ஒரு கையை வைத்துத் தீவிரமாக யோசித்துப் பிறகு கையை இறக்கி, கண்ணைத் திறந்து, ''தம்பி! உனக்கு உன் தந்தையின் விடுதலை தானே வேண்டும்?'' என்று கேட்டார்.

''ஆமாம்!'' என்றான் வர்மன்.

''அதற்கான எல்லா முயற்சியும் செய்கிறேன். இது சத்தியம். திருப்பதி சாமி பிரசன்னமாகக் கூறுகிறேன். நிச்சயம் அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பேன்'' என்று சொல்லி, கீழே வைத்திருந்த தமது பையை எடுத்து அதிலிருந்து வெங்கடேசரின் மரப் பொம்மை ஒன்றை எடுத்து, அதன் பாதங்களைத் தொட்டு 'சத்தியம்' என்று சொல்லிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

வர்மனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. விட்டோபா, அவனது தந்தையை அறிந்ததும் மட்டுமில்லாமல் அவரை விடுவிக்கவும் வழி செய்கிறேன் என்று துணிந்து கூறுகிறார். இதுவரையில் யாரும் அப்படிச் சொன்னதில்லை.

10 ஆண்டுகளுக்கு முன் இந்தியா முழுவதும் 450 வளையல் தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால் இப்போது 230 தான் உள்ளன! இதிலும் 105 தான் இயங்குகின்றன! அதனால்தான் விலை ஏற்றம்!

—சம்பத்குமாரி.

ஆதாரம்: 'டைம்ஸ்.'



''ஐயா!'' என்றான் மகிழ்ச்சியோடு! ''என் தந்தையின் விடுதலைக்காக நான் எதுவும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க !'' என்றான்.

''அப்பா தம்பி, நான் சொல்வதைக் கேள்! சந்தா சாகிப் தெரியுமல்லவா? ஆற்காடு நவாபு?'' என்று அவர் தொடங்க,

''ஐயா அவர்தான் நவாபா அல்லது...'' என்றான் வர்மன்.

''தம்பி நல்ல கேள்வி கேட்டாய்! இப்போது இருக்கும் நிலையில் யார் தான் நவாபு என்று கூறுவது மிகவும் சிரமம்! அப்படிப் போட்டி, பூசல். எனக்கு இந்த சந்தா சாகிபு நெருங்கிய நண்பர்! அவர் கொடுத்த தர்மத்தில் வாழ்கிறவன் நான். அவர் தயவில் வியாபாரமே செய்கிறவன்! இப்போது அவர் திருச்சிராப்பள்ளி கோட்டைக்குள் மாட்டிக் கொண்டு இருக்கிறார்!''

''பெரிய சூரர் என்று அவரைச் சொல்லுவார்கள்!'' என்றான் வர்மன்.

''சொல்லுவார்கள்! சூரர்கள் அறிவைச் செலவழிக்க வேண்டும். அப்படிச் செய்தாரா என்று தெரியவில்லை. கோட்டையைப் பிடிக்கிறேன்'' என்று கோட்டைக்குள் போனவர் செவ்வையாக மாட்டிக் கொண்டார். கோட்டைக்கு வெளியே பகைவர்கள் சூழ்ந்துவிட்டார்கள். முற்றுகை இடுபவர்களில் கும்பினியர்களும் (ஆங்கிலேயர்) உண்டு. இவர்களிடமிருந்து அவர் எப்படி தப்பி வரப் போகிறாரோ தெரியவில்லை...''

குறுக்கே மறித்தான் வர்மன். ''நான் போய் அவரை மீட்டுக் கொண்டு வர வேண்டுமா?'' என்று வெகுளியாகக் கேட்டான்.

''தம்பி! பெரிய பொறுப்பு அது! உன்னால் செய்ய முடிந்தால் நலமே! எனினும் என் நண்பரை மீட்கும் பொறுப்பை வேறு யாராவது பெரிய மனிதர்கள் செய்யட்டும். உனக்கு அது வேண்டாம்! நீ செய்யவேண்டியது எல்லாம் அவருக்குத் திரவிய உதவி பண்ணிக் கொடுக்க வேண்டியதுதான்.''

''ஏன் ஐயா! அவருக்குக் கூட பொருள் தேவையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் வர்மன்.

''ஆமாம் தம்பி! பொருள் இருந்தால் தானே யுத்தம் நடக்கும். நான் கேள்விப்பட்டதில் பல மாதங்களாக படைச்சேவகர்களுக்கு அவர் சம்பளம் கொடுக்கவில்லை. பணத்துக்காகத் திண்டாடுகிறார்! என் மனம் கேட்கவில்லை தம்பி! அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்!'' என்று சந்தாசாகிபு படுவதைத்தாமே படுவதுபோல் துடிப்பைக் காட்டினார் விட்டோபா.

''நீங்கள் கொடுக்கும் பணத்தைக் கோட்டைக்குள் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்! அவ்வளவுதானே! கொடுங்கள், பணத்தை!'' என்றான், வர்மன்.


சிரித்தார் விட்டோபா. ''பணமா? நான் கொடுக்கவா? நான் ஒரு அன்றாடங் காய்ச்சி வியாபாரி, தம்பி! என்னிடம் ஏது அவ்வளவு பணம்? ஒரு யுத்தத்தை நடத்தும் அளவுக்குப் பணம் கொடுக்கிறவர்



நவம்பர் 22உ இரவு 9-30க்கு

கமல்

கல்கி நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்!



கல்கி வழங்கும்

நேரம் நல்ல நேரம்

விவிதபாரதி சென்னை, திருச்சி வானொலி ஒலிபரப்பு

தயாரிப்பு: **எஸ். வி. ரமணன்**

''ஒரு மணி நேரம் ஒதுக்கினால் போதுமல்லவா?'' என்று கேட்டுக் கொண்டே ரிகார்டிங் ஸ்டுடியோவுக்குள் திரு. கமலஹாசன் நுழைந்த போது மாலை மணி 7.30. ரிகார்டிங் முடிந்து அவர் திரும்பும்போதோ இரவு மணி 11! ''அடுத்த கேள்வி, அடுத்த கேள்வி'' என்று ரமணனைக் கேட்டுக் கொண்டே இருந்தார்! ''ரெடியா? ரெடியா?'' என்று ரிகார்டிங் நிபுணர்களை முடுக்கிக் கொண்டே இருந்தார்! அந்த அளவுக்கு ஒரு ஈடுபாட்டை அவரிடம் தோற்றுவித்து விட்டன, கல்கி நேயர்களின் கேள்விகள்! கல்கி வாசகர்கள் சார்பில் கல்கி விநாயகர் உருவச்சிலையும் கல்கி தீபாவளி மலரும் கல்கி ஆசிரியரால் பரிசளிக்கப் பட்டபோது படம் எடுத்தவர்: **உத்ரா**

கமல் பதில்கள் ஒவ்வொரு வாரமும் கல்கியில் பிரசுரமாகும்

வேறு ஒரு பெரிய மனிதர் இருக்கிறார் தம்பி! அவரிடம் நீ போக வேண்டும்.''

''யார் அவர்? எந்த நாட்டு அரசர்?'' என்றான் வர்மன்.

''இந்தப் பாரத நாட்டுக்கே அரசர்! பேரரசர்!'' என்றார் விட்டோபா.

''யார்! டில்லி பாதுஷாவைக் கூறுகிறீரா?'' என்றான் வர்மன்.

''இல்லை! அந்த டில்லி அரசருக்கும் மேம்பட்ட அரசர்! மா மன்னர்!''

''யார் கூறுங்கள், ஐயா!''

''திருப்பதிப் பெருமாள் வெங்கடேசுவரர் இருக்கிறாரே அவரே தான்!''

''என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் வர்மன்.

''வெங்கடாசலபதிக் கடவுளா?''

''ஆமாம்! அவரே தான்!''

வர்மனுக்குச் சிரிப்பு வந்தது. விட்டோபா கூறியதில் பல விஷயங்கள் அவனுக்கு அவர் மீது சந்தேகத்தைத் தந்தது. அவருக்குச் சித்தப் பிரமையாக இருக்குமோ என்று நினைத்தான். இந்தக் கடைசி வார்த்தைகள் அந்த நினைப்பைப் பூரணமாக ஊர்ஜிதம் செய்தன.

''கடவுளிடம் போய்க் கேட்க வேண்டுமா!'' என்றான் வர்மன், சற்று இளக்காரமாக.

''ஆமாம்! அவர்தான் பெரும் தனவந்தர். அவருக்கு வருடாவருடம் வரும் பணத்தில் ஒரு யுத்தம் அல்ல! பல யுத்தங்கள் நடத்தலாம்!''

உடன் வர்மன் பாதி சிரித்துக்கொண்டே ''சரி, கடிதம் எழுதிக் கொடுங்கள். அவரிடமே போய்க் கேட்கிறேன்'' என்றான்.

''அப்படிச் சொல் தம்பி! நீதான் வீரகுலசேகரனுக்குப் பிள்ளையாக இருக்கத் தகுதி!''

அமெரிக்காவில் விவாகரத்து வழக்கொன்றில் தீர்ப்புக் கூறிய நீதிபதி ஒரு புது நியதியை ஏற்படுத்தியிருக்கிறார். அதன்படி கணவன் குளிக்கச் சென்றிருக்கும் போது, மனைவி அவனுடைய சட்டைப் பையை ஆராய்வது சட்டப்படியும், நீதிப்படியும் குற்றமல்ல!

—திருச்செங்கோடு ப. கந்தசாமி.



என்று கூறி, தமது துணிப் பைக்குள் கையைச் செலுத்தி ஒரு துணி உறை போட்ட கடிதத்தை எடுத்து அவன் கையில் விநயமாகக் கொடுத்தார்.

அதை வாங்கிய வர்மன், ''இதென்ன! மகா ராஜ ராஜஸ்ரீ

ஜமீந்தார் சமூகம்

பொம்மராசபாளையம்

என்று எழுதியிருக்கிறதே!'' என்றான்.

சிரித்தார் விட்டோபா. ''தம்பி! அவர் தான் வெங்கடாசலபதியின் பிரதிநிதி! திருமலை வெங்கடாசலபதியின் வரும்படிகளை நிர்வாகம் பண்ணுகிறவர். அவருக்குத் தான் எழுதியிருக்கிறேன்'' என்றார் விட்டோபா.

''சரி ஐயா! நீங்கள் எழுதினால் அவர் கொடுப்பாரா?'' என்றான் வர்மன்.

விட்டோபா நகைத்துக் கொண்டே, ''நான் சாதாரண வியாபாரி! நான் எழுதினால் கொடுப்பாரா? அதனால் ஒரு பெரிய பிரமுகரிடமிருந்து கடிதத்தை வாங்கி இதில் வைத்திருக்கிறேன். இந்தக் கடிதத்தைக் காட்டினால் நிச்சயம் கொடுப்பார். வழித்துணைக்கு ஆட்களையும் அனுப்புவார். இப்போது நான் உன்னை ஐந்து பேரோடு அனுப்புகிறேன். ஜமீந்தாருக்குச் சில பரிசில்களையும் அனுப்புகிறேன்! வா இப்படி!'' என்றார் விட்டோபா.

வர்மன் அவர் அருகில் போனான். விட்டோபாவும் எழுந்து பரிசில்களை வரிசையாகக் காண்பித்தார். ''கவனித்துக்கொள்.

ஒரு பெட்டி கற்கண்டு;

ஆறு பன்னீர் சீசா.

ஒரு முத்துப் பதக்கம்.

ஒரு இரட்டைகுண்டு ஓடுகிற துப்பாக்கி.

(Double Barrelled Gun)

ஒரு பெண்.

'பெண்' என்று சொல்லிச் சிந்துவைக் காட்டியதும் வர்மன் நிமிர்ந்தான்.

அந்தப் பெண் உணர்ச்சி இல்லாத பார்வை ஒன்று பார்த்தாள். வேதனையாக இருந்தது.

விட்டோபாவைப் பார்த்துத் திரும்பி, ''ஐயா! பெண்ணைப் பரிசிலாகக் கொடுப்பார்களா?'' என்றான் அருவருப்புடன்.

''அதில் என்ன தப்பு தம்பி? நாட்டு வழக்கம் ஆயிற்றே! 'திருமணவெள்ளாட்டி' என்று கேள்விப்பட்டதில்லையோ! கல்யாணப் பெண்ணுக்குத் தாதிகளையும் சீதனமாக அனுப்புவார்களே! இவளை ஜமீந்தார் அந்தப்புரத்துப் பணிக்காக அனுப்புகிறோம். அதில் தவறு ஒன்றும் இல்லையே!'' என்றார், அவர்.

வர்மன் குனிந்தவாறு நடந்து மறுபுறம் வந்தான்.

''ஐயா!'' என்றான் கண் கலங்க. ''நான் இந்தக் காரியம் செய்யப் போவதில்லை. என்னைப் பொறுத்தருளுங்கள்'' என்றான்.

விட்டோபா சடக்கெனத் திரும்பினார்.

அவருக்கு அவ்வளவு கோபம் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.



நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.





GLL-6808 R

2 நிற டப்பாக்களில் கிடைக்கிறது. 'நீலம்', 'சந்தனம்'

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ





அப்போலோவில் அறை எண் 306

பரபரப்பாய், செய்திகளில் அடிபடும் அப்போலோ மருத்துவமனை. செக்யூரிட்டி படு டைட்.

ரிசப்ஷனைத் தாண்டிய போது, ''யார்? எங்கே போறீங்க? யாரைப் பார்க்கணும்?'' என்று என்னைக் கேட்டார் ஒருசெக்யூரிட்டி. ''என் சகோதரன் இங்கே இருக்கிறான். ஆபரேஷன் முடிந்த அவனைப் பார்க்கப் போகிறேன்'' என்று பொய் சொல்ல, மேலே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப் பட்டேன்.

லிப்டில் போகும்போது, கூடவே தமிழக அமைச்சர்கள் ஐந்து பேர் வந்தனர். லிப்டை விட்டு வெளியே வந்ததும், மீண்டும் அதே கேள்விகள். அதே பொய். (எண்ணிப் பார்த்ததில், அப்போலோவில் நுழைந்தது முதல் வெளியே வருகிற வரை சுமார் முப்பது தடவை ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.)

இதற்கு மேலும் உங்களை டபாய்க்க விரும்பவில்லை. நான் போனது ஜேம்ஸ் பாண்ட் வேலை செய்து எம். ஜி. ஆரைப் பார்த்து விட அல்ல!

பிறகு யாரை...?

மூன்றாவது மாடி.

அறை எண் 306.

அங்கேதான் இருக்கிறார் டேபிள் டென்னிஸ் வீரர் **சந்திரசேகர்**. உடம்பு ரொம்ப பலஹீனமாய் இருக்கிறது. அக்டோபர் 18-ம் தேதி வரை இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் இருந்தார். தொடர்ந்து சில நிமிடங்கள்கூட பேச முடியாத நிலை.

மூன்று தடவை தேசிய சாம்பியனான சந்திரசேகருக்குக் கடந்த சில மாதங்களாகவே, இடது கால் முட்டியில் பிரச்சினை. கடுமையான வலி. செப்டம்பர் 14-ம்தேதி அப்போலோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார். மருத்துவ நிபுணர்கள் பரிசோதித்து முட்டியில் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்றனர்.

ஆபரேஷன் ஆபத்தில்லாததுதான். வெற்றிகரமாய் முடிந்தது. ஆனாலும் ஆபரேஷனுக்குப் பின் திடீரென்று நிலைமை தலைகீழாகி விட்டது. சிறிது நேரத்திலேயே உடல் நீல நிறமாகி, நாடி குறைந்து விட்டது. போஸ்ட் ஆபரேடிவ் ஷாக் என் பார்களே, இதுதானோ? டாக்டர்கள் உயிரைக் காப்பாற்ற ரொம்பக் கஷ்டப்பட வேண்டியதாகி விட்டது.

ஆபரேஷன் முடிந்து நாலு நாட்கள் கோமாவில் இருந்தார் சந்திரசேகர். தொடர்ந்து செயற்கை சுவாசம், போன்ற பலவித முயற்சிகள். ஆபத்து நீங்கி விட்டது இப்போது. ஆனாலும், தானே கிளாஸை எடுத்து, தண்ணீர் கூடக் குடிக்க முடியாதபடி உடம்பு பலஹீனமாய் இருக்கிறது.

இப்போது இன்டென்ஸிவ் கேர் யூனிட்டிலிருந்து வெளியே வந்து விட்டாலும், நவம்பர் இறுதி வரை ஆஸ்பத்திரியில்தான் இருக்க வேண்டுமாம்.

கோமா நிலையிலிருந்து மீண்டு, நினைவு வந்ததும், முதலில் சந்திரா ''டிசம்பரில் நடக்க இருக்கும் நேஷனல் சாம்ப்பியன் ஷிப்பில் பங்கேற்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள்!'' என்றாராம். ஆனாலும் டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்? ''சந்திரசேகர் பூரண குணம் அடைய இன்னும் சில காலம் ஆகும். அது வரை அவர் எதைப் பற்றியும் உணர்ச்சி வசப் படக் கூடாது – தன் உடல்நிலை பற்றியும் சரி, தன் டே. டென்னிஸ் எதிர்காலம் பற்றியும் சரி!''

''எப்படியானாலும் என் மகன் உயிரைக் காப்பாற்றிய டாக்டர்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை எனக்கு'' என்று உணர்ச்சி பொங்கச் சொன்னார் சந்திரசேகரின் அம்மா திருமதி வேணு கோபால். ''இறைவன் அருளால் விரைவில் பூரணகுணமடைந்து, டே. டே. மட்டை யெடுத்து என் மகன் ஆடுகிற நாளை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார். அந்தத் தாயின் ஆசை விரைவில் நிறைவேறட்டும் என்று நினைத்தபடியே லிஃப்டை நோக்கி நடந்தேன்.

—**எஸ். சந்திரமௌலி**


ஹார்லிக்ஸ் ஃபாமிலி காண்டெஸ்டில்
வெற்றி பெற்றவர்களே
எமது பாராட்டுகள்!
குறிப்பாக, இந்த போட்டி இத்தனை
சிறப்பாக வெற்றியடைய உதவின
உங்கள் ஒவ்வொருத்தருக்கும்
மிக்க நன்றி!
முதல் பரிசு
அம்பாசடர் மார்க் IV
காரை பெற்ற அதிர்ஷ்டசாலி திருமதி கே.
அலமேலு, பிரின்ஸிபால், பி.எஸ். செகண்டரி
அவின்யூ, MRC நகர், சென்னை
600028.
பாராட்டுகள்!
இந்த நல்வாய்ப்பு
உங்களுக்கு நெடுந்தூரம்
நீடித்து நிறைபெற வாழ்த்துகிறோம்.
இரண்டாவது பரிசுகள்
அதிர்ஷ்டம் 5 பெயர்களின்
மீது ஒளிவீசுகிறது! பளபளக்கும்
தங்கசெட்டை அவர்களில்
ஒவ்வொருத்தரும்
அடைந்தார்கள்.
திரு. ஏ. ஜகதீஷ்
அரசு சிமெண்ட் ஸ்டாக்கிஸ்டு
1/23, மெயின் ரோடு
அரசலூர்-638101 பெரியார்
மாவட்டம்
திரு. எஸ். பாலசுப்ரமண்யம்
ஸ்ரீ சுப்ரமண்ய விலாஸ்
மார்க்கெட் ஸ்ட்ரீட்
ஸத்ய மங்கலம்-638401
செல்வி. வி. ரேவதி
C/o கார்த்திகேயன்
26, II கிராஸ் ரோடு
டி.வி.கே. நகர், (திரு விக)
புது நகர், முதலியார்பேட்டை
பாண்டிச்சேரி-4
திருமதி தமினி ராய்
C/o டாக். ஆர். எஸ். வி. ராய்
ஒயில்ட் லைஃப் ரிஸர்ச் சென்டர்
மேட்டுப்பாளையம்-641301
கே. ஏ. அபுதுல் அஸீஸ்
பக்ரி தாக்கா போஸ்ட்
ஜோலார்பேட்டை 635853
வட ஆற்காடு மாவட்டம்.
மூன்றாவது பரிசுகள்
200 அருமையான
ஃபிலிப்ஸ் 'டூ-இன்-ஒன்'
பரிசாக வெற்றியடைந்த
அதிர்ஷ்டசாலிகள்
ஒவ்வொருத்தருக்கும் இந்த
நற்செய்தியை தபால்மூலமாக
தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
HMM-8466-F

நெருப்பு மலர்

16

எதிர்ப்பக்கமிருந்து வந்த குரலுக்கு மிகப் பணிவாகவும், பவ்வியமாகவும் பதில் சொன்னான் அர்ஜுன். "எஸ் ஸார். ஓ. கே. சார்... ஐ வில் லுக் ஆஃப்டர் இட் சார்... அப்கோர்ஸ் இட் ஈஸ் நெஸஸரி சார்... ஓ. கே... ஐ வில் பி தேர் ஸார்... பை..."

குரலும், முகமும் மிகத் தீவிரமாக மாற டெலிபோனின் தொடர்பைத் துண்டித்து விட்டு வந்து சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் மௌனமாக இருந்தான். அவனாகப் பேசுவான் என்று எதிர்பார்த்து பாஸ்கரப் பாவும், கிருத்திகாவும் அவன் முகத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர். சில நிமிடங்களுக்கு அப்புறமும் அவன் வாய் திறக்காமற் போகவே கிருத்திகா அருகில் போய்க் கேட்டாள்.

"என்ன ஆயிற்று அர்ஜுன்... யார் போன் பண்ணியது...?"

"ம்..." என்று நிமிர்ந்து அவளைப் பார்த்தவன், "ஐ'யாம் ஸாரி கீர்த்தி. நீ என்னை மன்னித்து விட வேண்டும்..."

"எதற்காகத் திடீரென்று மன்னிப்பெல்லாம் கேட்கிறீர்கள், அர்ஜுன். டெலிபோனில் யார் பேசினது...?"

"கர்னல் மல்ஹோத்ரா பேசினார். இன்றிரவே நாங்கள் பஞ்சாப் புறப்படுகிறோம். பிரதம மந்திரியின் உத்தரவு கிடைத்து விட்டது. அதனால் உடனடியாக நான் ஹெட் குவார்ட்டர்ஸுக்குப் போயாக வேண்டும்..."

அதைக் கேட்டுக் கிருத்திகாவின் முகம் வாடிற்று. மனசு கலங்கிப் போயிற்று. அவன் தன்னுடன் சென்னை வரப்போகிறான் என்பதில் சற்று நிம்மதியாக இருந்தாள். அம்மாவிற்கு அறிமுகப்படுத்த நினைத்தாள். தங்களின் அன்பையும், உறவையும் தெரிவிக்க முடிவு செய்திருந்தாள். ஆனால் இப்போது அர்ஜுன் தன்னுடன் வரப் போவதில்லை என்கிற செய்தி அவளை அதிகம் சங்கடப் படுத்திற்று. மெல்ல நிமிர்ந்து பார்த்தவள்,

"ஏன் அர்ஜுன், இன்றிரவு புறப்படுவதானால் இப்போது என்னுடன் வரமாட்டீர்கள் இல்லையா...?"

'வரமாட்டேன்' என்று அவள் முகத்தைப் பார்க்கிற சக்தியற்றுத் தலையாட்டினான்.

"ப்ளீஸ் அர்ஜுன். என்னைச் சென்னையில் விட்டுவிட்டு வந்து நீங்கள் புறப்படக் கூடாதா...? எனக்காக இந்தச் சின்ன மாற்றத்தை, உதவியைச் செய்யக் கூடாதா?"..

"இல்லை கிருத்திகா. தயவு செய்து நீ என்னைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு ராணுவ வீரனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் இப்படித்தான். எந்த நேரமும் தேசத்துக்காக எது செய்யவும், சொந்த நலன், சந்தோஷம் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்..."

"நான் அதற்கெல்லாம் தயாராகத்தான் இருக்கிறேன் அர்ஜுன். ஆனால் சென்னை வரை நீங்கள் கூட வந்தால் மனசு நிம்மதியாக இருக்கும்..."

"நானும் அப்படி நினைத்துத்தான் ஏற்பாடு பண்ணினேன். உன்னுடன் வந்து உன்னை விட்டுவிட்டுத் திரும்ப நினைத்தேன். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தப் பஞ்சாப் நிலைமை எதிர்பார்க்காதது. தேசப் பிரிவினை அனுமதிக்க முடியாதது. உள்நாட்டுக் கலவரம். அதுவும் இனக்கலவரம் அவசியம் ஒடுக்கப்பட வேண்டியது. நம் அதிர்ஷ்டம். வீரமும் தீரமும் நிறைந்த ஒரு பிரதமர் நமக்குக் கிடைத்திருக்கிறார். அவருக்குக் கைகொடுக்க வேண்டியது நம் கடமை. அதுவும் ராணுவத்தினராகிய எங்களின் ஒரே முக்கிய கடமை. இந்த நிலைமையில் நான் உன்னை விட்டுவிட்டு வந்து டியூட்டியில் சேருகிறேன் என்றால், அது சுய நலமாகாதா?... அப்படிக் கேட்கவே நான் வெட்கப்படுகிறேன் கிருத்திகா. தயவு செய்து நீ என்னைப் புரிந்து கொள்ளவேண்டும். உன் மனப் போராட்டங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். உன்னுடன் வர நான் மிகமிக ஆசைப்படுகிறேன். ஆனால் இயலாத நிலைமையில் இருக்கிறேன்...

"உனக்குத் துணையாக ராம்சிங்கை அனுப்புகிறேன் கிருத்திகா. இப்போதே என் டிக்கெட்டை மாற்றி ராம்சிங் பெயரில் எடுக்கிறேன். உன்னைக் கொண்டு சேர்த்தபின் அடுத்த விமானத்திலேயே அவன் திரும்பி வர வேண்டும். நான் விமான நிலையம் வரை வந்து உன்னை வழியனுப்பி விட்டுத் திரும்புகிறேன். என்ன கிருத்திகா...?"

அவள் வேறு வழியின்றி மௌனமாய்த் தலையாட்ட அர்ஜுன் பாஸ்கரப்பாவைப் பார்த்தான்.

இந்துமதி

''என்னப்பா சொல்கிறீர்கள். ராம் சிங்கை அனுப்பட்டுமா...?''

''என்னைக் கேட்டால் கிருத்திகாவே இப்போது போக வேண்டாம் என்று தான் சொல்வேன்...''

''இல்லேப்பா. கொஞ்ச நாளுக்கு அவள் இங்கே இல்லாமல் இருப்பது தான் நல்லது. நானில்லாத போது. அம்மாவின் துணையோடு அவள் இருக்கலாம் இல்லையா?''

பாஸ்கரப்பா மெதுவாகச் சிரித்தார்.

''சரியப்பா... இந்த அப்பாவின் துணை வேண்டாமென்று உதறி விட்டுப் போவதானால் நான் என்ன செய்ய முடியும்?''

''நீங்கள் தப்பாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் அப்பா. இது உங்களை உதறிவிட்டுப் போவதாகாது. சில உண்மைகளை உங்களிடம் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். கிருத்திகாவிற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு தேவை. அதுவும் டில்லியை விட்டு வேறு எங்காவது அவள் இருப்பது நல்லது. அதனால் தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். தயவு செய்து இதைத் தவறாக எடுத்துக் கொள்ளாமல் நீங்கள் அனுமதிக்க வேண்டும். நேரமாகி விட்டது அப்பா. கிருத்திகாவின் ஹாஸ்டலுக்குப் போய் மீதி சாமான்களை எடுத்துக்கொண்டு விமான நிலையத்திற்குப் போய் விமானத்தில் ஏற்றி விட்ட பின்னர் நான் திரும்ப வேண்டும். வீட்டிற்கு வந்து அதன் பின்னர் புறப்பட்டு டியூட்டியில் சேர்ந்து கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியாதது இல்லை. அதனால் சீக்கிரம் எங்களுக்கு உத்தரவு கொடுத்தால் நாங்கள் கிளம்ப வசதியாக இருக்கும்...''

''ஓ. கே. மைபாய்... யூ புரொஸீட்... கிருத்திகாவும் போய் நீயும் இல்லாமல் வீடு வெறிச்சென்று இருக்கப் போகிற வருத்தத்தில் தான் நான் அப்படிக் கேட்டேனே தவிர வேறு எதற்கும் இல்லை. ராம்சிங் எங்கள் மூன்று பேருக்கும் சாப்பிட ஏற்பாடு பண்ணி விட்டு நீ கிளம்பு. இந்தச் சாப்பாட்டை மூன்று பேரும் உட்கார்ந்து ஒன்றாகச் சாப்பிடலாம். என்ன அர்ஜுன்...?''

''சரிப்பா...''

சாப்பாடு மிக அமைதியாக நடந்தது. அவரவர் மனநிலையில் யாரும் பேசுகிற நிலையில் இல்லை. வெளியில் சொல்ல இயலாத ஒரு வேதனையால் உள்ளுக்குள்ளேயே



மூன்று பேரும் தவித்துக் கொண்டிருந்தனர். அதுவும் கிருத்திகாவிற்கு அந்த வேதனை இன்னும் அதிகமாக இருந்தது. அடிவயிற்றிலிருந்து எதுவோ பந்தாகக் கிளம்பி நெஞ்சை அடைத்தது. தனியாக உட்கார்ந்து அழ வேண்டுமென்று தோன்றிற்று. ஆனால் அழ முடியாது. அப்படி அழுவதை அர்ஜுன் ஏற்றுக் கொள்ள மாட்டான். தன்னைக் கோழையாக நினைப்பான். மன வலிமையற்றவள் என்று எண்ணிக் கொள்வான். திடமும், உறுதியும் இல்லாதவள் என்கிற முடிவில் அவனது நினைவில் தாழ்ந்து போக நேரிடும் என்கிற பயத்தில் அப்படித் தாழ விருப்பப்படாததால் அவள் அவனுக்குத் தெரியாமல் கீழ் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

சாப்பிட்டு முடித்ததும் அர்ஜுன் கிளம்பிப் போய்க் கிருத்திகாவின் சாமான்களை எடுத்துக் கொண்டு ராம்சிங்கின் டிக்கெட்டை வாங்கிக் கொண்டு வந்தான். இரண்டு மூன்று முறை ஹெட்குவார்ட்டர்ஸுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேசிவிட்டுக் கிருத்திகாவிடம் வந்தான்.

''என்ன கிருத்திகா புறப்படலாமா?'' என்ற போது அவள் அவனிடம் தனியாக விடைபெற நினைத்தாள். ஒருதரம் இறுக அணைத்து முத்தமிட்டு மார்பில் முகத்தைப் புதைத்துக் கொள்ள ஆசைப்பட்டாள். ஆனால் எதிரில் பாஸ்கரப்பா இருக்கவே வெறுமனே புறப்படலாம் என்று தலையாட்ட அவளைப் புரிந்து கொண்ட பாஸ்கரப்பா, ''இதோ ஒரு நிமிடம் அர்ஜுன். நான் ஒரு டெலிப்போன் பண்ணிவிட்டு வருகிறேன்...'' என்று வெளியில் போக—

அர்ஜுன் அப்பாவின் இங்கிதத்தைப் பற்றிப் பெருமையாக நினைத்தான். கிருத்திகாவின் அருகில் போய் அவள் தலையை வருடி, முகத்தை உயர்த்தி உதட்டில் மென்மையாய் முத்தமிட்டுச் சொன்னான்:

''அப்பா நிஜமாக டெலிபோன் பண்ணத்தான் போயிருக்கிறார் என்று நினைக்கிறாயா கீர்த்தி...?''

''பின்னே...?''

''நம்மைத் தனியாக விட்டுப் போக அப்படிச் சொல்லியிருக்கிறார்...''

''ஓ... ஹி ஈஸ் ரியலி எ கிரேட் பர்ஸன் அர்ஜுன்...''

''என் அப்பா இல்லையா...?'' என்றவன் அவளை இன்னமும் ஒரு வேகத்தோடு இறுக அணைத்துச் சொன்னான்: ''நான் திரும்பி வருகிற வரை சென்னையை விட்டு எங்கும் போகாதே கிருத்திகா. ஜாக்கிரதையாக இரு. அம்மாவிடம் எதையும் கேட்காதே. இப்போது நீ இன்னும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். அம்மாவிடம் ஒன்றும் தெரியாத மாதிரியே இருக்க வேண்டும். அவளிடம் எதையாவது கேட்டு மனஸ்தாபம் ஏற்பட்டால் பின் உனக்குத் துணையோ ஆறுதலோ இருக்காது. என்ன...?''

கிருத்திகா சரி என்று தலையாட்டி ''எப்போது வருவீர்கள் அர்ஜுன்...?'' என்று கேட்டதும் அவன் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்.

''எப்படிச் சொல்ல முடியும் கிருத்திகா.?''

''இது யுத்தமில்லை. ஆனாலும் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள் அர்ஜுன். நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். இந்த உடம்பு, உயிர் எல்லாம் எனக்குச் சொந்தமானது என்பது நினைவிருக்கட்டும்...''

''ஓ.கே. டியர்... புறப்படலாமா... நேரமாகிறது கீர்த்திம்மா...''

வாசல் வரை வந்து பாஸ்கரப்பா கையாட்டி விடை கொடுக்கக் கார் கிளம்பியது. இஷன் வண்டியோட்ட விமான நிலையம் வரை யாரும் பேசவில்லை. அவளது பெட்டியைக் கொடுத்து போர்டிங் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்த அர்ஜுன்,

''ஒரு கப் காப்பி சாப்பிடலாமா கீர்த்தி...?'' என்று கேட்டான்.

அவள் தலையசைக்க, காப்பி கௌண்டருக்குப் போய் இரண்டு காப்பி வாங்கிக் கொண்டு வந்து குடிக்கிற போது மீண்டும் சொன்னான்:

''ஜாக்கிரதையாக இரு கீர்த்தி. எக்காரணம் கொண்டும் சென்னையை விட்டு அசையாதே... என்ன...?''

''சரி...''

''தைரியமாக இரு. நான் வெகு சீக்கிரம் வந்து விடுவேன்...''

''சரி...''

வருத்தம்

உடலை வருத்துக
உடற்பயிற்சி மூலம்
நலம் பெருகும்

கல்லை வருத்துக
உளியின் மூலம்
சிலை உருவாகும்

காய் கறிகளை வருத்துக
சமையல் மூலம்
சுவையுணவாகும்

இவற்றை நினைத்து
பேனாவை எடுத்து
காகிதத்தை வருத்தினான்
கவிதை வருமென...

பாவம்—
படித்தவர்
வருந்தினர்!

— அமுதபாரதி

''டெலிபோன் பண்ணி அப்பாவிடம் பேசு கீர்த்தி. அது அவருக்கு சந்தோஷமாக இருக்கும்...''

''சரி...''

''என்ன இப்படி ஒரு வார்த்தை பதிலாகச் சொல்கிறாய் கீர்த்தி...? கொஞ்சம் வாயைத் திறந்துதான் பேசேன்...''

''முடியவில்லையே அர்ஜுன். பேச்சுவர மாட்டேன் என்கிறதே... வாயைத் திறந்தால் அழுகை தான் வருகிறது. உங்களை விட்டுப் போக முடியலை அர்ஜுன். எனக்குள் ஏதுவோ சங்கடப்படுத்துகிறது.''

''சீ... பைத்தியம்'' என்று அந்தக் கூட்டத்திற்கிடையிலும் அவளை அணைத்துச் சமாதானப்படுத்தினான் அவன். கன்னத்தில் விழக் காத்து நின்ற கண்ணீரைத் துடைத்தான்.

''டோண்ட் பீ ஸில்லி கிருத்திகா. இந்த முகத்தோடு உன்னை வழியனுப்ப என்னால் முடியாது. அப்புறம் இந்த முகமே வந்து வந்து கஷ்டபபடுத்தும். எங்கே சிரி பார்க்கலாம். சிரித்துக் கொண்டே சந்தோஷமாக விடைகொடு...''

அவள் மெலிதாகப் புன்னகை செய்யவும், அர்ஜுனின் முகத்திலும் சிரிப்பு அரும்பியது. ஸெக்யூரிட்டி செக் அப்பிற்காக மைக் ஒலிக்க அர்ஜுன் அவளை அணைத்து உச்சியில் முத்தமிட்டு ராம்சிங்கை அழைத்து,

''ஜாக்கிரதை ராம்சிங்! விட்டு விட்டுக் காலை முதல் விமானத்தில் கிளம்பி விடு. நீ வருகிற போது நான் இருக்க மாட்டேன். அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்...'' என்றுசொல்ல ''அச்சா சாஹிப்... வெற்றிகரமாகப்போய் வாருங்கள்...'' என்று கூறி ராம்சிங் முன்னால் போக கிருத்திகா திரும்பித் திரும்பிப் பார்த்து அர்ஜுனுக்குக் கையசைத்துக்கொண்டே மெதுவாக உள்ளே போனான்...

(தொடரும்)

அருள்வாக்கு

'டிப்ளமஸி' என்பதற்காக ராஜாங்கத்தார் அநேக உண்மைகளை மறைக்கும்படியாகவும், மாற்றிச் சொல்லும்படியாகவும் ஏற்படுவதுண்டு. இப்படிச் செய்யாவிட்டால் தேசத்துக்கு ஹானி உண்டாகும். அல்லது சட்டத்தை நடத்துவதற்கு அவசியமான சர்க்கார் என்ற அமைப்பிலேயே விரிசல் ஏற்பட்டுவிடும். காந்தி மாதிரியானவர்கள், இதெல்லாம் கூடத் தப்பு என்று சொன்னாலும் அப்புறம் நமக்கு ஸ்வதந்திரம் வந்த பிற்பாடு, சில விஷயங்களிலாவது 'காந்தியன் ஸத்தியம்' ஒப்புக் கொள்ளாத 'டிப்ளமஸி'யை அநுசரிக்கும்படிதான் ஆகிறது. மதபுருஷர்களுக்கெல்லாம் மேலே தான் இப்போதும் காந்திஜியைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்



செய்கிறது அவர் கொள்கைக்கு வேறாய் இருக்கிறது என்னும் போது 'ஹிபாக்ரிஸி' என்ற தோஷம் ஏற்படுகிறது. டிப்ளமஸியின் ரொம்பவும் கீழ் லெவல்களுக்கு (War time) உலக யுத்தத்தின் போது போன அநேக சர்வதேச ராஜாங்கங்கள் அவர்களுடைய மதங்கள் சொன்ன ஸத்யக் கொள்கையை மீறியே போயிருக்கின்றன. நம் தேசத்திலோ 'அர்த்த சாஸ்திரம்' என்றுள்ள ராஜ நீதியில் முதலிலேயே ராஜதந்திரம் என்பதாக அவசியமான ஸந்தர்ப்பத்தில் இப்போது சொல்கிற 'டிப்ளமஸி'யை அநுமதித்திருப்பதால், நம்முடைய ராஜாக்களுக்கு ஸந்தர்ப்ப நெரிசலில் ஸத்யத்தை ஒளிக்க வேண்டியிருந்த போது சாஸ்திர விரோதமாகப் போகிறதோஷமோ, ஹிபாக்ரிஸி தோஷமோ ஏற்படவில்லை. இன்னின்ன சந்தர்ப்பத்தில் ஸத்யத்துக்கு விலக்குதரலாம் என்று வகைப்படுத்தி வரம்புகட்டி சாஸ்திரத்தில் வைத்து விட்டதாலேயே அவற்றில் மட்டுமே அப்படிச் செய்வது. மற்றவற்றில் பரம ஸத்யமாக நடந்து கொள்வது என்று நம் ராஜாக்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இப்படி விதிவிலக்காகச் சிலதைச் சொல்லாமல் விதிவிலக்கே கிடையாது என்று வைத்த தேசங்களிலோ, ஏதோ ஒன்றில் என்றில்லாமல், அநேக விஷயங்களில் ஸத்ய விரோதமாகப் போன ராஜாக்களும், ராஜாங்கங்களும், தோன்றுவதும் கிளர்ச்சி, புரட்சி என்று ஏற்படுவதுமாய் இருந்திருக்கிறது. ஹிஸ்டரியைப் பார்த்தால் தெரியும். ஆனால் இந்த அம்சத்தைக் கவனிக்காமலே அர்த்தசாஸ்திரம் பண்ணின சாணக்கியனைக் கபடி, தந்திரசாலி Unscrupulous என்று கூட விமர்சிப்பதைப் பார்க்கிறோம்.

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

இறைஞ்சிக் கேட்டவர்களையும் இரக்கமில்லாமல் விந்தித் தள்ளிவிட்டு 'அன்புடைமை' இல்லாத 'அதிகாரத் திருவள்ளுவர்' சென்னையை விட்டு மன்னைக்குக் கிளம்பிய போது மணி பார்த்தேன். டிஜிட்டல் '09—10' என்றது.

—பஸ் கிளம்புவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன் நடந்த ஒரு சுவையான சம்பவத்தையும் சொல்லிவிடுகிறேன்...

—பஸ்ஸில் ஏறி நான் ரிசர்வ் செய்து வைத்திருந்த எட்டாம் நம்பர் சீட்டைத் தேடிப் பிடித்தபோது சந்தோஷ மின்னலொன்று என் மனத்தில் பளிச்சிட்டது. மின்னலை உற்பத்தி செய்தவள் ஏழாம் நம்பர் சீட்டில் அமர்ந்திருந்த ஒரு 'பதினாறு வயதினிலே...' மஞ்சள் நிற உடலுக்கு மேட்சாக அதே நிறத்தில் பாவாடை—தாவணி, இத்யாதி இத்யாதிகள்! இந்தத் தேவதைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இரவில் பயணம் செய்யப் போகிறோம் என்ற நினைப்பே இனித்திட, —''எக்ஸ்க்யூஸ் மி மாடம்... என் சீட் நம்பர் எட்டு... கொஞ்சம் நகர்ந்துக்கறீங்களா?'' — என்று கேட்டுச் சில இன்ப இடிபாடுகளோடு எட்டாம் நம்பர் சீட்டை ஆக்கிரமித்தேன்.

—அவ்வளவுதான்! நெருப்புப் பட்டது போல் விதிர்த்திட்டு எழுந்தவள் சற்றே நகர்ந்து, எதிர் வரிசையில் அமர்ந்திருந்த இளம் தம்பதியரிடம் ஏதோ கிசுகிசுத்தாள். அவர்களுக்கு முன் சீட்டில் அமர்ந்திருந்த ஒரு வயதான பெரியவரும், இவளை ஒத்த இன்னொரு 16 வயதும் திரும்பி என்னை முறைக்க — ஆக அவள் தனியாக வரவில்லையென்பதை என் மரமண்டை, மூளை அப்போது தான் கண்டுபிடித்துச் சொன்னது!

—அந்த இவருக்குள்ளே உறவு முறையினை முக ஜாடையை வைத்து நானே யூகம் செய்தேன் — 'அந்த இளம் தம்பதியரில் ஆணுக்கு அந்தப் பெரியவர் அப்பாவாய் இருக்க வேண்டும்... மற்ற இளசுகள் இரண்டும் அவனது அழகு மனைவியின் தங்கையராயிருக்க வேண்டும்... நல்லவேளையாக ஏதும் சில்மிஷம் பண்ணவில்லை... இல்லாவிடில் ஒரு புதுமுதுகினை வாடகைக்கு எடுக்க வேண்டி வந்திருக்கும்!' அந்தப் பெரியவரும் இந்தப் 16 வயதும் இடம்மாறி அமர என் கிளுகிளுப்பெல்லாம் டாடா சொல்லிப் போனது.

முள்ளாக மாறும் இமைகள்

பட்டுக்கோட்டை ராஜா

சன்னல் வழியே மெல்லிதாய் வீசிய ஊதல் காற்றின் சில்லிப்பையும் மீறி அந்தப் பெரியவரின் உடல் அனலாய்க் கொதித்ததை அவரின் ஒரு ஸ்பரிசம் எனக்கு உணர்த்தியது. உடனே மனிதாபிமானம் என் உதடுகளை உசுப்பிவிட, ''என்ன பெரியவரே, உடம்புக்குச் சுகமில்லையா?'' என்று கேட்டேன்.

—''ஆமாந்தம்பி, 'இன்ஃப்ளுயன்ஸா' மாதிரியிருக்கு... ஒரு வாரமா சாயங்காலமானதும் என்னைப் படுக்கவைச்சி, உடம்பை முறிச்சுப் போடுது தம்பி!'' —

—''இப்படியிருக்கிறப்போ எதுக்காகய்யா ஊர்ப் பயணம் போகறீங்க?''

—எனது ஆறுதல் வார்த்தைகள் அவரது ஆற்றாமை நரம்புகளைச் சுண்டியிருக்கவேண்டும்.

—''நான் ஒரு செல்லாக்காசு தம்பி... வயசாயிட்டா வாழவே கூடாது... என்னோட தேவைகளைக் கவனிக்கக்க என் மனைவியிருந்தா... அந்தப் புண்ணியவதியோட எல்லாமே போய்டுச்சி... அவளோடேயே நானும் செத்திருக்கணும்... தற்கொலை பண்ணிக்கவும் பாழும் மனசு இடம்கொடுக்க மாட்டேங்குது!'' என்றவர் குரல் தழுதழுக்க நிறுத்தினார். சில நிமிடங்கள் இடைவெளிவிட்டுத் தொடர்ந்தார்...

—''நான் பெத்த ஒரே பிள்ளையும் பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு, என்னை உதாசீனப்படுத்தறான் தம்பி... ஒரு வாரமா டாக்டர்கிட்டே அழைச்சிக்கிட்டுப் போகச் சொல்லி எவ்வளவு கெஞ்சறேன் தெரியுமா... கேட்கிறதுக்கு எந்த நாதியுமில்லே!'' என்று பேசிக் கொண்டிருந்தவருக்குத் திடீரென்று புகைந்து புகைந்து இருமல் ஆரம்பித்தது.

—இருமலின் உச்சத்தில் பெரியவருக்கு வாந்தி வந்துவிட்டது. ''ப்புவாக்!'' என்று, நான் கொஞ்சமும் எதிர்பாராத வகையில் அவர் வாந்தியால் என் ஒரு பக்கத்தை நனைத்து விட்டார்!

—அருவருப்போடு எழுந்து — பெரியவரைக் கடந்து நான் நிற்பதைக் கண்டதும் முன் சீட்டிலிருந்த கண்டக்டர் எழுந்து வந்தார்—

''என்ன தம்பி...ஏன் நிற்கறீங்க...?''

—''இந்தப் பெரியவர் வாந்தி பண்ணிட்டாருங்க!''



—பெரியவர் தொடர்ந்து வாந்தி பண்ணித் தன் மேலேயும், அந்த இடத்தையும் நாசம் பண்ணிக் கொண்டிருந்தார்.

—''சண்டது சடையதைத் தின்னுட்டு வந்து ஏன்யா பெரியவரே எங்களைத் தொல்லை பண்றீங்க?'' என்று சலித்துக் கொண்ட கண்டக்டர், ''ஏங்க, இவரைச் சேர்ந்த டிக்கெட் யாராச்சும் இருக்கீங்களா?'' என்று குரல் கொடுத்தார்.

—இத்தனை ரகளையும் தெரியாத மாதிரி, ''என்ன கண்டக்டர்... அவர் எங்களைச் சேர்ந்த டிக்கெட்தான்... எதுக்குக் கேட்கறீங்க?'' என்று கேட்டான் அந்தப் படாடோபி. அப்போதும் கூட அவரை 'அப்பா' என்று அவன் வாய் உச்சரிக்கவில்லை!

—எனக்கு எரிச்சலாய் வந்தது —''ஏன்யா அவர் வாந்தி எடுக்கிறது உன் கண்ணுக்குத் தெரியல்லே... வானத்திலேர்ந்து இப்பத்தான் குதிச்சி வந்த மாதிரி கேட்கிறியே?''

''மிஸ்டர், உனக்கும் எனக்கும் பேச்சில்லே... மரியாதையாகப் பேசு!''

''மரியாதையா...?உனக்கா...?இதில் பாதிக்கப்பட்டவன் நான்... நான் பேசுவேன்... கண்டக்டர், உடனே எனக்கு வேற சீட் மாற்றிக் கொடுங்க... இந்த நாலு பேரில் யாராச்சும் ஒருத்தரை அந்தப் பெரியவருக்குப் பக்கத்தில் உட்காரச் சொல்லுங்க!''

—''சார், இந்தத் தம்பியோட கோரிக்கையும் நியாயமானதுதான்... உங்களில் யாராவது ஒருத்தர் சீட்டைக் காலி பண்ணிக் கொடுங்க!'' என்று கெஞ்சும் தொனியில் கேட்டார் அந்த அதிசயப் பிறவி கண்டக்டர்.

—''இத பாருங்க கண்டக்டர்... நாங்க ரிசர்வ் பண்ண சீட்லதான் உட்கார்ந்திருக்கோம்... அவரையே அந்தக் கிழத்துக்குப் பக்கத்தில் உட்காரச் சொல்லுங்க..!'' என்றான் அவன் அலட்சியமாய்.

போட்டிக்கதை 12




ஊட்டம்
அளியுங்கள் உங்கள்
தோற்ற நிறத்திற்கு,
மின்னிடும் உங்கள் மேனி
ரெயின்ட்ராப்
ஊட்டமளிக்கும் சோப்
Raindrop
Raindrop
Raindrop
Raindrop
ஆயில் ஆஃப் லைம்
ஆயில் ஆஃப் ஆல்மண்ட்ஸ்
டாடா தயாரிப்பு
Creative Unit-5976 Tam.

—இதற்கிடையில் மாமண்டூர் வர பஸ் நின்றது.

—எனக்குக் கோபம் எல்லை மீறியது — "யோவ், நீ அவரோட மகன்தானே... அவரோட ரத்தம்தானே உன் உடம்புலயும் ஓடுது... இப்படிப் பேசறதுக்கு உனக்கு வெட்கமாயில்லே... உன்னைப் போய் அவர் பிள்ளையாப் பெத்ததுக்கு... நானே அவர் பக்கத்தில் உட்கார்றேன்.. இந்த வாந்தியைத் துடைக்கிறதுக்கு ஒரு துண்டாச்சும் கொடு!" என்று கத்தினேன்.

"நான் எதுக்குத் துண்டு தரணும்?" என்று அவன் மறுதலிக்க, முக்கி முனகிய படிப் பெரியவர், "தம்பி, இந்த வேட்டியை யாவது துடைச்சுக்கங்க!" என்று ஏற்கெனவே வாந்தியில் நனைந்திருந்த தன் வேட்டி முனையை நீட்டினார்.

—எனக்கு என்னவோ போலானது. அவர் வார்த்தைகள் என் மனத்தைப் பிசைந்தன. அவருக்காக நான் இதுவரை பண்ணிய வாதம் கூடத் தவறோ என்று எனக்குத் தோன்றியது.

—"சரி வாங்க தம்பி... கீழே தண்ணி வாங்கித் தரேன், கழுவிடலாம்!" என்று கண்டக்டர் அழைக்கவும் அவரோடு மௌனமாய் இறங்கிப் போனேன்.

—ஹோட்டலிலிருந்து கண்டக்டரே தண்ணீர் வாங்கி வந்து என் மேல் பட்டிருந்த வாந்தியைக் கழுவ உதவினார். எனக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். சத்தியமாய் இவர் கண்டக்டர் வேலைக்குத் தகுதி யற்றவர்!

• • • •

மீண்டும் பஸ் கிளம்பியது.

—சீட் முழுக்க வாந்திப் பண்ணிப் பாதி மயக்கத்தில் கிடந்த பெரியவரைப் பார்த்ததும் கோபாதி பாதம் எனக்கு ஒரு முறை சிலிர்த்து அடங்கியது. சொந்தங்கள் அவரைச் சீண்டக் கூட இல்லை!

—உட்காருவதற்கே தகுதியற்ற நிலையில் நான் மீண்டும் கண்டக்டரிடம் போனேன்— "கண்டக்டர் சார், நான் ஒண்ணும் ஓசியில் 'ட்ராவல்' பண்ணலை... மத்தவங்களைமாதிரி நானும் காசு கொடுத்துத்தான் 'ட்ராவல்' பண்றேன்... நானும் உட்கார ஏதாவது வழி பண்ணுங்க!"

"கோபிச்சுக்காதீங்க தம்பி... என் சீட்டைத் தரலாம்னு ஏற்கெனவே அதில் ஒருத்தரை உட்கார வைச்சிட்டேன்.... அம்மாவைப் பறிகொடுத்த அந்த ஆளு எப்படியாவது நாளைக்கு ஊரில் இருந்தே ஆகணும்னு கெஞ்சினதாலே இரக்கப்பட்டு அவரை ஏற்ற வேண்டியதாய்டுச்சி... நானே நின்னுக்கிட்டுத்தான் வர்றேன்... பார்த்திருப்பீங்களே... உங்களுக்காக ஒண்ணே ஒண்ணுதான் செய்யலாம்.... அந்த ஆளுகிட்டே ஒரு 'டவல்' வாங்கித் தரேன். இந்த நடைபாதையிலேயே விரிச்சுப் போட்டுப் படுத்துடறீங்களா?"

—அவர் நிலையில் நானிருந்து யோசித்துப் பார்த்தபோது அவர் செயல் நியாயமாகப்



மழலைக் கலைஞர்கள்

போட்டி 29

உங்கள் குழந்தை வாய்ப்பாட்டு, வாத்திய இசை, நடனம் போன்ற கலையில் இன்று தேர்ச்சி பெற்றிருந்தாலும் கற்றுக் கொள்ள ஆரம்பித்த போது வயது என்னவாயினும் அத்தருணத்தில் மழலைக் கலைஞர் தான் அல்லவா? அந்நேரத்தில் குழந்தையின் சொல்லோ, செயலோ குபீர் சிரிப்பை ஏற்படுத்தியிருக்குமே? அல்லது உங்களை 'அடேயப்பா!' என்று ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்குமே! அதனைக் கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. குலுக்கலில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பும் போது குழந்தையின் புகைப்படத்தையும் இணைக்கலாம். ஆனால் பிரசுரத்துக்கு ஏற்கப் படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. உறையின் மீது "மழலைக் கலைஞர்" என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: **30.11.84**

இன்னும் பாக்கியுள்ள 24 பட்டுப் புடவைகளுள் நிச்சயமாக ஒன்றைப் பெறும் உறுதியோடு வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறவும்.


என் பெயர் : ....

விலாசம் : ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்


''தரத்தோடு விலையையும்
எம் மாதிரி நோட்டம்
பார்த்து வாங்குங்க,
கெட்டிக்காரி நீங்கதான்''



''நியூட்ரமுல் தான் என் கைராசி.''

''கண்ணை மூடிக்கிட்டு முடிவு பண்றவ நான் இல்லே. கண்முழிப்பா கவனிக்கறவளுக்குக் கிடைக்குது சகாய விலையிலே தரமான பண்டம்-- இதோ எனக்கு நியூட்ராமுல். ISI தரம் இருந்தாகணும், இருக்கா பார்ப்பேன். நியூட்ராமுல் ஒண்ணுக்குத் தானே அது இருக்கு. வேறெந்த கோக்கோ மால்ட் பானத்துக்கும் கிடையாதே. அதுவும், குடும்ப மனசுப்போல வாங்கக் குடுத்து வெச்சவ நான். எங்க வீட்டுலே கண்டிப்பா நியூட்ராமுல் தான் வேணும்''.

''விளம்பரக் கதைகள் எல்லாம் என் கண்ணுலே மண்ணைத் தூவும்படி விடமாட்டேன். எதையுமே நான் நேரிலே பார்த்துத்தான் வாங்குவேன்''.



நியூட்ராமுல்	ரூ. 14.70
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

செப் '84 நிலவரப்படி, 500 கி. டின்— கம்பெனிகளின் பேக்குகளுக்கான அங்கீகார உச்ச விலைகள், வரிகள் தனி.

daCunha/GCM/109/A/84/R/TM

பட்டது — ''சரி'' என்று ஒத்துக் கொண்டேன். இன்றிரவு தூக்கம் இப்படித்தானென்று ஆண்டவன் விதித்திருக்கிறான் போலும்!

—கண்டக்டர் அந்தப் படாடோபியிடம் சென்று துண்டு கேட்க — அவன் மறுத்துப் பேச — நமது குணக் குன்றும் கண்டக்டருக்கே கோபம் வந்து விட்டது!

—''இப்போ துண்டு தரப் போறியா என்னய்யா சொல்றே... இல்லாட்டி வண்டியை நிறுத்தி இங்கேயே இறக்கிவிட்டுவேன்... ஒரு பாசஞ்சர் எவ்வளவுதான்யா அட்ஜஸ்ட் பண்ணிக்குவான்!'' என்று ஏக வசனத்தில் விட்டதும் சத்தமேதுமின்றி அவன் மனைவி சூட்கேஸைத் திறந்து ஒரு துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

—அதை வாங்கி வந்து என்னிடம் கொடுத்த கண்டக்டர், ''என்னால் முடிஞ்சது இவ்வளவுதான் தம்பி!'' என்றதும் நான் நெகிழ்ந்தேன்.

—துண்டைக் கொடுத்த அவன் ஏதோ தன் பெண்ணைக் கொடுத்ததைப் போல் என்னையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் — அவனை இந்த வகையிலாவது பழி வாங்கு!' என்றது என் மனம். துண்டைப் பிரித்துப் பார்த்தேன், வெளிநாட்டு இறக்குமதி. வேண்டுமென்றே அதைக் கொண்டு என் கழுத்துப் பிடரியைத் துடைத்துக் கொண்டேன். அப்போது அவர்களின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே... அதை எழுதிட முடியாது!

—நடைபாதையில் துண்டை விரித்து — தெருவோரப் பிச்சைக்காரனைப் போல் — படுத்தேன்.

—அடுத்த சில நிமிடங்களில் மூட்டை மூட்டையாய் வந்த அசதி என் இமைகளில் ஏறி அழுந்த நன்றாகத் தூங்கிப்போனேன்!

• • • •

—போட்டுப் படுத்திருந்த துண்டினை யாரோ பிடுங்குவதைப் போன்ற பிரமை ஏற்பட்டதும் திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். அந்தப் படாடோபி நின்றிருந்தான் — ''கும்பகோணம் வந்திடுச்சி... துண்டைக் கொடு!'' என்றான் அமர்த்தலாய்.

—நான் கோபத்தின் விளிம்புக்குப் போனேன் — ''ஏன்யா, நீ படிச்சவன் தானே.. கொஞ்சம் கூட அறிவே கிடையாதா... தூங்கறப்போ திருட்டுப் பயலாட்டம் துண்டை உருவுறியே, என் சட்டை அழுக்காய்டாது...? எழுப்பிவிட்டா என்ன...? முதல்ல இறங்குய்யா கீழே... நா அப்புறமா துண்டைத் தூக்கிப் போடுறேன், பொறுக்கிக்க!'' என்று உச்ச ஸ்தாயியில் கத்தியதும் அவன் பயந்து போய்க் கீழே இறங்கினான்.

—எழுந்து நின்ற நான் அந்தப் பெரியவரைக் கண்களால் தேடினேன். அவரை பஸ் ஸ்டாண்டின் பழுதி படிந்த தரையில் அநாதையாய்க் கிடத்திவிட்டு, இந்த மேனு மினுக்கிகள் ஒதுங்கி நின்றிருந்தனர்.

—பஸ் கிளம்பும் வரை நான் துண்டைக் கொடுக்கவேயில்லை. ரொட்டித் துண்டுக்காக் ஏங்கும் நாயைப் போல் வைத்த கண் வாங்காமல் அவன் என்னையே பார்த்திருந்தான்.

—பஸ் கிளம்பிய நேரத்தில் வேண்டுமென்றே நான் சன்னல் வழியே துண்டை வீசியெறிந்தேன். அது பஸ் ஸ்டாண்டின் ஓரத்தில் பொது மக்கள் உபயம் செய்திருந்த மூத்திரச் சகதியில் சென்று விழுந்தது!

—தொடர்ந்து அந்த அதிசயமும் நிகழ்ந்தது. வாந்தியெடுத்த அப்பாவுக்குப் பக்கத்தில் அமர்வதற்கே அருவருத்த அவன், மூத்திரச் சகதியில் விழுந்த அந்தத் துண்டினைக் கொஞ்சமும் அருவருக்காமல் எடுத்துக் கொண்டு நடந்தான்!

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து இருவர் தப்பி ஓடி விட்டனர். சிறிது நேரம் கழித்து ஒருவன் மட்டும் திரும்பி வந்தான்.

''என்னோடு வந்தவன் திடீரென்று ஆற்றில் குதித்து விட்டான். நான் விடுவேனா? உடனே நீரில் பாய்ந்து அவனைக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டேன்'' என்றான்.

மகிழ்ச்சியடைந்த அதிகாரி, ''உனக்குப் பைத்தியம் தெளிந்து விட்டது. நாளை நீ வீட்டுக்குப் போகலாம்'' என்றார்.


''இதைக் கேட்டுக் கொண்டே இவர்களைத் தேடிச் சென்ற ஒருவன் அப்போது அங்கு திரும்பி வந்து சேர்ந்தான். பைத்தியக்காரனைப் பார்த்து, ''உன்னால் ஆற்றிலிருந்து காப்பாற்றப் பட்டவன் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டான்'' என்றான்.

''தற்கொலை செய்து கொண்டானென்று யார் சொன்னது? நானல்லவா ஈரம் காயட்டும் என்று மரத்தில் அவனைத் தொங்க விட்டேன்'' என்று விடை கிடைத்தது!

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



சூரிய நமஸ்காரம்



○ சூர்ய நமஸ்காரம்
முதல்நிலை

யோகாசனப் பயிற்சிக்கும் சூர்ய நமஸ்காரத்துக்கும் அடிப்படையிலேயே நிறைய வேறுபாடு உண்டு. 'சுகம் ஸ்திரம் ஆஸனம்' என்பது பதஞ்சலி யோக ஸூத்ரம்.

ஆசனப் பயிற்சி நிதானமாக உடல் களைப்படையாமல் செய்ய வேண்டியது. வியர்வையே உண்டாகாது. அப்படி உண்டாகவும் கூடாது. ஆனால் சூர்ய நமஸ்காரம் செய்யும் போது வியர்வை, களைப்பு எல்லாம் ஏற்படலாம்.

பாத ஹஸ்தாஸனம், புஜங்காஸனம் போன்ற, நான்கைந்து ஆசன நிலைகள் இதில் மாறி மாறி வந்தாலும், சூர்யநமஸ்காரத்தில் விரைவு அதிகம். படத்தில் உள்ளது போல் பன்னிரண்டு நிலைகளையும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் படிப்படியாகச் செய்ய அதிகப்பட்சம் இரண்டு நிமிடங்கள்போதும். சாதாரணமாக நல்ல பயிற்சிக்குப் பிறகு மூன்று முறை செய்தால் போதுமானது.

சூர்யநமஸ்காரம் என்பதை யோகாசனப் பயிற்சி என்று கணக்கிடவே கூடாது. ஒரு வகையான உடற்பயிற்சிதான் இது. ஆனாலும் ஆசனப் பயிற்சியின் பலனையும் இது உள்ளடக்கியது.


சூர்ய நமஸ்காரப் பயிற்சியை நல்ல ஆரோக்கியமான உடல்நிலை உள்ளவர்கள் மட்டுமே செய்ய வேண்டும். இரத்த அழுத்த நோய் உடையவர்கள், சமீபத்தில் எந்தவகையான சர்ஜரியையும் செய்து கொண்டவர்கள், கருவுற்ற பெண்கள், மாதவிலக்குக் காலங்களில் உள்ள பெண்கள்-இவர்கள் சூரிய நமஸ்காரத்தின் பக்கமே போகக் கூடாது.

கால்கள், முதுகெலும்புத் தொடர்; கழுத்துப் பகுதி, கைகள் – தலை என்று பல பகுதிகள் உறுதி பெறும். உடம்பின் மேல் பாகத்துக்குச் சீரான இரத்த ஓட்டம் ஏற்படும்.


சூர்ய நமஸ்காரம் செய்யத் தொடங்குவதற்கு முன்னால் ஒன்றிரண்டு நிமிடங்கள், உடல் உறுப்புக்களைத் தளர்த்துகிற (Loosening Exercises) பயிற்சிகளைச் செய்ய வேண்டும். கைகால்களை நீட்டி, மடக்கி, குனிந்து, நிமிர்ந்து, உட்கார்ந்து, எழுந்து என்று பழகுகிற போது சூர்ய நமஸ்காரப் பயிற்சிக்கு வேண்டிய உடல் உறுப்பு நெகிழ்வு கிடைத்து விடும். அதே போல் சூர்யநமஸ்காரம் செய்து முடித்த பின்னர் சில நிமிடங்கள் சவாஸனப் பயிற்சி அவசியம்.

பயிற்சிமுறை:

1. நேராக நிற்கவும், கால்கள் சேர்ந்து கைகள் கூப்பியபடி.. அப்படியே கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தி உடம்பைப் பின்னுக்கு வில்லாக வளைக்கவும். இந்நிலையில் மூச்சை நன்றாக உள்ளிழுக்க வேண்டும்.
2. உடம்பை முன்புறம் வளைத்து, முழங்கால்களில் முகம் பதியும் படி குனிந்து, உள்ளங்கைகளைப் பாதத்திற்குப் பக்கங்களில் தரையில் ஊன்றவும். இந்நிலையில் உள்ளிழுத்த மூச்சை முழுவதுமாய் வெளிவிட வேண்டும்.
3. வலது காலைப் பின்னுக்கு உதைத்து நீட்டி, இடது முழங்காலை முன்புறம் கொண்டு வந்து, நேரே பார்வையைச் செலுத்தி, மூச்சை உள்ளிழுக்கவும். கைகள் பாதத்தோடு ஒட்டியே இருக்க வேண்டும்.
4. இடது காலையும் பின்னுக்கு உதைத்து நீட்டவும். உள்ளங்கைகளைத் தரையில் ஊன்றி 30 டிகிரி கோணத்தில் உடம்பை வளைக்காமல் உயர்த்த வேண்டும். இப்போது மூச்சை நன்கு வெளியேற்றவும்.
5. முழங்காலை மடக்கி, தரையில் பதித்து, நெற்றியைத் தரையில் படும்படி



யோகாசன மகிமை



○ சூர்ய நமஸ்காரம் ஆறும் நிலை

வைக்கவும். இந்நிலையில் கால் கட்டை விரல்களும், உள்ளங்கையும் முன்பிருந்த நிலையிலேயே அசையாமல் இருக்க வேண்டும். உடம்பைப் பின்னுக்கு இழுக்கும் நிலையில் மூச்சை நன்கு இழுக்கவும். பிறகு நன்கு வெளி விடவும்.

6. கைகளையும், கட்டைவிரலையும் நகர்த்தாமல், மார்போடு முன்னால் வந்து, நமஸ்கார நிலைக்கு வரவும். நெற்றி மார்பு, உள்ளங்கைகள், முழங்கால்கள், முன் பாதங்கள் – எட்டு உறுப்புக்களும் தரையில் படியும். இதுதான் சாஷ்டாங்க நமஸ்கார நிலை. பிருஷ்ட பாகம் தரைக்கு மேலே உயர்ந்திருக்க வேண்டும். இயல்பான சுவாச நிலையில் இருக்க வேண்டும்.

7. மூச்சை உள்ளிழுத்து, தலையையும் உடம்பையும் உயர்த்தி, முதுகெலும்புத் தொடர் மேல் நோக்கி வளையும்படி, மூச்சை உள்ளிழுக்க வேண்டும். முழங்கால்கள் மட்டும் தரையை விட்டு உயர்ந்திருக்க வேண்டும்.

8. மூச்சை வெளிவிடவும். பிருஷ்ட பாகத்தை உயர்த்தி, தலையைக் கீழே தரைக்குக் கொண்டு வந்து, குதிகால்கள், உள்ளங்கைகள் நன்றாகத் தரையில் பதியும்படி உடம்பை வளைக்க வேண்டும்.

9. ஐந்தாவது நிலையே மீண்டும். மூச்சை உள்ளிழுத்து வெளிவிட வேண்டும்.

10. மூச்சை உள்ளிழுத்து, இடது காலை மட்டும் கைகளுக்கு நடுவில் கொண்டுவந்து, மூன்றாவது நிலையை அடையவும்.

11. வலது காலையும் முன்னுக்குக் கொண்டு வந்து கைகளுக்கு நடுவில் சேர்த்து வைத்துக் கொள்ளவும். மூச்சை வெளி விடவும். இரண்டாம் நிலையைப் போல் முழங்கால்களில் முகம் பதிக்கவும்.

12. மூச்சை உள்ளிழுத்தபடி நிமிர்ந்து நின்று கைகளை உடம்போடு சேர்த்துக் கொள்ளவும். இனி ஓய்வு கொள்ளலாம்.

பொதுவாக எந்தநிலையிலும் மூச்சை உள் நிறுத்தி அடக்கிக் கொள்வது தேவையில்லை.

விளக்கமளித்தவர் திரு வி. எஸ். இராம நாராயணன்

கட்டுரை: சுப்ர. பாலன்

பயில்பவர்: டி. எஸ். சௌதாமினி

வரைபடம் நன்றி:

விவேகானந்தகேந்திரா

போட்டோ: தாமு


பணத்தின் தகுதி

பணம் பல விஷயங்களில் உமி போன்றது. உள்ளே இருக்கும் அரிசிக்கு இணையாகாது. பணத்தினால் உணவை வாங்க முடியும், பசியை உண்டாக்க முடியாது. மருந்து வாங்கலாம், ஆரோக்கியம் அடையலாம் என்ற உறுதி இல்லை. பணத்தைக் கொண்டு பலர் அறிமுகமாகலாம். நல்ல நண்பன் கிடைப்பது அரிது. வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளும் வசதி கிடைத்தாலும் பணத்தினால் மட்டுமே அவர்களின் விசுவாசத்தைப் பெற இயலாது. வாழ்க்கையை உற்சாகமாகக் கழிக்கலாமே தவிர பணத்தினால் மனச் சாந்தியான வாழ்க்கை அமைவது அரிது.

ஆதாரம்: எக்லிக்டிக் டைஜஸ்ட்

தமிழில்: சரோஜா நரசிம்மன்





''என்னங்க, வாஷிங்மெஷினில் போடப் போற துணியை நீங்க ஏன் துவைக்கறீங்க?''

''அட போடி! 'இத்தனை அழுக்கு ஆகிற வரைக்கும் மனுஷன் போட்டிருக்கான் பாரு'ன்னு துவைக்கறவன் நெனைச்சுடக் கூடாதுன்னுதான்.''

இந்தியாவின் இந்திரா

1

“முகத்திலே பாரு. எத்தனை கர்வம்! அப்படியே வம்சம்!” பாட்டியின் மடியில் இருந்த குழந்தையைப் பார்த்துக் கொஞ்சினார் சரோஜினி நாயுடு. அர்த்தம் புரியாமல் அந்த ஆறு மாதக் குழந்தை பொக்கை வாய் சுழித்துச் சிரித்தது. பாட்டி ஸ்வரூபராணி முறுவலித்தார். உள்ளூறப் பிடிபடாத சந்தோஷம். தன்னுடைய ஒரே பிள்ளையுடைய முதல் குழந்தை. பிள்ளை வயிற்றுத் தலைச்சன். வீட்டில் வெகுநாளைக்கப்புறம் பிறந்த பெண் குழந்தை.

இந்திரா பாட்டி செல்லம். அப்பாவைப் பார்ப்பதே சிரமம். வெளியில் இருக்கிறாரா ‘உள்ளே’ இருக்கிறாரா என்று தெரியாது. வெளியில் இருந்தாலும் வீட்டில் இருக்க மாட்டார். அம்மாவிற்கு அப்பா இருக்கும் இடம் தான் அயோத்தி. தாத்தாவுடன் எப்போதும் ஒரு கூட்டம். முன்னறையில் உட்கார்ந்து அவர்களோடு மணிக்கணக்கில் சூடாக விவாதித்துக் கொண்டிருப்பார். இல்லையென்றால் தோட்டத்தில் கூட்டம்.



○ பள்ளிச் சிறுமி இந்திரா

பேசிக் கொண்டிருப்பார். அதனால் பாட்டி தான் எல்லாம்.

கடல்போல் வீடு. நிறைய ஆட்கள். என்றாலும் தனிமை. பெரிய வீட்டுப் பெண் பக்கத்தில் போகப் பலருக்குப் பயம். சிலருக்குத் தயக்கம். நெருக்கமான தோழி யாரும் கிடையாது. பாட்டிதான் எல்லாம். பாட்டி எளிய மனுஷி. அரசியல் தெரியும். ஆனால் குடும்பம் முக்கியம். வீட்டின் மக்கள் ஒவ்வொருவரும் ஒருவிதம். அனைவரும் ஊர் அறிந்த மனிதர்கள். மேலைநாட்டில் படித்தவர்கள். அந்தப் பழக்கங்களில் ஊறியவர்கள். பாட்டி இவற்றால் எல்லாம் பாதிக்கப்படாத மனுஷி. ‘காம்ப்ளக்ஸ்’கள் அற்ற ‘சிநேகிதி’. மேஜையை இழுத்துப் போட்டு, மேடை போல் ஏறி நின்று குழந்தை இந்திரா தாத்தாவைப் போல் ‘கூட்டம்’ பேசுவதைக் கேட்டுக் குதூகலிக்கும் தோழி.


ஒருநாள் மொட்டை மாடி முழுக்கக் கட்டுக்கட்டாய்த் துணிகள். பளபளவென்று பட்டு. மெத்து மெத்தென்று வெல்வெட். மேகம்போல் ஷிபான். எத்தனை வர்ணம்! எத்தனை மென்மை!

போர் போராய்க் குவித்திருக்கிற துணிகள் மீதேறித் தொப் தொப்பென்று குதித்து விளையாடிக் கொண்டிருக்கிறாள் இந்திரா. ஒளிந்து கொள்ள, ஒடிப்பிடித்து விளையாட ரொம்ப வாகாய் இருக்கிறது துணிப்போர். திடுமென்று யாரோ பெரியவர் வருகிறார்கள்.

“போ! போ! இதெல்லாம் விளையாடக் கூடாது!”

“ஏன்?”

“வேலை கிடக்கு தலைக்கு மேலே. விளையாடக் கூடாதுன்னு சொன்னேன்.”



○ தகப்பனாருடன் இந்திரா (மேஜை மீது)

இந்திரா கேட்பதாயில்லை. வந்தவர் போய்க் கமலாவை அழைத்து வருகிறார்.

''இந்து இங்க விளையாடாதே.''

''ஏம்மா?''

''இந்தத் துணியையெல்லாம் இப்போ கொளுத்தப் போறாங்க?''

''ஏன்?''

''அதெல்லாம் பெரியவங்க விஷயம்.''

''அப்படின்னு நான் கட்டாயம் பார்க்கணும்.''

''நோ! நோ!''

நேரே பாட்டியிடம் போகிறாள் இந்திரா.

''அவ பாட்டுக்குப் பாத்திட்டுப்போகட்டுமே கமலா!''

''இல்லம்மா, பயந்துக்கும்!''

''அவ இதற்கெல்லாம் ஒண்ணும் பயப்பட மாட்டா!''

பாட்டியின் மடியில் உட்கார்ந்துகொண்டு குழந்தை பார்க்க அனுமதிக்கப்படுகிறது.

தகதகவென்று கொழுந்து விட்டு எரிகிற தடிமனான கட்டையை ஒருவர் எடுத்துக் கொண்டு வருகிறார். தாத்தா கையில் தருகிறார். கட்டையைத் துணிப்போர் மேல் வீசி எறிகிறார், மோதிலால். அடுத்த விநாடி மெல்லப் புகை சுருள்கிறது. லேசாய்த் தீய்ந்த நாற்றம் கிளம்புகிறது. அடுத்த நிமிஷம் அங்கங்கே கொழுந்துகள். மடமடவென்று வானை நோக்கிக் கைகள் உயர்த்தி வளருது தீ!

குழந்தை பயப்படுகிறாளா என்று குனிந்து பார்க்கிறார் பாட்டி. அது உட்கார்ந்தபடியே தூங்கிப் போயிருக்கிறது.

அம்மாவைப் பார்க்கப் பாரிஸில் இருந்து யாரோ வந்தார்கள். ''இது இந்துவிற்கு''

என்று ஒரு பொட்டலம் தந்தார்கள். பூப் பூவாய் எம்ப்ராய்டரி செய்த அழகான பட்டுக் கவுன்.

''ஸாரி'' என்று திருப்பிக் கொடுத்து விட்டார் அம்மா.

''நாங்க இப்போதெல்லாம் கையால் நூற்ற, கையில் நெய்த துணிகள் தான் கட்டறது.''

வந்தவர் அம்மா புடவையைப் பார்க்கிறார். கனமாய், முரடாய் சாக்குப்போல் கதர். அந்தப் புடவை உராய்ந்து உராய்ந்து உடம்பு முழுக்க சிவப்பு. அங்கங்கே புண்.

''உங்களுக்கெல்லாம் பைத்தியம் தான் பிடிச்சுடுத்து. நீங்க எல்லாம் வளர்ந்தவங்க, படிச்சவங்க. உடம்பைப் புண்ணு அடிச்சுக்குங்க. ரத்தக்களறியா பண்ணிக்குங்க. எப்படி வேணு நாசமாய்ப் போங்க. ஆனா அந்தக் குழந்தை என்ன பாவம் பண்ணிச்சு? அவளை ஏன் இம்சை பண்றீங்க? அவ உடம்பைப் புண் பண்ண உங்களுக்கு என்ன உரிமை?''

வந்தவர் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார்.

''இந்து, இங்கே வா'' அம்மா மகளைக் கூப்பிட்டார்.

''இந்த ஆண்ட்டி உனக்கு ஃபாரின் லேருந்து ஃப்ராக் கொண்டு வந்திருக்கா.

○ குடும்பத்தில் ஒருவர் மடியில் குழந்தை இந்திரா



ரொம்ப நல்ல ஃப்ராக்... உனக்குப் பிடிச்சா வாங்கிக்கோ...''

ஆன்ட்டி ஃப்ராக்கைப் பிரித்துக் காண்பிக்கிறார்.

அழகான ஃப்ராக். தவிர்க்க முடியாத ஆசை. கண்ணில் மின்னுகிறது. மனசில் லேசான சபலம். பிஞ்சுக் கைகள் மெல்ல நீள்கின்றன. அம்மா சொல்வது காதில் ஒலிக்கிறது.

''...இஷ்டம்னு வாங்கிக்கோ. ஆனா அன்னிக்கு நாம எல்லாம் சேர்ந்து ஃபாரின் துணிக்குத் தீ வைச்சோமே, ஞாபகம் இருக்கா? நாங்க எல்லோரும் கதர்தான் போட்டுக்கப் போறோம். உனக்கு வேணும்னு நீ வாங்கிக்கோ.''

கை நீள்கிற அதேசமயம், அதைவிட வேகமாக வாய் ''தேங்க்யூ. ஆனா வேண்டாம் ஆன்ட்டி'' என்கிறது.

''ஏன்?''

''நான் இனிமே ஃபாரின் பொருட்களை உபயோகப்படுத்த மாட்டேன்.''

''வாடி என் பெரிய மனுஷி! அப்படின்னா, ஃபாரின் பொம்மை மட்டும் வச்சுண்டு விளையாடுவியோ?'' போகிறபோக்கில் ஒரு இடி இடித்துவிட்டுப் போகிறார் ஆன்ட்டி. இந்திரா எழுதுகிறார்: ''பெரியவர்களுக்கு, குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகள். அவர்கள் வார்த்தைகளும் பாவனைகளும் குழந்தையை எப்படித் சுடும் என்று தெரியாமல் ரொம்ப சாதாரணமாய் எதையாவது சொல்லி விடுவார்கள். அது எனக்கு வெறும் பொம்மை மட்டும் அல்ல. என் ஸ்நேகிதி. என் தோழி. என்னைப் பொறுத்த வரையில் அதற்கு உயிர் உண்டு. ஒரு பெயர் உண்டு. அந்த வயதில் நான் உயிரையே அதன் மீது வைத்திருந்தேன். ஆன்ட்டியின் வார்த்தை என்னை உலுக்கி விட்டது.

என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த அழகான பொருளை நான் வைத்துக் கொள்வதா? தூக்கி எறிந்து விடுவதா? வைத்துக் கொள்வது தேசத் துரோகமா? துணியைப் போட்டுக் கொள்வது தேசத் துரோகமா? துணியைப் போட்டுக் கொள்வது கூடாது என்றால் பொம்மையை எப்படி வைத்துக் கொள்ளலாம்? யோசனை புரட்டிப் புரட்டி எடுத்தது. சாப்பிட முடியவில்லை. சரியாய்த் தூங்க முடியவில்லை. களைத்துப் போய்த் தூங்கினால் உண்டு. என் உடம்புக்கு ஏதோ சரியில்லை என்று அம்மா நினைத்துக் கொண்டாள். கடைசியாய் ஒரு முடிவு எடுத்தேன். எந்த மொட்டை மாடியில் துணிகள் எரிந்ததோ அந்த மாடியில் பொம்மையைக் கிடத்தினேன். அழுது கொண்டே அதற்கு நெருப்பு வைத்தேன்.

அதற்குப் பிறகு எனக்கு இன்று வரை நிக்குச்சியைக் கிழிப்பது என்றாலே வெறுப்பு!


(தொடரும்

நந்தி தாண்டவம்

கும்பகோணத்துக்கு அருகே, மேலக்கடம்பூரிலுள்ள சோழர் காலச் சிற்பத்தைப் பார்த்து அப்படியே செய்யப்பட்டதுஇந்த நந்தி தாண்டவம் என்ற அபூர்வ சிற்பம். பத்துக் கரங்களுடன் சிவபெருமான் புரியும் இந்தத் தாண்டவம் 'பாலா' பாணியைச் சேர்ந்ததாம். இந்தப் பாணியில் மட்டுமே சிவபெருமான் நந்தி மீது நர்த்தனம் புரிவதைப் பார்க்க முடியும். இதைப் போன்ற கற்சிலைகள் வங்காளத்திலும், கிழக்கு இந்தியாவிலும் காணலாம் என்கிறார்கள். ஆனால் மேலக்கடம்பூரில் மட்டுமே, செம்பிலான இந்த அற்புதச் சிற்ப வடிவம் இருக்கிறது.

பிரம்மாவும் விஷ்ணுவும் தாளமிட, காளியும் நடனமாட, நாரதர் வீணை மீட்ட, விநாயகரும் முருகனும் ஈசனின் நர்த்தனத்தை ரசித்து மகிழ்ந்து தாங்களும் கூடவே ஆடுகிறார்கள்!

கும்பகோணத்துக்கு அருகேயுள்ள ஸ்தபதி ஒருவர், அகில இந்தியச் சிற்பப் போட்டி ஒன்றிற்காக இதை உருவாக்கினாராம். அதைப் பார்க்க நேர்ந்த நடனக் கலைஞர் குமாரி லட்சுமி விசுவநாதன், உடனே உரிய விலை கொடுத்து அதை வாங்கினாராம். மேடையில் அவருடன் இருப்பவர், அவரிடம் அபிநயம் பயிலும் குமாரி உமா சுப்பிரமணியம்.



ஸ்தபதி: திரு. அருணாஜடேசுவரன்

—சாருகேசி

வண்ணப்படம்: யோகா


வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த,
சுவையான பிஸ்கட்.
LINTAS BIN MB 10 2013 TM






...ஏனெனில் ஒவ்வொருவரும் தங்கள் கற்பனைக்கு
ஏற்றவாறு வாழ்விற்கு வண்ணம் தீட்டுகின்றனர்.

உங்கள் அருகாமையில் உள்ள மஃபத்லால் அங்கீகாரம்பெற்ற ரீடெய்ல் ஸ்டோருக்கு
விஜயம் செய்து எங்களுடைய மிகவும் நவீனமான டிசைன் தொகுப்பைக் காணுங்கள்.




BRIEFS
new you PANTIES
KIDSWEAR
VESTS
CASUALS
உடலோடு இணைந்து உள்ளம் கவர்ந்து
எழில் நிறைந்து... ஈடிணையற்றது...
டான்டெக்ஸ்®
TTK தயாரிப்பு
Imageads M-1944

வருது வருது குதிரை வருது!

கருத்து: தரஜா



''சம்பளத்திலே 180 ரூபாய் குறை யுதே! என்ன செலவு செய்தீங்க! உண்மையைச் சொல்லுங்க!''

''இதோ பார் மீனு! இன்டிஇன்டிக் கேட்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது!''



''மத்த ஸ்டெனோக்களை விட நளினி கிட்டே மட்டும் நம்ம மானேஜர் அதிகமாக் குழையுறாரே — காரணம் என்ன?''

''அவர் சரியான ரேஸ் பைத்தியம்! நளினி மட்டும்தானே தினமும் குதிரை வால் கொண்டை போட்டுக்கிட்டு வரா! அதனாலேதான்!''



''ஏன் எலெக்ட்ரிக் மோட்டார் வாங்க வந்தவர் விழுந்தடிச்சுக்கிட்டு ஓடறார்?''


''அவர் ரேஸ்லே நிறையப் பணம் தொலைச்சவராம்!''

''அதனாலே என்ன?''

''இந்த மோட்டாரோட சக்தி 10 ஹார்ஸ்பவர்னு நான் சொன்னதைக் கேட்டுப் பயந்து போயிட்டாரு!''

''நான் இதுவரைக்கும் 8460 லட் சாதிபதிகளை உருவாக்கியிருக்கிறேனாக்கும்!''

''ரொம்பத்தான் அலட்டிக்காதே! நான் லட்சத்துக்கும் மேலே பிச்சாதிபதிகளை உருவாக்கியிருக்கேன், தெரிஞ்சுக்க!''





''எங்கப்பா செத்துப் போனபோது ரேஸுக்கு நான் போகக் கூடாதுன்னு சத்தியம் வாங்கிண்டார்...''

''அவர் ரேஸ்லே ஏகமா கோட்டை விட்டிருப்பாரோ!''


''இல்லே! அதிலேதான் அவர் நிறைய சம்பாதிச்சார். அதை யெல்லாம் நான் தொலைச்சுடுவேன்னு பயம்!''

''எங்க முதலாளி தீவிர குதிரை பக்தர்... ரேஸ்னு அவருக்கு உயிரு!''

''அப்படியா ''

''ஆமாம்! 'சுந்தரேசன்'ங்கிறபேரை 'சுந்தரேஸ்வரன்'னு மாத்தி வச்சுக்கிட்டார்; தினமும் கொள்ளுச் சுண்டல் தான் சாப்பிடுவார்னு பார்த்துக் கயேன்!''




நாளைய நட்சத்திரம்
அன்னம்

“இன்னிக்குக் கம்பெனிக்குப் போன தும் புரொட்யூஸருக்குப் போன் பண்ணிப் பாருங்க, மாமா!'' என்றாள் மங்களா.

அவள் கொண்டு வைத்த காப்பியைப் பருகியவாறே அவளை உற்றுப் பார்த்தார் பரந்தாமன். எத்தனை அழகு! இத்தனை வனப் பிற்குப் பெரிய இடத்தில் பிறந்திருந்தால் ''ஓஹோ'' என்று இருந்திருக்கலாம். ஆனால் இவர் வீட்டில் — சம்பளமில்லாத வேலைக்காரி யாகத் — தங்கை மகள் என்ற அந்தஸ்துடன் இருக்கிறாள்.

பந்தாமன் பரம்பரைப் பணக்காரர். மனைவியை இழந்தவர். வயது ஐம்பதைத் தொட்டாலும் வாலிப மிடுக்கு குறையா தவர். ஒரே பிள்ளை அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தான். மங்களா அவர் வீட்டுக்கு வந்த புதிதில் — அதுவும் அவள் அவரை அடிக்கொருதரம் ''மாமா! மாமா!'' என்று விளித்த போது, அவரை ஒரு மாதிரிப் பார்த்தார்கள்.

பரந்தாமன் அவர்கள் வாயை அடைத் தார். பெரிதாக ஒரு பிறந்த நாள் விழா நடத்தினார். தன் தங்கை மகள் மங்களாவின் பதினேழாவது பிறந்த நாள் என அறிவித் தார். தன் பிறந்த தேதியைப் பரந்தாமன் அக்கறையாக விசாரித்தபோது, அவர் இப்படியொரு ஆடம்பரமான விழாவிற்கு ஏற்பாடு செய்வார் என்று எதிர்பார்க்க வில்லை.

மங்களா அவர் தங்கை பெண்ணா? பரந்தாமனுக்குக் கூடப் பிறந்தவர்களே கிடையாது.... மங்களாவிற்கும் தெரியும்— தனக்கும் தாய்மாமன் அவர் இல்லை என்று.

இந்த உறவு எப்படி ஏற்பட்டது ... ஏன் ஏற்பட்டது... பரந்தாமனையோசித்துப் பார்த்தார். நாளைக்கு அவர் பிள்ளை மனோ ஹர் அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் என்ன நினைப்பான்? என்ன சொல்வான்... அவனுக்குப் பூரா விவரமும் சீக்கிரம் எழுதி ஆக வேண்டும்.


அந்தக் காலத்தில் — திருவையாறுக்குப் பக்கத்தில் தன் சொந்த ஊரான வைத்திய நாதன் பேட்டைக்குப் போயிருந்தபோது அவர் குஞ்சலத்தைச் சந்தித்தார். அவள் அழகு அவரைக் கவர்ந்தது. களத்துமேட் டிற்கு அவள் அப்பனுக்குக் கஞ்சி கொண்டு வருவதைப் பார்த்தார். ''வெடுக், வெடுக்'' என்ற அவள் பேச்சு அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசுவதைக் கண்டு பயப்பட்டவர்கள் இருவர். ஒன்று பரந்தாமனின் அப்பா; இரண்டாவது குஞ்சலத்தின் தந்தை.

என்ன நடந்தது என்று பரந்தாமனுக்குத் தெரியாது. ஒருநாள் காலை வீட்டு ஹாலில் பரபரப்பு. பரந்தாமன் எட்டிப் பார்த்தார். குஞ்சலம் தொங்கத் தொங்கத் தாலியுட னும், கழுத்தில் மாலையுடனும் — கட்டிய

''மாமா! எங்க ஆபீஸ் இளப் நடத்தின 'கடிதம் எழுதும் போட்டி' யில் எனக்கு முதல் பரிசு கிடைச்சது.''

''அப்படியா... பலே! எதைப் பத்தி கடிதம் எழுதற போட்டி?''

''பணம் அனுப்பச் சொல்லி மாமனா ருக்குக் கடிதம் எழுதற போட்டி!''



கணவ... பக்கத்தில் நிற்கப் பரந்தாமன் தந்தையின் கால்களில் விழுந்து வணங்கிக் கொண்டிருந்தாள். வணங்கிய பெண்ணை ஆசிர்வதித்த அவர், தலையை உயர்த்திப் பரந் தாமனையும் பார்த்தார். ''எலே! நான் உன் அப்பன்டா!'' என்று சொல்லியது அந்தப் பார்வை.

பரந்தாமன் திரும்பி வைத்தியநாதன் பேட்டை பக்கம் போகவும் இல்லை. தங்கவும் இல்லை. தந்தைக்காக ஒரு பெண் கழுத்தில் தாலியைக் கட்டினார். யந்திரம் போன்ற வாழ்க்கையில் மனோஹரன் பிறந்தான். அதற் காகக் காத்திருந்தது போல் அவளும் பிள்ளை யைக் கையில் கொடுத்து விட்டுக் கண்ணை மூடினாள்.

தந்தை காலமான பிறகு ஊரிலிருந்த அத்தனை பூர்வீக சொத்துக்களையும் விற்றார். 'பிஸினஸ்'ஸில் பணத்தைக் கொட்டினார். பெரிய மனிதராக ஆனார்.

பெரிய மனிதருக்கான சில கெட்ட வழக் கங்கள் தாமாகத் தொற்றிக் கொண்டன. குடிப்பழக்கம் ஏற்பட்டது. உடற்பசியைத் தீர்த்துக் கொள்ளச் சில இடங்களுக்குப் போகும் வழக்கமும் தொடர்ந்தது—

அப்படி ஒருநாள்—

அவர் வழக்கமாகப் போகும் அந்தப்பங்க ளாவிற்குத் தம் காரில் போய் இறங்கினார்.

அந்தப் பங்களா வாசிகள் பசுந்தோல் போர்த்திய புலிகள். பார்ப்பதற்கு நல்ல வர்கள், நாணயமானவர்கள், போல் தெரி வார்கள். ஆனால், செய்யும் தொழில் மகாக் கேவலமானது.

ஏதோ வேகத்தில் உந்தப்பட்டு வீட்டை விட்டு ஓடி வரும் இளம் பெண்களை — தங்களின் நிரந்தர அடிமையாக்கிக் கொள் வார்கள்.

பரந்தாமன் இங்கு அடிக்கடி வருவார். பணத்தை அள்ளி வீசுவார்.

அன்று அந்தப் பெண் வந்தாள். அவரைப் பார்த்தாள். அவர் கால்களில் விழுந்து வணங்கினாள்.

பரந்தாமன் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டேயிருந்தார். அந்தப் பெண் குஞ்சலத்தின் மறுபதிப்பு.

கண்களால் ஜாடை காட்டி மற்றவர்களை வெளியே போகச் சொன்னார்.

''உன் பெயர் என்னம்மா?''

''மங்களா.''

''ஊர் ''

''வைத்தியநாதம்பேட்டை!'' — அவர் சந்தேகப்பட்டது சரிதான்.

''அம்மா...''

''அம்மா, அப்பா ரெண்டு பேரும் இல்லீங்க... சித்தப்பா வீட்டிலே ரொம்பத் திட்டுறாங்க... உதைச்சாங்க...''

''அதனாலே ஊரை விட்டு ஓடி வந்தியா?'' எனக் கேட்டார் கோபத்துடன்.

''இல்லீங்க... இவுங்க திருவையாறு கோவிலுக்குச் சாமி கும்பிட வந்திருந்தாங்க... என்னைப் பார்த்ததும் சினிமாவிலே சேர்த்துடறதாச் சொன்னாங்க.... ரொம்ப நல்லவங்க... ஆமாம்.''

''ஆமாம்... ரொம்ப நல்லவங்கதான்... இங்கே எப்போ வந்தீங்க?''

''நேற்றுக் காலையிலே தானுங்க... ஏங்க! நீங்க சினிமா பிடிக்கிறவர் தானே?'' — எனக் கேட்டாள் மங்களா திடீரென்று.

''ஏன் கேட்கிறாய்?''

''அம்மா சொன்னாங்க... நீங்க சொன்ன படியெல்லாம் கேட்டாக்கா, என்னை ஸ்ரீதேவி மாதிரி, ராதா மாதிரி ஆக்கிடுவீங்களாம்.''

''சரி, செய்துடுவோம்... நீ கொஞ்சம் தனியாகப் போய் இரு... எனக்கு அவுங்க கிட்டப் பேசணும்!'' என்றார்.

அவர்களைக் கூப்பிட்டார். சாடு, சாடு எனச் சாடினார். தாம் அப்பொழுதே போலீஸ் ஸ்டேஷன் போவதாகச் சொன்னார். தன் தங்கை பெண்ணை ஏமாற்றிக் கூட்டி வந்ததற்குச் சரியான பாடம் கற்பிப்பதாகக் கூச்சல் போட்டார்.

மங்களா பரந்தாமன் வீட்டிற்கு வந்து சேர்ந்த கதை இதுதான்!

● ● ● ●

வந்து சேர்ந்த புதிதில் மங்களா பரந்தாமன் வீட்டு சௌகரியங்களில் தன் எண்ணத்தை மறந்து போனாள். பின்னர் அவரை நச்சரிக்கத் தொடங்கினாள்.

பல கோணங்களில் பரந்தாமன் அவளைப் புகைப்படம் எடுக்கச் செய்தார். எல்லாத் தயாரிப்பாளர்களுக்கும் அனுப்பியதாகச் சொன்னார். ஆனால் அவை அவர் பீரோவின் அடியில் தூங்கின.

ஒருநாள் அவள் அவரை நேரிடையாகக் கேட்டாள். ''உங்களால் முடியவில்லை என்றால் சொல்லுங்கள். நான் பழைய இடத்திற்குப் போய் விடுகிறேன்!'' என்று கூட யோசனை சொன்னாள்.

பழைய இடமா... மங்களா வந்தபிறகு, அவரே கூட அந்த மாதிரி இடங்களை மறந்து விட்டாரே!

அவர் அவளுக்கு ஆறுதல் சொன்னார். ''நீ இங்கு வந்து பத்து மாதங்கள் ஆகின்றன... இன்னும் இரண்டே மாதங்கள் பொறுத்துக் கொள். அப்பறமும் என்னால் முடியாவிட்டால், உன் இஷ்டம் போல் செய்து கொள்ளலாம்!'' என்றார்.

அவர் அவளுக்கு நிறையப் புத்தகங்கள் படிக்கக் கொடுத்தார். ஆங்கிலப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார். அவள் ஆசைப்படியே நாட்டியமும் கற்றுக் கொடுத்தார்.

''ஏன் மங்களா நீ சினிமா நட்சத்திரமானால் வருஷம் எவ்வளவு சம்பாதிப்பாய்?''

''ஐந்து லட்சம் ரூபாய்...''

''அது போதுமா?''

மங்களா யோசித்து விட்டுப் ''பத்து லட்சம்'' என்றாள்.

''சரி... நீ சினிமாவில் நடிக்காமல் — சிரமமே படாமல் ஒருவர் அந்தப் பணம் கொடுத்தார் என்றால்...?''

''அப்படி யார் கொடுப்பார்கள்?'' என்றாள் மங்களா அக்கறை இல்லாமல்.

''நான் தான் என்று வைத்துக் கொள்ளேன்... என்னுடன் இருந்துவிடேன்!'' என்றார் விளையாட்டாக.

மங்களாவின் முகம் மாறியது.

''நீங்கள் தப்பாகப் பேசுகிறீர்கள். நீங்கள் பேசுவது சரியில்லை.''

அவள் அழுது விடுவாள் போலிருந்தது.

''சீ அசடு! சும்மா சொன்னேன். நீ என் தங்கை பெண் இல்லையா... பணத்தின்மீது ஆசையா, சினிமா மீது விருப்பமா என்று சும்மா சோதனை செய்தேன்'' என்று சமாளித்தார்.


● ● ● ●

அடுத்த வாரம் மங்களாவின் அடுத்த பிறந்த நாள் வருகிறது.

''ஏழு ரூபா கட்டிங்கா? பத்துரூபா கட்டிங்கா, சார்?''

''ரெண்டுக்கும் என்ன வித்தியாசம்?''

''பத்து ரூபா கட்டிங்லே காதுப் பக்கம் வெட்டும் போதெல்லாம் கொஞ்சம் கவனமா வெட்டுவோம். அவ்வளவுதான்.''



அன்றைய தினசரியைப் பார்த்தப் பரந்தாமன் மங்களாவை அவசரமாகக் கூப்பிட்டார்.

அவளை ஆசைகாட்டி அழைத்து வந்தவர்கள் போலீஸில் அகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் படம் போடப்பட்டிருந்தது.

மங்களா இதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். துடித்துப் போனாள். இயல்பான சந்தேகம் அவளுக்கு எழுந்தது. அப்படிப்பட்ட இடத்திற்குப் பரந்தாமன் ஏன் வந்தார்?

பரந்தாமன் அவள் தோள்களில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தார்.

''ஆமாம் மங்களா...! நான் அங்கே வந்தது சினிமாப் படத் தயாரிப்பாளராக இல்லை.''

''பின்னே என்ன மட்டும்... என்னை மட்டும் எதற்காக...''

பரந்தாமன் தம் உள்ளத்திலிருந்ததைக் கொட்டிவிட்டார்... தாம் சின்ன வயதில் அவள் தாய் குஞ்சலத்தைப் பார்த்தது. மனம் விட்டுப் பழகியது. வாழ்க்கையில் இணையத் துடித்தது... அவர் ஆசையாக எண்ணியது நிறைவேறாமல் போனது — எல்லாம் விவரமாகச் சொன்னார்.

''ஒருவேளை குஞ்சலம் என் மனைவியாக வாய்த்திருந்தால், நீ என் மகளாக இருந்திருப்பாய்... குஞ்சலத்தின் மகள் அந்தக் கேவலமான நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என்ற ஒரே எண்ணம்தான் உன்னை நான் கூட்டி வந்தது...''

மங்களாவிற்கு என்ன பேசுவது என்று விளங்கவில்லை.

''இனிமேல் என் நிலை...''

''இந்த ஒரு வருடத்தில் நீ எத்தனையோ முன்னேறி விட்டாய்... பழைய கிராமத்துப் பெண் இல்லை... அடுத்த வாரம் உன் பிறந்த நாள்... அன்று நீயே தீர்மானித்துக் கொள்.. அப்புறம் நான் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன்!'' என்றார் பரந்தாமன் உறுதியாக.

● ● ● ●

அன்று மங்களாவின் பிறந்த நாள்.

முதல் நாள் முதல் பரந்தாமனை அவள் சந்திக்க முடியவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்திருந்த மகன் மனோகரனுடன் பேசியே அவர் பொழுதைக் கழித்தார்.

பிறந்த நாள் விழாவிற்கு வந்த இருவரைக் கண்டு மங்களா பயந்து போனாள். அவள் சித்தப்பாவும், சின்னம்மாவும்... மறுபடியும் அந்த நரகத்திற்கா?

பரந்தாமன் அவள் பயத்தைப் புரிந்து கொண்டார். ''உம்... எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்றி வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்திகளை எண்ணிப் பார்த்து விட்டு அவைகளை வாயால் ஊதி அணை!'' என்றார்.

எண்ணிப் பார்த்தாள்... பதினெட்டு.

கூடியிருந்தவர்கள் வாழ்த்தினார்கள். பிரபல தொழிலதிபர் பரந்தாமன் தங்கை மகள் ஆயிற்றே. பரிசுகள் குவிந்தன.

''உனக்கு வயது பதினெட்டு ஆகிவிட்டது. இனிமேல் யாரும் உன்னைக் கட்டாயப்படுத்த முடியாது... நான் கூடத்தான்... இரண்டு பிரபல பட டைரக்டர்கள் வந்திருக்கிறார்கள்... நானே படம் எடுக்கிறேன்... நீதான் கதாநாயகி.''

பரந்தாமன் நிறுத்தினார்.

''என் பிள்ளையும் வந்திருக்கிறான். எதற்காக அப்பா மங்களாவை வெளியே அனுப்புகிறீர்கள்... உங்கள் தங்கை மகள்... என் முறைப்பெண்... செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டியதுதானே என்று கேட்கிறான்... உன் சித்தப்பா, சித்திக்குச் சம்மதம்...''

பரந்தாமன் நிறுத்தினார் மீண்டும்.

''நான் வற்புறுத்தவில்லை... உன் விருப்பம் எதுவோ அப்படியே செய்யலாம்.''

மங்களா திகைத்துப் போனாள்.

அவள் கண்முன் ஜாஜ்வல்யமான திரை உலகம் சுழன்றது. வண்ண வண்ண பிரவாகங்கள்... ரம்மியமான கானங்கள்...சொக்க வைக்கும் நடனங்கள்... காதைப் பிளக்கும் கரகோஷம்... அப்புறம்... அப்புறம்...!

நிரந்தரமான இருட்டு.

இன்னொரு பக்கம் அமைதியான குடும்ப வாழ்க்கை. சமூகத்தில் ஒரு கௌரவம். ''என் குழந்தை... என் கணவன்... என் வீடு... என் உலகம்...'' குடத்திலிட்ட குத்துவிளக்குதான்... தூண்டிவிடப் பக்கத்தில் மனோகரன், பரந்தாமன்.

மங்களா ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

மனோகரனை நெருங்கி அவன் வலது கரத்துடன் தன் வலது கரத்தை இணைத்துக் கொண்டாள்.

கூடியிருந்தவர்கள் பலமாகக் கைதட்டினார்கள். அவர்கள் நிறுத்திய பிறகும் தொடர்ந்து கைதட்டிக் கொண்டிருந்தார் பரந்தாமன்.

திருச்சியிலுள்ள ஒரு ஸ்வீட் ஸ்டாலில், ''ஸ்வீட் வகைகளின் பெயர்களைத் தூய தமிழில் எழுதியுள்ளனர். ''ஹல்வா''வை ''சுவை கனி'' என்றும்; ''மைசூர் பா''கை ''சுவைகட்டி'' என்றும்; ''ஜாங்கிரி''யைச் ''சுவை சுற்று'' என்றும்; ''பூந்தி''யை ''தித்திப்புத் துளிகள்'' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

—அன்னை அன்பழகன்.



நிலவே நீயும் விலகாதே



3

காற்று வாங்க வந்திருந்த கூட்டம் அங்கங்கே கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருந்தது. கடலில் விரிந்திருந்த பாய்களைச் சுருட்டிக் கொண்டு கரை பார்த்துத் தவழ்ந்து கொண்டிருந்தன மீனவர் படகுகள். வடக்குப் பக்கத்தில் நீளமாய் கரை. நுரை விளிம்போடு ஓடிற்று. தெற்கில் அஷ்டலக்ஷ்மி கோயில் கும்பத்தின் மெர்க்குரி விளக்கு ஒளிர ஆரம்பித்திருந்தது.

''என்ன அர்த்தம் பாலா'' என்று மறுபடியும் கேட்டாள் அனுசூயா.

''ஒவ்வொரு தடவையும் ஃபோன் பண்ணிட்டு இன்னிக்கு வேணும் இன்னொரு நாள்னு சொல்லுவ. இன்னொரு நாள் ஃபோன்பண்ணி வியாழக்கிழமை ஃபோன் பண்ணி எடத்தை ஃபிக்ஸ் பண்றேன்னு சொல்லுவ. வியாழக்கிழமை நான் பைத்தியம் மாதிரி போன் அடிக்கறப்பல்லாம் எல்லாரையும் முந்திக்கிட்டு ஓடிப் போய் ஃபோனை எடுப்பேன். எமாறுவேன்-ஒன்னைத் தவிர மத்த எல்லாரும் பண்ணுவாங்க. வியாழனும் கெடையாது வெள்ளியும் கெடையாது. பத்து நாள் கழிச்சி போன் வரும். நான் 'அனு' 'அனு'ன்னு ஃபோன்லேயே துடிச்சிப் போவேன். நீ ஒரு சின்ன 'ஸாரி' சொல்லிட்டு இன்னும் ரெண்டு நாள் டயம் கேப்ப. ஒன்னைப்பாக்கற வரைக்கும் எனக்கு ஆத்திரமாய்ப் பொங்கிட்டு வரும். பார்த்தவுடனே அதை இதைப்பேசி என் மூடையே மாத்தி என் கோபத்தை மறக்கடிச்சிடுவே...''

''அது மாதிரி...''

''சிரிக்காத அனு... அது மாதிரித்தான் இந்தகனவும் கூட... நீ என்னை ஏமாத்தி அலேக்கழிக்கறதுதான் சவுக்கடி. கடைசில பாத்துப் பேசிச் சமாதானம் பண்றியே அதான் அந்தக் கிஸ்...''

''அப்பா கற்பனையெல்லாம் எப்படிவேலை செய்யுது பாரு...'' என்றான் அனுசூயா அண்ணாந்து பார்த்து. வானம் லேசாய்க் கருமை பூத்திருந்தது. தொடுவானுக்கருகில் இருந்த மேகங்கள் வேகமாய் ஓடிவந்து மேலே குடையாய் நிற்கத் திரண்டன.

''போலாமா பாலா?''

''அதுக்குள்ளேயா அனு? எவ்ளோ நாள் கழிச்சிப் பாத்திருக்கோம். இன்னுங்கொஞ்ச நேரம் பேசிட்டிருப்போமே...?'' அனுசூயா சம்மதிக்கிற மாதிரி தலையை ஆட்டினாள். மறுபடியும் பார்வையைச்சுழற்றி மேகங்களைப் பார்த்தான்.

''என்னால நம்பவே முடியல பாலா!'' என்றாள் திடீரென்று.


''எது அனு?''

''மூணு மாசத்துக்கு முன்னால இருந்த பாலாவும் அனுவுமா இதுன்னு நெனைச்சிப் பார்த்தா'' என்றாள் அனுசூயா விரல்களில் நெட்டி முறித்துக் கொண்டே.

''கழுதை... அப்படி ஒரு மயக்கம் குடுத்திருக்கிற... லவ்வைப் பத்தி நான்கேட்டா எனக்கு அதிக நம்பிக்கையில்ல... எங்க வீட்ல அதுக்கெல்லாம் சான்ஸே கெடையாதுன்னு ஒருநாள். அப்புறம் ஆஃபீஸுக்குப் ஃபோன். அப்புறம் திடீர்னு நான் கூப்பிட்ட உடனே சரின்னு ஒத்துக்கிட்டு எங்கூட ஹோட்டல்... அப்புறம் மெது மெதுவா கோயில்... அப்புறம் பீச்... எனக்கு என்ன பெரிய விஷயமாத்தோணுது தெரியுமா அனு?''

''எது?'' என்றாள் அனுசூயா கொஞ்சலாக.

''எம்மேல கூட என்னை முன்ன பின்ன தெரியாத ஒருத்தி இவ்வளவு தூரம் பிரியம் வைக்க முடிஞ்சிதே... அப்படிப் பிரியம் வைக்கிற அளவுக்கு எங்கிட்ட என்ன இருக்கு?'' சொல்லிவிட்டுப் பாலா அவன் முகத்தைப் பார்த்தான். அவன் கண்களில் அவனை அறியாமல் ஒரு நீர்ப்படலம் லேசாய்த் திரை மாதிரி விழுந்து அவனை மழுப்பலாய்க் காட்டிற்று.



''மனசு பாலா... ஒங்க மனசு... ஆம்பிளைங்கள்ள கூட இவ்வளவு ஸாஃப்டா ஒருத்தர் பழக முடியுமா? 'நான் என்ன அழகா இருக்கேன்னு எம்மேல இந்த பிரியம்'னு நானும் கேட்டுக்கிட்டது தான்... இப்பக் கூட இதை நான் லவ்வுனு சொல்ல மாட்டேன்... எங்க வீட்ல எனக்குப் பிரியம் இல்ல. நான் ஏதோ மூணாவது ஊட்டுப் பொண்ணு மாதிரி நெனைப்பு. எப்பவாவது நெனைச்சிக்கிட்டா கஸ்தூரி தான் மேல வுழுந்து புடுங்கி வெளையாடும்.. அதனாலே யாராவது எங்கிட்ட பரிவா இருக்க மாட்டாங்களான்னு ஒரு ஏக்கம். அதான் உங்கமேல எனக்கு அவ்வளவு பிரியம்...''

''அப்ப ஒரே ஒரு தரம் சொல்றேன் அனு...''

''என்னன்னு...?''

''ஐ லவ் யூன்னு!''

''ம்ஹூம்.''

''ஏய் ப்ளீஸ் அனு?''

''இல்ல பாலா... இது சக்ஸஸ் ஆவாது பாலா... அனாவசியமா நாம ரொம்ப நெருங்கிப் பழகிட்டோம்னு ஒருவேளை பிரிய வேண்டியிருந்தா அதை ஒங்களால தாங்க முடியாது பாலா...''

''நம்ப கையை மீறி ஏதாவது நடந்தாப் பரவாயில்லை அனு... ஆனா நீ மட்டும் என்னை வுட்டுட்டுப் போயிடாதடா... நீ என்னை லவ் பண்ணலேன்னு சொல்லிடாதடா...''

''சொல்லிட்டா என்ன ஆவும் பாலா?''

சட்டென்று விழுந்த அந்தக் கேள்வியின் பொருளைத் தாங்க முடியாமல் பாலா தவித்துப் போனான்.

''மனசு படக்னு ஒடஞ்சிப் போய்டும் அனு...'' என்றான் தழுதழுப்பாய்.

நிஜமாகவே அவன் மனம் உடைந்து போன மாதிரி அவன் பதறிப் போனான். திடீரென்று அவன் மார்பில் உள்ளங் கையைப் பதித்தாள் அனுசூயா.

பொட்டென்று ஒரு தண்ணீர்த் துளி அவன் மணிக்கட்டில் விழுந்து தெறித்தது.

''தெனம்பலாம் பாலா. உங்க மூடு இன்னிக்குச் சரியில்ல...''

''செனம்பலாம் ஆனா ஒரு சின்ன கண்டிஷன்.''

''என்ன?''

''ஒரு சின்ன கிஸ்...''

''ம்ஹூ ஹூம்.''

''என்ன அனு இது? இல்லேன்னா நான் வரலே...''

அனுசூயா சுற்றுமுற்றும் பார்த்தாள். பிரதேசம் அபாரமாய் இருட்டடித்துக் கிடந்தது. சட்டென்று அவன் கன்னத்தில் இதழ் பதித்து விலகிக் கொண்டாள்.

''மழை வரும் போல இருக்கு பாலா..''

''வரட்டும்'' என்றான் பாலா அமர்த்தலாய்.

சபா

''நினைஞ்சா எனக்கு ஒடம்புக்கு ஒத்துக் காது.''

''ஒன்னை யாரு நினைய விட்டது... நான் அப்பிடியே கட்டிப் பிடிச்சிக் கூட்டிக் கிட்டுப் போவேன்ல...? மழை வரலைன்னு அந்த சான்ஸ் போய்டுமே அனு...''

''ஆசை ஆசை...''

அனுசூயா அவன் வலது கையிடுக்கில் கையை நுழைத்து இடுக்கிக் கொண்டு அவனோடு ஒட்டி நடந்தாள். சற்றுத் தொலைவில் சாலையில் பஸ்ஸின் ஒளிச் சன்னல்கள் ஓடின. தெரிந்த வெளிச்சத்தில் ஒரு தும்பி கூடச் சிறகடிக்கவில்லை. மணல், மேடு தட்டியிருக்கப் புளியங்கொட்டை. புளியங் கொட்டையாய்க் காலில் கூழாங்கற்கள் உறுத்தின.

''அனு...'' மெல்ல அவள் விரல்களை நெறித்துக் கொண்டே அழைத்தான் பாலா.

''ம்...''

'' 'அவள் அப்படித்தான்' போகணும்னு ரொம்ப நாளா சொல்லிட்டிருந்தியேடா..''

''ஆமாம்... வந்திருக்கா...?'' என்றாள் ஆவலுடன் தலையை நிமிர்த்திக் கொண்டு.

''ம்... போலாமா...?''

''ஐயய்யோ...''

''ஏன்... கடிச்சாத் தின்னுடுவேன்... போலாம்...''

''சரி...''

''எப்பப் போலாம்...?''

''நாளைக்கு ஃபோன் பண்றேனே பாலா...''

''நிச்சயமா?''

''நிச்சயமா!''


தியேட்டர் கொஞ்சம் ஒதுக்குப்புறமான பிரதேசத்தில் அமைந்திருந்தது. கீழ பெரிய ஹாலில் கொஞ்சம் ஆண்களும் நிறைய பெண்களும். அனுசூயா கன்றுக் குட்டி மாதிரி பாலாவின் பின்னால் நடந்து நின்றாள். சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டாள். நிறைய பயமாய் இருந்தது. நிறைய ஆர்வம் இருந்தது.

''கூட்டம் நெறைய இருக்கும் போல இருக்கே பாலா...''

டாக்டர்: ''கம்பௌண்டர் இன்னிக்கு ஏன் வேலைக்கு வரலே...?''

நர்ஸ்: ''அவருக்கு உடம்பு சரியில்லையாம்! அவரோட குடும்ப டாக்டரைக் கன்ஸல்ட் பண்ணப் போயிருக்கார், டாக்டர்!''

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



ஹைறக்ளாஸ் போலாது அனு...ரெண்டு பாக்ஸ் டிக்கெட் கேட்டு வாங்கிடு...'' என்றான்.

அனுசூயா தயங்கித் தயங்கிக் கவுண்டருக்கு நடந்தாள். வேறு பேச்சில் கவனமாய் இருந்தவர்கள் சிந்தனையைச் சிதறவிட்டு அவளைப் பார்த்தார்கள். பாலாவுக்கு மனத்தில் லேசாய்ப் பெருமிதம் மூண்டெழுந்தது. தன்னைக் கூட நேசிக்க ஒருத்தி. அதுவும் மற்றவர்கள் பார்த்துப் பெருமைப்படுகிற அளவுக்கு இருக்கிற ஒருத்தி.

''போகலாமா பாலா?'' என்றாள் அனுசூயா கையில் டிக்கெட்டுடன் வந்து கொண்டே. பாலா துள்ளுகிற மனத்துடன் மாடிப்படியேறினான். மேலே வராந்தாவில் எல்லாத் தின்பண்டங்களும் இடைவேளைக்காகக் காத்திருந்தன. செட்டருகில் நின்றவன் பார்வை கொஞ்சம் விஷமத்துடன் இவர்களை ஆராய்ந்த மாதிரி பாலாவுக்குத் தோன்றியது.

டிக்கெட்டைக் கிழித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

இரண்டே வரிசைகள் தான் இருந்தன. வரிசைக்குப் பத்து இருக்கைகள். முன் வரிசையில் இந்த மூலையில் ஒரு ஜோடி. அந்த மூலையில் ஒரு ஜோடி. இவர்களுக்குக் கொடுத்திருந்த வரிசையில் இவர்களைத்தவிர வேறு யாருமில்லை.

திரையில் விளம்பரப் பெண்கள் கூந்தலை அநாவசியத்திற்குப் பறக்க விட்டார்கள். பல் வரிசையை நட்சத்திர மின்னல்களுடன் விஸ்தாரமாகக் காட்டினார்கள். அனுசூயா மூலை இருக்கையில் உட்கார்ந்து கொள்ளப் பாலா படபடப்புடன் பக்கத்து இருக்கையில் அமர்ந்தான். இவ்வளவு பக்கத்தில் உட்காருவது இதுதான் முதல் தடவை. லேசாய் முழங்கால் இடித்தது. பாலா உடம்பில் ஒரு அதீத சக்தி உருவாகிற மாதிரி உணர்ந்தான். அனுசூயா போட்டிருந்த செண்ட்டின் நறுமணம் சூழ்நிலையில் பரவி அவனை லேசாய்க் கிறங்க அடித்தது. விளம்பரம் முடிந்து எல்லா விளக்குகளும் அணைந்து போய்த் திரைப் படம் துவங்கிய போது பாலா மிக சந்தோஷமாய் உணர்ந்தான். மெதுவாகக் கையை நீட்டி அவள் விரல்களோடு கோத்துக் கொண்டான்.

''அனு...'' என்றான் கிசுகிசுப்பாய்.

சட்டென்று திரையில் இருந்து கண்களை எடுத்து அவன் பக்கம் பார்த்தாள் அனுசூயா. அவள் கண்களில் அதீதப் பளபளப்பு தெரிந்தது. லேசான ஏக்கம் தெரிந்தது. வரவேற்கும் கண்கள்.

''ஏன்?'' என்றாள் கொஞ்சலாய்.

''இவ்வளவு பக்கத்தில அரையிருட்டுல ஒன்னைப் பாக்கறது இதுதான் மொதல் தடவையா... என் ...ன்னுக்கு ஒரு தேவதை வந்து எங்கிட்டக்க உக்காந்திருக்கிற மாதிரி தெரியுது அனு...'' என்றான் பாலா லேசாய் அவள் முகத்தை நெருங்கி.

அனுசூயா உள்ளங்கையை அவன் முகத்தில் பதித்துத் திருப்பினாள். ''படத்தைப் பாருங்க பாலா...'' என்றாள்.

''நீ பாரு... நான் ஓம்போகத்தையே பார்த்திட்டிருக்கேன்'' என்றான். உள்ளங் கையை விடுவித்துக் கொண்டு மெதுவாய் அவளது இடுப்பில் பதிய வைத்தான். ஜில் லென்று உணர்ந்தாள். அவள் சட்டென்று தன் உள்ளங்கையை அவன் கையில் பதித்து அழுத்தினாள். ''வேண்டாம் பாலா... எடுங்க கையை... ப்ளீஸ்...''

''முடியல அனு... சும்மாத்தான் வெச்சிட் டிருக்கேன்... நான் அப்படியே வெச்சிட்டே படம் பாக்கறேனே... நீ பாட்டுக்குப் படம் பாரு...'' அனுசூயா அந்த இருட்டில் மீண்டும் மின்னுகிற கண்களுடன் அவனைப் பார்த்தாள். சின்ன இதழ்களில் தேனூல் மெழுகிவிட்ட பளபளப்பு தெரிந்தது. பாலா விரலால் அந்த இதழ்களை ஸ்பரிசித்தான். இந்தக்கடைசியிலிருந்து அந்தக் கடைசி வரை வருடினான். பட்டென்று வாயைத் திறந்து அனுசூயா அந்த விரலைப் பற்களுக்கிடையில் கௌவிப் பிடித்தாள். தாய்ப்பூனை குட்டியை வாயால் கவ்வுகிற மாதிரி.

பாலா தன் வாழ்க்கையின் மிக ஆனந்த மான நாளாக உணர்ந்து சிலிர்த்துப் போனான். மெல்ல குனிந்து அவள் காது மடலில் இதழ்களைப் பதித்தான்.

''ஐ லவ் யூ அனு!'' என்றான்.

அனுசூயாவிற்கு உடல் முழுக்கச் சிலிர்த் தது. அவன் பக்கமாகத் திரும்பி அவன் முகத்தை ஆராய. அவன் சட்டென்று குனிந்து அவள் முகத்தை நெருங்க. அனு சூயா விலகிக் கொண்டாள்.

''வேணாம் பாலா ப்ளீஸ்...'' என்றாள்.

''ஒரே ஒரு கிஸ் அனு...'' பாலாவின் குரலில் ஏக்கம், எதிர்பார்ப்பு, கெஞ்சல் அத் தனையும் இருந்தது. தொண்டை அடைத்துக் கொண்டு வார்த்தைகள் ஒலியும் காற்றுமாய் உரசிக் கொண்டு உரசிக் கொண்டு பிறந்தன.

''ம்ஹூம்'' என்று தலையை அசைத்தாள் அனுசூயா.

அவன் திடீரென ஒரு ஆவேசத்தில் உந்தப்பட்டவனாகி இடுப்பில் இருந்த கையை மேலேற்றி அவள் முகத்தைப் பற்றி நிறுத் தினான். அவள் மார்பின் மெத்தென்ற ஸ்பரிசம் அவனை முழுமையாகத் தாக்க அவன் நிலை மறந்து அவள் இதழ்களைச் சட் டென்று கௌவிக் கொண்டான். அனுசூயா திமிறப் போராடிப் பார்த்து முடியாமல் பணிந்து போனாள். லேசாய் முனகல் வெளிப் பாய்ந்தது. மூச்சு திணறித் திணறி வெளிப்பட்டது. தண்ணீரில் சிக்கியவர்கள் மூச்சுக்கு அலைகிற மாதிரி ஒரு கணத்திற்கு அனுசூயா இரண்டு கைகளையும் அந்தரத்தில் அலைய விட்டுச் சட்டென்று தொய்ந்து போக, இமைகள் மூடிக்கொண்டன. தலை இருக்கையில் நிற்காமல் துவண்டு போயிற்று.

பாலாவை அந்த நிஜம் திடீரெனத்தாக் கிற்று. சட்டென்று விலகிக் கொண்டான். உடம்பில் அலை அலையாய் பயம் இதய மையத்திலிருந்து பரவ ''அனு'' என்றான்.

''அனும்மா'' — என்றான்.

அனுசூயா பதில் அளிக்கவில்லை.

(தொடரும்)

வாசகர் பங்கு

இந்திரா பிறந்தாள்

துணிவும் கம்பீரமும் மிக்க பிரதமர் இந்திராகாந்தியின் பெயரை எங்கள் முதல் பெண் குழந்தைக்குச் சூட்ட மிக ஆவலாய் இருந்தோம். ஆசைப்பட்டது போலவே இந்திரா பிறந்து எங்களை ஆனந்தவெள்ளத்தில் ஆழ்த்தினள்.

உமா மூர்த்தி, தாராபுரம்

கடைசி வரை (முதல்) குழந்தை

குழந்தை பிறந்ததும் வைத்தியச் செலவு. மூன்று வயதில் அட்மிஷனுக்கு அலைச்சல். வளர்ந்ததும், ஆணுக இருந்தால் உத்தியோக வேட்டை. பெண்ணுனல் வரன் வேட்டை. ஒரு வழியாக எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றி விட்டு நிமிர்ந்தால் குழந்தைகள் டாட்டா காட்டிவிட்டுப்போய் விடுவார்கள். வாழ்க்கை இன்பமயமாய் இருக்க கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் தான் முதல் குழந்தை.

திருமதி ராஜம்மாள், சென்னை-5

இலட்சியப் புருஷன்


பதினறு வயது பெண்ணை 55 வயது வாலிபர்(!) மணந்தார் என்று கேள்வியுற்றதும் என்னுள் ஒரு இலட்சியம் தோன்றியது. என்னுல் ஓர் அநாதைப்பெண் வாழ்வுபெற வேண்டும். அதற்கு ஒரு ஆண் மகவைப்பெற்று அருந்தவப் புதல்வனய், என் இலட்சியங்களை அவனுக்குப் புகட்டி வளர்க்கவேண்டும்.

ஜே. பிரபாவதி, திருச்சி-20

பெயர் சொல்ல பிள்ளை

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் காதல் திருமணம் செய்து கொண்ட எங்கள் வாழ்க்கை

முதல் குழந்தை



என்று பிரார்த்திக்க எனக்கு மூன்றுமே பிள்ளைகளாகப் பிறந்தன.

லக்ஷ்மி வாஸன், பம்பாய்

தந்தையைத் திருத்திய தனயன்

ஆண் குழந்தை பிறந்தால் சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விடுவதாக வாக்களித்தார் என் கணவர். அவர் விருப்பம்போல் எங்கள் மகன் பிறந்ததும் சிகரெட்டை அடியோடு விடா விட்டாலும் குறைவாகவே



தாய்க்கு ஒரு தோழி

என் தாயின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு அவளுக்கு நெருங்கிய தோழியாகவும் மகளாகவும் இருந்து வந்தேன். அதைப் போல் என் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு, விரும்பிப் பகிர்ந்து கொண்டு என் பாரத்தைச் சுமக்க உதவும் அருமை மகளையே நான் முதல் குழந்தையாகப் பெற விரும்புகிறேன்.

புவனு சுந்தரம், சென்னை-78

பிரிவுத் துயர் துடைக்க பேரன்

மணவாழ்வைத் துவங்கிய மூன்று மாதங்களுக்குள் கணவனைத் தற்காலிகமாகப் பிரிவது எவ்வளவு துன்பம் என்று புரிந்து கொண்டிருக்கிறேன். நிரந்தரமாகத் தன் கணவனைப் பிரிந்து விட்ட என் மாமியார் முகத்தில் உண்மையான சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமானுல் தாத்தாவின் நிலைவாக அவர் கரங்களில் பேரனைத் தவழச் செய்ய வேண்டும்.

சந்திரா மாதவன் பிள்ளை, சென்னை-

யில் விதி விளையாடிவிட்டது. மாரடைப்பில் என் கணவர் காலமானார். இப்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ள நான் விரும்புவதெல்லாம் அவர் ஆசைப்பட்டது போல் ஆண் குழந்தை பிறந்து அவனுக்கு சிங்கராஜ் என்று பெயரிட்டு அவன் அப்பா வைப்போல் ஒரு நல்ல பிரஜையாக அவனை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

லலிதா, பழவனுதம்

வேண்டாம் பெண்

இலங்கைக் கலவரம் காரணமாக இந்தியா வந்துள்ள நான் முதல் குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். பெண் குழந்தை பிறந்தால் அவளுக்கு மாப் பிள்ளை தேடி இலங்கை சிறைச்சாலைகளில் எல்லாம் ஏறி இறங்க வேண்டுமே!

பூ. சுபாஷினி, கொடைக்கானல்

பலிக்காத சாபம்

மூன்று மூன்றாக மும்முறை பெண்கள் பிறக்க வேண்டும் (அதாவது ஒன்பதுபெண் குழந்தைகள்) என்று என் மாமியார் சபித் தார். ஒரு குற்றமும் அறியாத நான் முதலில் பிறப்பதே ஆணாக இருக்கவேண்டும்



பிடிக்கிறார்.


திருமதி எஸ். லக்ஷ்மி நாகராஜன், பங்களூர்-41

பொன்னான பெண்

என் மனைவி குடும்பம் நடத்தும் பாங்கும், அவள் அவ்வப்போது எனக்குக் கூறும் அறிவுரைகளும், பெரியவர்களிடம் அவள் காட்டும் நற்பண்பும் எதற்கும் முகம் சுளிக் காமல் ஒத்துப்போகும் அவள் சுபாவமும்... முதல் குழந்தையென்ன, பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் அவளைப் போல் பெண்ணாகத் தான் பிறக்க வேண்டும்.

வி. பிச்சை, மாம்பலப்பட்டு





அன்பே வடிவாக ஆண் குழந்தை

திருமணமாகி நான்கு வருடங்களுக்குப் பிறகு முதல் முறை கருத்தரித்தேன். இந்த நான்கு வருடங்களும் ஒரு சிணுங்கல் கூட இல்லாமல் என் கணவர் என் மீது அன்பையும், பரிவையும் அபிஷேகம் செய் தார். அவர் பக்தியினாலும், ஊக்கத்துடன் மருத்துவ சிகிச்சைக்குச் செய்த உதவி யாலும் இன்று பிறக்கப் போகும் குழந்தை அ ரைப்போல் அன்பு செலுத்தும் ஆணாகத் தான் இருக்க வேண்டும்.

திருமதி ஷாகிரா, சத்தரை கிராமம்

அப்பாவின் மனம் மாற்ற மகள் வேண்டும்

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நான் முதல் குழந்தையை எதிர்பார்க்கும் இத்தருணத்தில் நெஞ்சில் ஈரமில்லாமல் என் கணவர் என் பிறந்தகத்திலிருந்து மூன்று சவரன் வந்தால் தான் சீமந்தம் என்கிறார். இவருக்குப் புத்தி புகட்டவே என் முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்து இவரைப் போலவே பொருளாசை கொண்டவருக்கு வாழ்க்கைப்பட வேண்டும்.

திருமதி கீதா, சென்னை

இரண்டும் பெண்ணே

'போ! பெண் குழந்தைதானா!' என்று பெண்களே அலுத்துக் கொள்வதைப் பார்க் கும் போது முதல் மட்டுமின்றி இரண் டாவது குழந்தையும் பெண்ணாகவே பிறக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

டி. எஸ். வசந்தகுமாரி, கடலூர் துறைமுகம்

பிரித்து வைக்கும் பெண் வேண்டாம்

ஐந்து நாத்திகளை உடைய நான் முதல்

இருவருக்கு மாப்பிள்ளை தேடல், நகை, வரதட்சிணை, சீர், பிரசவம் மற்ற மூவருக்கும், சடங்கு, தொடரும் படிப்பு என்று நீண்டு கொண்டே போகும் செலவுகளைக் கணவருடன் பகிர்ந்து கொள்ள அவரைப் பிரிந்து முந்நூறு மைல்களுக்கு அப்பால் வேலை செய்கிறேன். எனக்குப் பெண் குழந்தை ஆசையே போய் விட்டது.

திருமதி இராணி சேவியர், அறந்தாங்கி

பொன்னியின் செல்வன் பிறக்க வேண்டும்

பொன்னியின் செல்வனைப் பதினைந்து முறை படித்தும் எனக்கு அலுக்கவில்லை. அதில் வரும் அருள்மொழி வர்மனின் பாத்திரம் என் நெஞ்சில் நிறைந்திருக்கிறது. அவனைப் போல் என் மகனும் திகழ வேண்டும். என் முதல் ஆண் குழந்தைக்கு அருள்மொழிராஜன் என்றே பெயர் சூட்டப் போகிறேன்.

எஸ். எஸ். செண்பகராஜன், சிவகாசி

மாறியது மனம்

'முதல் குழந்தை எதுவானால் என்ன, நல்லபடியாகப் பிறக்க வேண்டும்' என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன் — பிரசவ வலி ஆரம்பிக்கும் வரை... 'அப்பப்பா இந்த வேதனைக்கு இன்னொரு பெண்ணும் ஆளாக வேண்டுமா? அவளை நான் பெற வேண்டுமா? வேண்டவே வேண்டாம்...' ஆனால் இயற்கை விதித்த வேதனையை அனுபவிக்க எனக்குப் பெண்ணே பிறந்தாள்.

ஜே. ரமாதேவி, ஃபாரிகூடா, ஒரிஸ்ஸா

எதிர்பார்ப்பு இல்லை, ஏமாற்றம் இல்லை

இரண்டு குழந்தைகளும் பெண்களாகவே பிறக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அப்படியே நடந்துள்ளது. வேலைக்குப் போகும் எனக்கு உதவியாக இருந்து வருகின்றனர். காலா காலத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டால் பிறரை எதிர்பார்க்காமல் வாழப் பழகிக் கொண்டுவிடுவோம். ஆண் பிள்ளைகளைப் பெறுவதால் தோன்றும் எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் எங்களுக்கில்லை.

சாவித்திரி சுந்தரம், சென்னை-90

தமிழ் மகன்

கர்ப்பமாக இருந்த போது அமரர் ஜீவானந்தத்தின் மேடைப் பேச்சைக் கேட்க நேர்ந்தது. ஆண் குழந்தை பிறந்தால் அவர் பெயர் வைத்து இலக்கிய ரஸனையுடன் வளர்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். என் மகன் பூரண சந்திர ஜீவாவின் முதல் கதை 'தாமரை' பத்திரிகையில் வெளியான நாளை மறக்க முடியாது.

பி, முனியம்மாள், நாகப்பட்டினம்

அருமை மருமகளைத்தர ஆசைப்பிள்ளை வேண்டும்

வேற்று ஜாதிப் பெண்ணான என்னை என் மாமியார் படுத்தாத பாடு இல்லை. நினைக்கவே அருவருப்பாகவும் வேதனையாகவும் இருக்கும் அளவுக்கு என்னைக் கட்டுப்படுத்தி, துன்புறுத்தி... அதற்காகவே என் வயிற்றிலுள்ள கரு பிள்ளையாக இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்தேன் — வரப்போகும் மருமகளை அன்பாக, மனம் நோகாமல் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில். விருப்பப்படியே மகன் பிறந்தான்.

ஆர். சுலோசனா, சென்னை

கவலையில்லாமல் இருக்க

முதல் குழந்தை பெண்ணாக இருந்துவிட்டால் அடுத்ததும் பெண்ணாகப் பிறந்து விடுமோ என்ற கவலையும் ஆண் குழந்தை வேண்டும் என்ற ஏக்கமும் மனத்தை அரிக்கத் தொடங்கிவிடும். எனவே முதலில் ஆண் குழந்தையையே விரும்பினேன். விருப்பம் நிறைவேறியது.

எஸ். ராஜி, திருச்சி-10

என் மகளின் அண்ணன்

'இது என் அண்ணன் வாங்கிக்கொடுத்தது'. 'நேரத்தோடு போகாவிட்டால் அண்ணன் கோபிப்பான்' என்று தோழிகள் பேசிக் கொள்ளும்போதும், பாசமலர் போன்ற படங்களில் அண்ணன் தங்கையிடம் பொழியும் அன்பைக் கண்டபோதும் எனக்கு அண்ணன் இல்லாத குறை பெரிதாகத் தோன்றியது. எனவே எனக்குப் பிறக்கும் முதல் குழந்தையாவது ஆணாகப்பிறந்து அடுத்து பிறக்கும் பெண்ணுக்கு அன்பு அண்ணனாகத் திகழ வேண்டும்.

ஆர். வாசுகி ரத்தினவேலு, பம்பாய்-37

பிரார்த்தனை பலித்தது

என் பதினான்கு வயது தங்கை திடீரென்று இறந்ததும் அவளே எனக்குப்பெண்ணாகப் பிறந்து நீண்ட ஆயுளுடன் நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும் என்று பிரார்த்தித்தேன். அப்படியே நடந்தது.

திருமதி ஆண்டாள் ராஜகோபால்,
திருநெல்வேலி


ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடைவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். எஸ். செண்பகராஜன்
80, பட்டித் தெரு, சிவகாசி.

இலவசமாகப் பெறுவீர்

உடனடி சக்திதரும்

க்ளுகோன்-டி® யுடன்




கவர்ச்சியான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூன்

உடனடி சக்தி தரும் உங்கள் தினசரி பானத்தைக் கலக்க அருமையான வழி. 400 கிராம் க்ளுகோன்-டி பாக்கெட் டுடன் பிரகாசமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூனை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விட்டமின்-டியுடன் கால்ஷியம் மற்றும் பாஸ்பரஸ்ஸினைக் கொண்ட க்ளுகோன்-டி புத்துணர்ச்சி தருவது, குளிர்ச்சியானது, சக்தி தருவது. பால், தேநீர், காபி, தண்ணீர் மற்றும் ஐஸ்-டன் கலக்கியோ அல்லது அப்படியேயோ அருந்தலாம். க்ளுகோன்-டி யுடன் கிடைக்கும் இலவச ஸ்பூனைக் கொண்டு கலக்கிக் குடிக்கலாம்.






வரம்புக்குட்பட்ட இருப்பு:
குறிப்பிட்ட விற்பனைத் தலங்களில் மட்டுமே கிடைக்கும்.

GLL-9686

உடனடி சக்தி பெற—க்ளுகோன்-டி®




கோலோன் நகரக் காட்சி

4

தென்னாப்பிரிக்க இனவெறியர் போத்தாவினும் வம்பில் செய்யதும் – போத்தா எதிர்ப்பாக பான் நகர பீத்தோவன் சதுக்கத்தில் நடைபெற்ற நிறவெறி எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டதும் என் பயணத்தில் மறக்க இயலாத அநுபவங்கள். நம்மூர் அரசியல் பொதுக் கூட்டங்களுக்கும் மேற்கு ஜெர்மனியின் தலைநகரில் நான் பார்த்த பொதுக் கூட்டத்துக்கும் உள்ள சில வித்தியாசங்களை இங்கே சொல்லியாக வேண்டும். நம் நாட்டுப் பொதுக் கூட்டங்களோடு ஒப்பிட அது பயன்படக் கூடும். பீத்தோவன் சதுக்கத்தில் கும்பலாக ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் என்று கூடி அமரவோ, நிற்கவோ இல்லை. சுமார் நூற்றைம்பதுபேர் கொத்துக் கொத்தாக ஐந்து பேர், நாலு பேர் என்று தனித்தனியே கூடிப் பீர் அருந்தியபடி அல்லது கோக் பருகியபடி திரளாக நின்று கொண்டிருந்தனர். முதலில் ஒரு கறுப்பர் பேசினார். அடுத்த பத்து நிமிஷம் கிட்டார் முதலிய மேடை வாத்தியங்களுடன் பாடினார்கள். மறுபடி ஒரு வெள்ளை யுவதி ஆவேசமாகக் கைகால்களை ஆட்டி மேடையிலே 'குங்பூ' டெமான்ஸ்ட்ரேஷன் செய்வது போல் நிறவெறியை எதிர்த்துப் பேசினார். இடையிடையே பொருத்தமான இடங்களில் கைத்தட்டல் பெற்றார். மீண்டும் வாத்தியங்களுடன் இசைபாடல். இப்படியாக இரவு பத்தரை மணி வரை கூட்டம் நடந்து முடிந்தது. அனல் பறக்கவில்லை. கனல் கக்கவில்லை. கல்லெறி, சோடாபுட்டி வீச்சு அசம்பாவி

மேற்கு ஜெர்மனி அரசியல்



நிலக்கரி தோண்டும் பக்கெட் வீல்
(நூற்பதாயிரம் ஆட்களின் வேலையைத் தானே செய்ய வல்லது)

ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்

நா. பார்த்தசாரதி

தங்கள் எதுவும் இல்லை. எங்கோ இருந்து வந்த போத்தாவை எதிர்க்கும் சாக்கில் சொந்த நாட்டில் பொதுச் சொத்துக்கள் பாழடிக்கப்படவில்லை. எதிர்ப்புக் கூட்டம் கூட நாகரீகமாகவும், இரசிக்கும்படியாகவும் இருந்தது. ஒரேயடியாய் மணிக்கணக்கில் சொற்பொழிவுகளை மக்கள் தலையில் திணிக்காமல் பேச்சு — பாட்டு என்று மாற்றி மாற்றி அமைத்திருந்ததும், எந்த ஒரு பேச்சும் பதினைந்து நிமிஷத்துக்கு அதிகமாகப் போகாமல் இருந்ததும் குறிப்பிடத் தக்க அம்சங்கள்.

இந்த நாகரீகமும் நயமும், மேற்கு ஜெர்மன் அரசியலையும், அரசியல் கட்சிகளையும் பற்றிப் பார்க்கும் போது இன்னும் தெளிவாகவே நமக்குப் புரியும். நம் நாட்டில் இருப்பதைப் போல மேற்கு ஜெர்மனியில் வதவதவென்று கட்சிகள் இல்லை. முக்கியமான அரசியல் கட்சிகள் நான்கு தான். சோஷியல் டெமாக்ரட்ஸ் (S.P.D.), ஃப்ரீடெமாக்ரட்ஸ் (F.D.P.) கிறிஸ்டியன் டெமாக்ரட்ஸ் (C.D.U.) கிரீன்ஸ் (Greens). இவற்றில் பவேரியா மாநிலத்தில் மட்டும் கிறிஸ்டியன் டெமாக்ரட்ஸ் தங்களை C.S.U. என்று அழைத்துக் கொள்கிறார்கள். பசுமையாளர்கள் கூட்டம் புதியவர்கள்தான். பழைய கட்சிகள் முதல் மூன்று மட்டுமே.


1982 வரை சுமார் பதினோராண்டுக் காலமாக சோஷியல் டெமாக்ரட்ஸும் ஃப்ரீடெமாக்ரட்ஸும் தொடர்ந்து தங்கள் கூட்டணி அரசை (SPD and FDP Coalition) நடத்தி வந்தார்கள். 1982 அக்டோபரில் இந்தக் கூட்டணி கவிழ்ந்தது. சோஷியல் டெமாக்ரட்ஸ் சான்ஸலர் ஹெல்மட்ஷ்மிட் (Helmut Schmidt) மீது கிறிஸ்டியன் டெமாக்ரட்ஸும் ஃப்ரீடெமாக்ரட்ஸும் சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிப் பதவியிறக்கினர்.

கிறிஸ்டியன் டெமாக்ரட்ஸ் தலைவரான டாக்டர் கோல் (Dr. Kohl) புதிய சான்ஸலராகி எஃப். டி. பி. ஒத்துழைப்புடன் புதிய அரசு அமைத்தார்.

கோலின் புது அரசில் 'Less state more market' — என்பது போன்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. வேலைவாய்ப்பு, ஐரோப்பிய ஒற்றுமை அல்லது ஒருங்கிணைப்பு (Unification of Europe) போன்றவையும் முன்னுரிமைக்கேற்ற இடம் பெற்றன. இருந்தும் இந்தப் புதிய அரசு சில மாதங்களே நீடித்தது. 1983 மார்ச்சில் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே ஜெர்மன் பாராளுமன்றம் (Bundestag) கலைக்கப்பட்டுத் தேர்தல் நடந்தது.

தேர்தலில் 1983–1987 கால கட்டத்துக்கான ஆட்சியை நடத்தப் போதுமான மெஜாரிட்டி கோல் தலைமையிலான கூட்டணிக்குக் கிடைத்து விட்டது. ஆனால் யாரும் எதிர்பாராத அதிசயமாக—முதன் முறையாய் பசுமையாளர்கள் (Greens) தேசிய அசெம்பிளியில் கணிசமான இடங்களை வென்றனர். காடுகளை அழியாமல் காப்பது, நியூக்ளியர் சாதனங்களை எதிர்ப்பது, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது ஆகிய பசுமையாளர்களின் கொள்கைகள் மக்களைக் கவர்ந்திருப்பது தெரிந்தது. இதுவரை வெறும் இயக்கமாக மட்டும் இயங்கி வந்த பசுமையாளர்கள் இப்போது ஓர் அரசியல் கட்சியாக இணைந்து பாராளுமன்றத்தில் இயங்க வேண்டியதாயிற்று. 1979–ல் தொடங்கிய இயக்கம் பசுமையாளர்களுடையது. இன்னும் இளைஞர்களையே அதிகம் கவர்கிற இயக்கமாயிருக்கிறது. நெடுங்காலமாக ஜெர்மன் பாராளுமன்றத்தில் மூன்றே மூன்று அரசியல் பிரிவுகள்தான் என்ற நிலையை மாற்றி நான்காவது தரப்பாக இப்போது Geens வந்திருக்கிறார்கள்.

தற்போதுள்ள ஜெர்மன் அரசு மின்சக்தி சேமிப்பில் (Energy Saving) கவனம் செலுத்துவதற்கும், சுற்றுப்புறச் சூழல் நலனில் (environments) அதிக அக்கறை காட்டுவதற்கும், காடு வளர்ப்பு, இயற்கை இவற்றில் கவனம் கொள்வதற்கும் முக்கிய



○ அரசியல் கட்சிகள் பற்றிய கார்டூன்


○ சான்ஸலர் கோல்

காரணமே பகைமையாளர்கள்தான். பகைமையாளர் இயக்கத்தின் முக்கால்வாசிக்கோரிக்கைகளைத் தாங்களே நிறைவு செய்து முடித்து விட்டால் அவர்கள் செல்வாக்கில் பெரும் பகுதி தங்களுக்கு வந்து விடும் என்று அரசு நினைக்கிறது.

டாக்டர் கோல் தலைமையிலான தற்போதைய கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கையில் பிரபலமான ஒன்று ஜெர்மானிய ஒற்றுமை. பொதுக் கலாச்சாரம், பொது மொழி, பொது வரலாறு இவற்றைக் கொண்ட ஜெர்மனியின் பிரிவுகள் ஒன்று பட்டுப் பூர்ண ஜெர்மனி (Complete Germany) உருவாக வேண்டும். அந்த முழுமையான ஜெர்மனி சமாதானமும் சுதந்திரமும் நிறைந்ததாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கிழக்கு ஜெர்மன் அதிபர் எரிக் ஹோனெக்கர் (Erich honsik:r) மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டதும் அதன் விளைவாய் ஒற்றுமைக் கருத்து பலப்படும் என்று எண்ணியதும் இதன் விளைவுகளே. இறுதியில் கிழக்கு ஜெர்மன் அதிபர் மேற்கே வராததோடு, ''ஜெர்மனியின் பிரிவினை என்பது இறுதியானது — முடிவானது'' என்று அறிக்கையும் விட்டுவிட்டார். ஆயினும் கலாசார மொழி அடிப்படையில் ஒற்றுமை நம்பிக்கை மக்களுக்கு இன்னும் இருக்கிறது.

டாக்டர் கோல் தலைமையிலான கூட்டு அரசின் மேல் ஜெர்மானிய மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் காரணமாக இருக்கும் முக்கிய கொள்கைகளில் ஒன்று இந்தப் 'பூர்ண ஜெர்மனி'க் கொள்கை.

நாங்கள் நியூகிளியர் சாதனங்களை எதிர்க்கும் பகைமையாளர்களைப் பார்த்துப் பேசிய சூட்டோடு மேற்கு ஜெர்மனியின் மிக முக்கிய நியூகிளியர் ஆராய்ச்சி நிலையமாகிய 'யூலிக்' கிலுள்ள நிலையத்தை (Centre for nuclear research at Julich) யும் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

இந்நிலையத்திற்குள் நுழையவும் சுற்றிப் பார்க்கவும், பாதுகாப்பும், கட்டுப்பாடும் மிகமிக அதிகமாயிருந்தன. பாஸ்போர்ட்டைக் கேட்டு வாங்கிச் சரிபார்த்து உள்ளே அனுமதிக்கும் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாள அட்டை வழங்கிய பின்னரே அனுமதித்தனர். பாஸ்போர்ட் முதலிய பிரயாணப் பத்திரங்களை எப்போதும் கோட்டின் உள்புறப் பாக்கெட்டில் வைத்து எங்கும் உடனெடுத்துச் செல்லும் வழக்கமுள்ள எனக்குப் பிரச்சினை எழவில்லை. பாஸ்போர்ட்டைக் கையில் எடுத்து வராத எங்கள் குழுவினர் சிலரைப் பற்றிக் கடுமையான சோதனை — பரிசீலனைக்குப்பின்பே யூலிக் நிலையத்தில் உள்ளே அனுமதித்தனர். பிரமிக்கத்தக்க ஆராய்ச்சி நிலையம், விஞ்ஞான விவேக சாதனை என்றெல்லாம் தோன்றினாலும் 'இயற்கை அழிந்து பசுமை கெட்டு அமில மழை பொழியும்' — என்ற பகைமையாளர்களின் எச்சரிக்கையும் கூடவே நினைவுக்கு வந்தது.



'யூலிக்' நிலையத்தருகே நம்முடைய நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தைப் போன்ற ஒரு பெரிய அரங்கத்தைப் பார்த்தோம். இராட்சத பக்கெட் வீல்கள் இயங்கிக் கொண்டிருந்தன. வேலையாட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பழுப்பு நிலக்கரி எடுத்தது போகக் குவிந்த மண்மலைகள் நம்முடைய நெய்வேலியில் அப்படியே மொட்டை மலைகளாகவே இருக்கின்றன. ஆனால் 'யூலிக்'கில் அம்மண் மலைகளில் மரம் செடி கொடிகள் வளர்ந்து பசுமை மயமாகக் காட்சியளிக்கின்றன.

எஃப். டி. பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்த போது இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்குப் படிக்க வரும் மாணவர்கள் பற்றிய பேச்சுவந்தது.

''இந்திய மாணவர்கள் மதிநுட்பமுள்ளவர்களாக — உடன் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய ஒரே பிரச்சினை படிப்பு முடிந்ததும் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிப் போக மறுப்பதுதான்! இங்கேயே எங்காவது — ஏதாவது சுமாரான வேலை கிடைத்தால் கூடப் போதும். தங்கி விடுகிறோம் — என்கிறார்கள்'' — என்று அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் சிரித்துக் கொண்டே கூறிய போது 'நமது மாணவர்களின் தேசபக்தி இங்கும் இப்படிச் சந்தி சிரிக்கிறதே' என்று எண்ணிக் கொண்டேன்.

அறைக்குத் திரும்பிய போது பிந்தரான்வாலேயின் மரணமும் பொற்கோவில் வசப்பட்டதும் பற்றிய பஞ்சாப் செய்திகள் 'ஹெரால்ட் ட்ரிப்யூன்' மூலம் தெரிய வந்தன. பஞ்சாப் செய்திகள் அந்த வெளிநாட்டுத் தினசரியிலும் மெல்ல முதல் பக்கத்தில் இடம் பிடிக்க ஆரம்பித்திருந்தன. மறுநாள் நாங்கள் கொலோன் நகர் போய் அங்கிருந்து 'ஹாம்பர்க்' பறக்க வேண்டும். பானுக்குத் தனி விமான நிலையம் கிடையாது — 'கொலோன் பான்' — இருநகரங்களும் அருகருகே இருப்பதால் இரண்டிற்கும் சேர்த்து ஒரே விமான நிலையம் கொலோனில்தான்! (தொடரும்)



நடுவர் படும் பாடு

கிரிக்கெட், கால்பந்து, ஹாக்கி மாட்சுகள் நடக்கும்போது 'ரெஃபரி' என்ற 'நடுவர்' இருக்கிறாரே; இவருடைய வேலை லேசுப்பட்டதா? ஒரு நிகழ்ச்சியைப் பாருங்கள். 1983... பம்பாய்... கல்கத்தாவைச் சேர்ந்த இரண்டு கால் பந்தாட்ட குழுக்களுக்கிடையேபந்தயம். கோடின்ஹோ என்பவர்தான் நடுவர். தப்பு ஆட்டம் ஆடியதற்காக அவர் ஒரு குழுவின் தலைவனை எச்சரித்தார். அவன் உடனே அவர் முகத்தில் காறித் துப்பினான்! கோடின்ஹோ உடனே அவனை அந்த மைதானத்தைவிட்டு வெளியேறச் சொன்னார். கோபமடைந்த அந்தக் குழுவினர் பலர் நடுவரைத் தாக்கினார்கள். அவருடைய உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது! கடைசியில் போலீஸ் வந்து நிலைமையைச் சமாளித்தது!

ஒரு நடுவராக இருப்பதற்குத் திடமான உடல், மனம் இரண்டும் வேண்டும்; ஒழுங்கு வேண்டும். எத்தனையோ ஆட்ட விதிகளைப் படித்து மனப்பாடம் செய்ய வேண்டும். பரீட்சைகள் எழுதவேண்டும். கால்பந்து நடுவர்கள் பல பரீட்சைகளில் தேற வேண்டும். அவர்கள் 2000 மீட்டர் தூரத்தை 12 நிமிஷங்களில் ஓடிக் கடக்க வேண்டும். 400 மீட்டர்களை 75 விநாடிகளிலும் 50 மீட்டர்களை 8 விநாடிகளிலும் ஓடி முடிக்க வேண்டும். கிரிக்கெட் நடுவர்களின் கண் பார்வை, காது, ரத்த அழுத்தம் ஆகியவை அடிக்கடி பரிசோதனை செய்யப்படுகின்றன. அந்தச் சோதனைகளில் தேறுதவர்கள் நடுவர்களாக இருக்க முடியாது. நடுவர்கள் 'பௌல்' பண்ணுபவர்களின் தலையிலுள்ள கிரீம் பந்தில் பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பந்திலுள்ள தையல் எங்காவது விட்டிருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். மணிக்கு 125 கிலோமீட்டர் வேகத்தில் பறந்து வரும் கிரிக்கெட் பந்து சரியான இடத்தில் விழுகிறதா என்று ஒரு விநாடியின் ஒரு பாகத்தில் பார்த்து அறியும் விழிப்பு உள்ளவராக இருக்க வேண்டும்!

பெரிய 'மாட்ச்'சுகளில் நடுவராவதற்கு ஒருவர் 10 முதல் 15 வருஷம் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் பணமும் அதிகம் கிடைப்பதில்லை. 'பாஸ்கட் பால்' பந்தயங்களில் நடுவர்களுக்கு எந்த சன்மானமும் கிடையாது. சில சமயங்களில் ரயில் சார்ஜ், ஹோட்டல் செலவு இவை மட்டும் கொடுக்கப்படுகிறது. ஹாக்கி, கால்பந்து, சடுகுடு ஆட்ட நடுவர்களுக்கு 25 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை கொடுக்கப்படும். ஐந்து நாள் கிரிக்கெட் 'டெஸ்ட் மாட்ச்'சுகளில் நடுவராக இருந்தால் அவருக்கு 3500 ரூபாய்... அது தவிர போகவர விமானச் செலவு, ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கும் செலவு இவையும் உண்டு. ஆனால் ஒரு டெஸ்ட் மாட்ச் அம்பயர் ஆவது சுலபமல்ல! ஸ்வரூப் கிஷன் அந்த நிலையை அடைய 30 வருஷங்கள் ஆயிற்று! கிரிகெட் மாட்ச் காப்டன்கள் நடுவர்களைப் பற்றி மோசமாகச் சொல்லி விட்டார்கள் என்றால் நடுவர்கள் அதோடுதீர்ந்தார்கள்! 1983—ல்அகமதாபாத்தில்டெஸ்ட் மாட்ச் நடந்தபிறகு மேற்கிந்திய தீவு குழுவின் காப்டன் கிளைவ் லாயிட் 'தி டெலிகிராப்' என்ற நாளிதழில் பின் வருமாறு எழுதினார்: ''இந்த ஆட்டத்தில் நடுவர்களாக இருந்த ஹனுமந்தராவ், கே. பி. ராமஸ்வாமி இருவரும் நான் பார்த்ததிலேயே மோசமான நடுவர்கள்! இனிமேல் இந்திய கிரிக்கெட் சங்கம் இந்த இருவருக்கும் வாய்ப்புக் கொடுக்காது என்று நம்புகிறேன்!''

அந்த இரண்டு அம்பயர்களுக்கும் பிறகு வாய்ப்புக் கிடைக்கவேயில்லை! நடுவர்களைத் தாக்கும் ஆட்டக்காரர்கள் அபூர்வமாகத்தான் தண்டிக்கப்படுகிறார்கள்!

—அனிதா ராமச்சந்திரன்

அம்பயர் ஸ்வரூப்கிஷன்புகைப்படம்:பாலாஜி



ஜலதோஷம் பிடித்தால் குழந்தையின் உறக்கம் நாசம்

விக்ஸ் வேப்போரப்பினால் இரவோடிரவாக சுகம்

(அவ் வேலையைச் செய்வது அன்னையின் பாசம்)

ஜலதோஷம்—அதனால் பாதிக்கப் பட்டவரே அதன் தொல்லையை அறியமுடியும். உறங்க முடியாது... மூக்கடைப்பு...சளி...இருமல்...உடல் முழுவதும் வலி...இவ்வளவையும் பாவம் குழந்தை தாங்க முடியுமா?

மாதாவின் மந்திரக்கரம் அறியுமே ஜலதோஷத்தின் நிவாரணத்தை. அப்பாசக்கரம் தொடுவது விக்ஸ்... அதை குழந்தையின் மூக்கு, தொண்டை, நெஞ்சு ஆகியவற்றில் அன்புடன் இதமாகத் தடவுகிறார் அன்னை...அதிலும் முக்கியமாய் முதுகிலே! அப்படித் தடவாவிட்டால் அம்முயற்சி முழுதும் அரைகுறை யாகிவிடும். தாயின் பாசம் குழைத்துத் தடவப்படும் விக்ஸ், இரட்டைச் செயல் புரிகிறது: ஒன்று, மருந்து கலந்த (மெடிக்கேட்டட்) இதன் ஆவி மூக்கடைப்பை நீக்குகிறது. இரண்டு, சருமத்தில் தடவப்படுவதால் உடல் வலியைப் போக்குகிறது. அன்பும் பாசமும் இணைந்த அன்னையின் விக்ஸ் சிகிச்சையால், குழந்தை அயர்ந்து உறங்குகிறது. விடியும்வரை...முன் போலவே குழந்தை ஆரோக்கியமும் சுறுசுறுப்பையும் அடைகிறது!





விக்ஸ்
வேப்போரப்

**சுவாச நிவாரணம் அளிக்கிறது
நிவாரண அனுபவத்தை
உணரவைக்கிறது.**

RHL/VR-6 TAM R

அடுத்த வாரம்

பாகிஸ்தானில் அரசியல் கைதிகள்

—லண்டன் பத்திரிகை தெரிவிக்கும் பயங்கர உண்மைகள்



நான் விரும்பும் வேட்பாளர்

திருச்சி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தினர் ஜனாப் எம். கே. எம். அப்துல்சலாம் அவர்களையே மறுபடியும் தேர்ந்தெடுத்தால் திருச்சி மாவட்ட மக்களுக்கு நன்மை பயக்கும். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டு தலைவர் ஸ்ரீ கே. அனந்தநம்பியாரைத் தேர்தலில் தோற்கடித்த பெருமை இவருக்கு உண்டு. அனந்த நம்பியாரோ ரயில்வே மந்திரியாக இருந்த கே. சந்தானம் அவர்களையே தோற்கடித்தவர்.

வாழ்க்கையில் ஓரளவு வசதியுள்ளவராயிருப்பதால், தாம் செய்த சேவைகளுக்குப் பிரதிபலனோ, விளம்பரமோ எதிர்பார்க்காதவராயிருக்கிறார். இவரை வசதியற்ற ஏழைகள், எந்நேரமும் அணுகி ஜாதி வித்தியாசமின்றி, கட்சி வேறுபாடின்றிப் பழகலாம். முழு ஒத்துழைப்பையும் அளிப்பார். எப்பொழுதும் புன்னகை பூத்த முகம். கோபம் என்பதையே பார்க்க முடியாது. தாம் மறுபடியும் தேர்தலில் நிற்க வேண்டும் பதவி வாய்ப்புப் பெற வேண்டும் என்ற எண்ணமுள்ளவராக இருந்தால் எவ்வளவோ வெற்றி விழாக்களும் ஆடம்பரமான விளம்பர விழாக்களும் நடத்தியிருப்பார். இது விளம்பர யுகம் அல்லவா? ஆனால் இதற்கு அப்பாற்பட்ட தளும்பாத நிறைகுடம் இவர்.

இவரை அகில இந்திய ரயில்வே நாணய அலுவலகத் தலைவராக டெல்லியில் தேர்ந்தெடுத்தனர். ரயில்வே நாணய அலுவலகத்தில் உள்ளவர்கள் மேல் பதவிக்குச் செல்ல வேண்டுமென்றால் அதாவது பொருளாளராக (Cashier) ஆகவேண்டுமானால் ரூ. 3000 டிபாசிட் கட்ட வேண்டும் என்ற சட்டம் இருந்தது. இதைக் கட்ட முடியாததால் எளியவர்கள் பதவி உயர்வு பெற முடியவில்லை. இன்ஷூரன்ஸ் கொடுக்கும் சலுகை ரயில்வே சட்டத்தில் இடம் பெறவில்லை என்று கண்டார். அச்சலுகை ரயில்வே சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்று பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி, மத்திய அமைச்சர்கள் ஜனாப் ஷா நவாஸ்கான், அபித்அலி, எஸ். வி. ராமசாமி இவர்களையெல்லாம் சந்தித்துப் பேசி அத்திட்டத்தைக் கொண்டுவர அரும்பாடு பட்டார்..பிறகு அது சட்டமாக உருவாயிற்று. அகில இந்தியாவுக்கும் பயன்படும் திட்டமாக அமைந்தது.

திருவானைக்கோயில் அருகில் உள்ள திருமஞ்சனக் காவேரி என்று புகழப்படும் சிறிய ஆற்றில் மழை நாட்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நடைபாதை மிகவும் சீர்கெட்டு மக்கள் ஸ்நானம் செய்யக்கஷ்டப்படுவதைக் கண்டார். மாவட்ட இன்ஜினியரை அழைத்து வந்து காண்பித்து மக்கள் நீராடப் படித்துறை கட்டவும் நடைபாதை அமைக்கவும் ஏற்பாடு செய்தார். அரசாங்கத்துடன் இதற்காகப் போராடினார்; வெற்றியும் பெற்றார் இந்த மக்கள் தொண்டர்.

ஹைதராபாத். அ. ஸ்ரீனிவாஸன்.



தளும்பாத நிறைகுடம்

○ ஸ்ரீ. சிவக்குமார், பழனி.
? படாதிபதிகளுக்கு சிலுக்கை விட்டால் வேறு கதி இல்லை என்று சொல்லியிருக்கிறீரே? இருப்பது அனுராதா புகத்தில் புரிகிறதா?
! அனுராதா கூட இல்லை; இப்போ புதிதாக வடக்கே இருந்து ஒருவர் அவர் இடத்தைப் பிடிக்க வந்திருக்கிறாராம். வந்து விட்டுப் போகட்டும். கேள்வியிலும் சரி, பதிலிலும் சரி சிலுக்கைச் சொன்ன போது அவரைப் போன்ற 'ஆட்டக்காரர்'களின் ஒரு சின்னமாகத்தான் அவர் பெயரைக் கூறியிருக்கிறது.

○ பி. ப. சுதர்ஸன், கொச்சின்–16.
? அன்றும் இன்றும் என்றும் நம்மை ஆண்டு வரும் இறைவனை ஆண்டவன் என்று இறந்த காலத்தில் கூறுவது ஏன்?
! அகராதியை எடுத்துப் புரட்டுங்கள். ஆள்பவன் என்று நிகழ்காலத்திலேயே பொருள் போட்டிருக்கும்.

○ ஆர். ஜார்ஜ், கருங்கல்.
? இந்திராவைக் கடுமையாகத் தாக்கி எழுதியே விற்பனையை அதிகரித்து வந்த பத்திரிகை யாளர் நிலைமை?
! இந்திராவைக் கடுமையாகத் தாக்கி எழுதி – எந்தப் பத்திரிகையும் விற்பனையை அதிகரித்துக் கொள்ள முடிந்ததில்லை. அது சாத்தியமுமில்லை. ஆரோக்கியமான விதத்தில் அவர் செயல்களை விமர்சித்துத்தான் மக்கள் ஆதரவைப் பெற்று வந்துள்ளன. தனி நபர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கி எந்தப் பத்திரிகையும் விற்பனையைப் பெருக்கிக் கொள்ள முடியாது. மக்களின் பேராதரவையும் பெற இயலாது.

○ கே. கணேஷ், சென்னை–6.
? விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் வதந்திகளைப் பரப்புவோரை என்ன செய்யலாம்?
! நம்பாமலிருக்கலாம்!

○ எஸ். தேவராஜ், வஞ்சூர்.
? உட்கட்சிப் பூசல் இல்லாத கட்சி தமிழகத்தில் உண்டா?
! இருக்கிறதே. ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம்!

○ வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.
? கல்கி தன்னை அறியாமலேயே ரேய்னால்ட்ஸின் பாதிப்புக்கு ஆட்பட்டிருந்தார் என்கிறாரே க. நா. சு. உங்கள் பதில்?
! தேவலாமே! 'தன்னை அறியாமலே' என்று புதிதாக இப்போது சேர்த்துக் கொண்டிருக்கிறார் போலும்! அந்த அளவுக்கு முன்னேற்றம் தான்! ரேய்னால்ட்ஸ் மட்டுமென்ன, ஹியூகோ டிக்கென்ஸ், டூமா, வோட்ஹவுஸ் போன்ற எத்தனையோ பல எழுத்தாளர்களின் நூல்களைப் படித்த கல்கி, அவர்கள் எழுத்துக்களின் பாதிப்புக்கு உள்ளாகித்தான் இருப்பார். ஐயமில்லை. வேறு எழுத்தாளர்களின் பாதிப்புக்கு உள்ளாகாமல் எந்த ஒரு எழுத்தாளனுமே இருக்க முடியாது. நாம் படிக்கிற ஒவ்வொரு நூலும் ஏதேனும் ஒருவிதத்தில் நம்மிடம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தவே செய்கிறது. கல்கி அவர்களின் பாதிப்புக்கு உள்ளாகி அவரைப்போல் எழுத முயன்ற எழுத்தாளர்கள் எத்தனை பேர் என்பதைச் சிந்தியுங்கள். கல்கி அவர்களின் எழுத்தால் தமிழகம் பாதிப்புக்குள்ளாகி இங்கு எத்தனை ஆரோக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன என்பதை யோசியுங்கள். மனம் விசாலமடையும்.


○ டி. ராஜேந்தர்


○ ம. பொ. சி.

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
? மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட உறவைக்காத்த கிளியும் எதிர்பார்த்த அளவு வெற்றியடையாமல் போனதற்குக் காரணம்?
! முதல்வரின் செயல்களைக் கேலி செய்து தாக்கி அதில் பல வசனங்கள் இருந்தனவாம். முதல்வர் நோயுற்று மருத்துவமனை சென்றதால் இந்நேரத்தில் அந்த வடயர் வசனங்களுடன் படத்தை வெளியிடுவது நன்றாயிராது என்று டி. ராஜேந்தர் தாமே வெட்டிவிட்டாராம். இதனால் படம் துண்டாடப்பட்டதில் சோபிக்காமல் போய்விட்டதாம். எதிர்பார்த்த வெற்றி கிட்டாததற்குக் காரணம் இதுதான் என்று அடித்துச் சொல்ல முடியா விட்டாலும் டி.ராஜேந்தரின் அந்தப் பண்பாட்டைப் போற்றத்தானே வேண்டும்!

○ என். விக்னேஷ், சிதம்பரம்.
? மழைக்காலத்தை எப்படி ரசிப்பீர்கள்?
! ஆஹா! நினைத்தாலே ஆனந்தம்தான். சென்னையைப் பொறுத்தமட்டில் ஒருபுறம் டெலிஃபோன் பள்ளம். மறுபுறம்

வறுமைக்கோடு என்கிறார்களே,

நீங்கள் கேட்டவை
தராசு

எம். ஈ. எஸ். பள்ளம். இடையில் சாலை மையங்களில் மூடி கழன்ற சாக்கடைத் திறப்பு. இதையெல்லாம் சமாளித்தால் இடுப்பளவு தண்ணீரில் நின்று விடுகிற கார் காணவாம். தள்ளுவதற்கு ஆள் தேடுகிற பரபரப்பு. சிறுவர்களுக்கு வருமானம். காராஜ் காரர்களுக்கு வரும்படி. ஸ்கூட்டர்காரர்கள் பாடும் கஷ்டம் தான். சைக்கிளின் அருமை அப்போது தான் தெரியும். மழைக்கோட்டை அணிந்து கொண்டு ஜம் ஜம் என்று மழையில் நனைந்து கொண்டு சைக்கிளில் போகிற அனுபவமே அலாதி!


என்ன ஸார்?




○ இந்திரா



○ க. நா. சு.



○ குல்தீப் நையார்



○ ஆர். கண்ணன், சென்னை–28.

? இளமையின் ரகசியம் எங்கே இருக்கிறது?

! உற்சாகமான மனநிலையில். இதற்கு வயது வரம்பு கிடையாது. இல்லாவிட்டால் எழுபது வயதுக்கு மேல் சி. சு. செல்லப்பா ''சுவை'' என்கிற இலக்கியப் பத்திரிகையைத் தொடங்குவாரா என்ன? ''சாமான்யனையும் இலக்கியத்தை ரசிக்கச் செய்கிற முயற்சி தான் இன்றையத் தேவை'' என்கிறார் செல்லப்பா. ஓர் ஆண்டுக்குள் பத்துப் புத்தகங்கள் என்ற ஏற்பாட்டில் நாற்பது ரூபாய் விலையில் 'சுவை'யைப் பெற விரும்புகிறவர்கள் ''33, வால்டேகம் தெரு, சென்னை–600 005''–க்கு எழுதலாம்.

○ வெ. வைத்தியநாதன், கங்காதாரபுரம் ★

? வறுமைக்கோடு, வறுமைக்கோடு என்கிறார்களே, என்ன ஸார் அது?

! நிதி அமைச்சகத்தைப் பொறுத்தமட்டில் கிராமப் பகுதிகளில் 2400 கலோரிக்குக் குறைவாகத் தினசரி உணவு உண்டால் அவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளார்கள். நகரங்களில் 2100 கலோரிக்குக் கீழே உண்பவர்கள் இவ்வாறு கருதப்படுகிறார்கள். பணம் என்று கணக்குப் பண்ணினால் 1980 விலைவாசி அடிப்படையில் கிராமப்புறங்களில் மாதம் 76 ரூபாய்க்குக் குறைவாகவும் நகரங்களில் மாதம் ரூ. 88–க்குக் குறைவாகவும் சம்பாதிப்பவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள். ஆனால் இது எவ்வளவு அடத்தம் என்பது நமக்கே தெரியும். இதைவிட மூன்று மடங்கு சம்பாதிப்பவர்கள் கூட வறுமையில்வாடுகிறார்கள். கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவெனில் அரசாங்கக் கணக்குப்படியே வறுமைக்கோட்டுக்குக் கீழே கோடிக்கணக்கான மக்கள் இந்நாட்டில் உள்ளனர் என்பதுதான். இந்தநிலையில் இந்தியப் பொருளாதாரம் முன்னேறுகிறது: தொழில் வளம் பெருகுகிறது. வறுமை ஒழிகிறது என்று ஆட்சியில் உள்ளவர்கள் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமென்ன? 37 வருஷங்களாக முயன்று பார்த்துத் தோல்வி கண்ட பொருளாதாரக் கொள்கைகளை விட்டொழித்து நவீன கருத்துக்களை ஏற்றால் தான் விமோசனம். (புள்ளி விவரம் உபயம்: குல்தீப் நையார்-ஸண்டே)

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
வெ. வைத்தியநாதன்,
2/94, கங்காதாரபுரம் போஸ்டு,
சுவாமிமலை (வழி)
–612 302.

கும்பகர்ணனின் எதிரி!

நான் கணக்காக, மாதக் கணக்காகத் தூங்கிய கும்பகர்ணன் கதை நம் எல்லோருக்கும் தெரியும். அதற்கு நேர் எதிராகக் கடந்த 39 வருடங்களாக இமை மூடாத ஒருவர் டாக்டர்கள், மனோதத்துவ நிபுணர்கள், இயற்கை மருத்துவர்கள் யாவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.

இந்தோனேஷியாவில் ஜாகர்தாவிற்கு அருகில் பாலி என்னும் இடத்தில் வசிக்கும் 56 வயது கெதுத் வெடன் என்பவர்தான் அந்த அதிசய மனிதர். இரண்டாவது உலகப் போரின் போது நான்கு ஜப்பானியக் கைதிகளைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்குத் தப்பிக்க விடாமல் கண்காணித்ததால் வந்த வினையாம் இது.

தம் உடல்நலம், தூக்கம் இல்லாவிட்டாலும் நன்கு இருப்பதாகக் கூறுகிறார்.

ஆதாரம்: ''நியூஸ் டுடே''
தகவல்: அஸ்வினி

நோபல் பரிசு பெற்ற தமிழர்



நோபெல் பரிசு பெற்ற தமிழர் சுப்ரமணியம் **சந்திரசேகர்**, தம் மனைவியுடன் சென்னை வந்திருந்தார்.

பரிசு பெற்ற பின் இதுதான் முதல் சென்னை விஜயம்.

ஆழ்வார்பேட்டை, செனடாப் ரோடில், அவர் சகோதரி திருமதி சாவித்திரி சர்மாவின் வீட்டில் சந்தித்தேன்.

நல்ல உயரம்.

ஒல்லியான தேகம்.

வெள்ளை அரைக்கைச்சட்டை.

வெள்ளை நாலுமுழ வேட்டி.

கால்களில் கறுப்பு ஷு.

மிகவும் வயதான தோற்றம்.

இதுதான் சந்திரசேகர்.

மெல்லிய குரல். ஆனாலும் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலேயே ஓர் அழுத்தம்; ஒரு நிதானம்.

பெங்களூரில் நடக்கவிருந்த ஒரு கருத்தரங்கிற்காக இந்தியா வந்திருக்கிறார்; பிரதமர் மறைவு காரணமாய் ஒத்தி வைக்கப்பட்டாலும், அது விஷயமாய் பெங்களூர் புறப்பட்டுக் கொண்டிருந்தார். (இன்னும் அரை மணி நேரம் தாமதித்திருந்தால் அவரைச் சந்திக்க முடியாது போயிருக்கும்!)

கூடப் பிறந்தவர்கள் நிறையப் பேர் ஆதலால், சென்னையில் மட்டுமின்றி இந்தியாவின் பல பகுதிகளிலும் நிறைய உறவுக்காரர்கள்.

அங்கே — சிகாகோவில் இவருக்கு முழுச் சுதந்திரமாம். நிறைய பேர் இவருக்குக் கீழே ஆராய்ச்சி மாணவர்களாய் இருக்கிறார்களாம். அங்கே, இன்ன நேரத்துக்குப் போய், இவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடெல்லாம் இடையாதாம். சில நாட்கள், வீட்டுக்கே போகாமல் பல்கலைக் கழகத்திலேயே தங்கி, ஆராய்ச்சியில் ஈடுபட்டதும் உண்டாம்.

அபார்ட்மெண்டில் ஜாகை. அங்கேயும் பெரிய 'ஸ்டடி ரூம்' இருக்கிறதாம். சமயத்தில் மாணவர்களை, வீட்டிற்கே வரச் சொல்லி, அங்கேயே சொல்லித்தருவாராம்.

''சமயம் கிடைக்கும் போது, இசை கேட்பதுண்டு: கச்சேரிகளுக்குப் போவதுண்டு: இவற்றுக்கு நிறைய நேரம் செலவழிக்க ஆசைப் பட்டாலும் நேரம் கிடைப்பதில்லை'' என்றார் வருத்தத்துடன்.

''அன்றைக்கு நீங்கள் வாழ்ந்த இந்தியாவுக்கும், இன்று நீங்கள் பார்க்கிற இந்தியாவுக்கும் என்ன வித்தியாசம் காணுகிறீர்கள்?'' என்றேன்.

''நான் 19 வயதில் அமெரிக்கா போனேன். அதற்கு முன்னால் கல்லூரி நாட்களில் எல்லாருக்கும், தேசநலனில் அக்கறை இருந்தது. பின்பற்றத் தகுதியான தலைவர்கள் பலர் இருந்தனர். ஆனால் இன்றைய நிலை? சுயநலமில்லாத தலைவர்கள் யார் இருக்கிறார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று என்னைக் கூர்மையாய்ப் பார்க்க; நான் மௌனமாய் அவரைப் பார்க்க, அவரே தொடர்ந்தார்: ''போன தடவை இந்தியா வந்த போது (பிப்–82) இந்திராகாந்தியைச் சந்தித்தேன். அவரிடமும் இதைப் பற்றித் தான் பேசினேன். அதற்கு இந்திரா, 'நீங்கள் சொல்வது ரொம்ப சரி! நான் இதை மிக நன்றாக உணர்கிறேன்' என்றார்''

கணித மேதை ராமானுஜம் பற்றிச் சொன்னார்: ''அந்தக் கணித மேதை மீது எனக்கு அபரிமிதமான பக்தி உண்டு: அவருடைய கணிதக் கண்டுபிடிப்புக்களைத் தொகுத்து, புத்தகமாய் வெளியிடுகிற பணியில் சிலர் ஈடுபட்டிருந்தனர். புத்தகத்தில் வெளியிட, ராமானுஜத்தின் புகைப்படமொன்றை அனுப்பும்படி என்னைக் கேட்டனர். நான் ராமானுஜம் வீட்டில் தேடினேன். ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் அவரது பாஸ்போர்ட்டில் இருந்த புகைப்படத்தைப் பிரதியெடுத்து அனுப்ப, அதைப் புத்தகத்தில் வெளியிட்டனர். இன்று நாம் பார்க்கிற ராமானுஜத்தின் படம், அந்தப் படம் தான். அதைத்தான் தபால் தலை வெளியிடவும் பயன்படுத்திக் கொண்டனர்.''

இந்தியா வரும்போதெல்லாம், திருமதி ராமானுஜத்தைத் தவறாமல் சந்திக்கிறார் இந்த முறையும் கூட.

அடுத்து பேச்சு, நோபெல் பரிசு பற்றித் திரும்பியது.

''நோபெல் பரிசு என்பது ஒருவித கௌரவம். அவ்வளவுதான். நோபெல் பரிசு பெறுபவர் தான் அறிவாளி, மற்றவரெல்லாம் இல்லை என்பது ரொம்பத் தவறான எண்ணம். நோபெல் பரிசு கிடைக்காத ஆனால் நோபெல் பரிசு பெற்றவர்களைவிடப் பல விதங்களிலும் உயர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள்'' என்றார்.

அவர் அடக்கத்தை எண்ணி வியந்த வாறே, "நோபெல் பரிசு கிடைத்த..உங்களது 'ஸ்டெல்லார் எவலூஷன்' தியரியால் சாதாரண மனிதனுக்கு என்ன பிரயோஜனம்?" என்று கேட்டேன். அவரது பதில்: "அன்றைக்கு நியூட்டனும், ஐன்ஸ்டீனும், பல விஷயங்களைக் கண்டுபிடித்ததும், யாரும் 'இதனால் தனி மனிதனுக்கு என்ன பல'னென்று கேட்கவில்லை. அது மாதிரி நினைக்கவும், கேட்கவும் கூடாது.. எந்த ஒரு ஆராய்ச்சியும் தனி மனிதக் கண்ணோட்டத்தில் இல்லாமல் — மனித அறிவுக்கு என்ன பயன் என்ற நோக்கில்தான் பார்க்கப் படவேண்டும்."

மலை உச்சியில் பெய்த மழையானாலும் படிப்படியாகச் சமவெளிக்குப் பாய்ந்து பூமிக்கடியிலும் செல்கிறது. அப்புறம் என்றாவது கிணறு தோண்டி நீர் இறைக்கும் போது 'ஓ! இது, மலை உச்சியில் பெய்த மழை நீராயிற்றே' என்று யாராவது எண்ணிப் பார்ப்பார்களா? அப்படித்தான் விஞ்ஞானிகளின் ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் நாளடைவில் பல ரூபங்களில் பல கோணங்களில் மனித குலம் முழுவதற்குமே பயனாகிறது என்பதைச் சொல்லாமல் சொல்லி உணர்த்தினார் மேதை.

விடைபெறுகையில், "தமிழ் ஞாபகமிருக்கிறதா? பேசுவீர்களா?" என்று கேட்ட போது புன்சிரிப்புடன் சொன்னார்: "பேஷாக!"


-மௌஷ்மி

"பேச்சுக்கு நடுவே கொஞ்சம் இங்கிலீஷ் வார்த்தைகளையும் சேர்த்துக்குங்கன்னு அவர்கிட்டே சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"Green, துரோகிகள் நிறைந்த இந்த நாட்டில் நட்புக்கு Grammer ஆகத் திகழும் நமது நண்பர் opposite காலத்திலும் இந்தப் பழக்கத்தை Shop பிடிக்க வேண்டும்' என்றெல்லாம் பேச ஆரம்பித்து விட்டாரே!"






பையன்: "அப்பா! கல்யாணத்திற்குச் சின்ன 'ன' போடணுமா? பெரிய 'ண' போடணுமா?"


அப்பா: "பந்தல் போட்டு, கச்சேரி வச்சுப் பண்ற கல்யாணமா இருந்தா பெரிய 'ண' போடு. இல்லே, சுருக்கமா ரிஜிஸ்டர் மேரேஜ்னா சின்ன 'ன' போடு. போதும்!"

"கல்யாணமா நடத்தறாங்க இவனுங்க? கஞ்சாப் பசங்க."

"அடேடே, என்ன சார் ஆச்சு?"

"ரெண்டாவது தடவை யாரும் சாப்பிட்டு விடக் கூடாதுன்னு விரலில் கறுப்புப் புள்ளி அடையாளம் வச்சு அனுப்புறாங்க."





படம் பார்க்க வந்தவர்: தம்பி, கொஞ்சம் உள்ளாற வா! .

தியேட்டர் பையன்: ஏன் சார், சீட் நம்பர் தெரியலையா?

படம் பார்க்க வந்தவர்: ஊஹூம். படம் ஒரு எழவும் புரிய மாட்டேங்குது. கொஞ்சம் பக்கத்திலே வந்து உட்கார்ந்து கதை சொல்லேன்!



முதல் இரவு

—குமரி அமுதன்—

காலையிலிருந்தே சுந்தரின் மனத்தில் இனம் தெரியாத ஒரு கிளர்ச்சி குடிகொண்டிருந்தது.

அன்றைய இரவைப் பற்றிய எண்ணம் தான் அது. அன்று இரவு அவன் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கப் போகிறது. இதுவரை கழித்த இரவுகளைப் போலல்லாமல், அன்றைய இரவு அவனுக்கென்று ஒரு தனி இரவாக அமையப் போவதை எண்ணும்தோறும், சுந்தரின் மனத்தில் இன்னதென்று சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி வந்து அழுத்தியது.

அப்படியொன்றும் அது விசித்திரமான நிகழ்ச்சியல்ல; சாதாரணமாக நேரக்கூடிய ஒரு சம்பவம்தான்; என்றாலும், இயல்பாகவே கோழைத்தனமும், பதற்ற சுபாவமும் படைத்த சுந்தர், அன்று துவங்கப்போகும் புது இரவின் முதல் அனுபவத்தை எண்ணிப் பெரிதும் கலவரமே அடைந்தான். அவனது கண்ணிலும் முகத்திலும் அது தெளிவாகவே தெரிந்தது.

இரவின் இனிய தொடக்கம், சுந்தரின் வருகைக்காக அந்தத் தனியறை காத்துக் கொண்டிருந்தது. அவனைச் சுற்றியிருந்த இளம் நண்பர்கள் கேலி பேசத் தொடங்கினார்கள்.

''என்னப்பா சுந்தர்! இதுக்குப் போய் இவ்வளவு பதற்றப்படறியே?'' என்று கேட்டான் ஸ்ரீதர்.

''இது கொஞ்சம் இளசு. இதனால்தான் தடுமாறுது; எல்லாம் போகப் போகச் சரியாயிடும்!'' என்றான் அருண்.

''இப்படி பயந்து நடுங்கலாமா தைரியமா எழுந்து நட'' என்று தட்டிக் கொடுத்தான் கண்ணன்.

''எல்லோரும் சேர்ந்து ஏன் அவனைக் கலாட்டா பண்றீங்க? மணி பத்து ஆகுது; தூங்க வேண்டாமா! உம் எழுந்திருங்க!'' என்று முடிவாகக் கூறினான் குமார்.

''இனி, சுந்தரை அவன் அறைக்கு அனுப்பி வைப்போமா?'' என்றபடி எல்லோரும் எழுந்து கொண்டனர்.

''என்னப்பா சுந்தர். நீயா உள்ளே நுழைகிறியா? இல்லே, நாங்களாக் கொண்டு விடட்டுமா?'' என்று கிண்டலாகக் கேட்டபடி அவனை நெருங்கி வந்தான் ரவி. அப்போது—

உச்சி முதல் பாதம் வரை உதறல் எடுத்தது சுந்தருக்கு. அவன் அழாத குறையாக—

''ஏன் இப்படி என்னைப் பாடாய்ப்படுத்துறீங்க? நான் தான் முதலிலேயே சொல்லலையா, 'ஹாஸ்டல்'லே தங்கறது இதுதான் எனக்கு முதல் அனுபவம். வெட்கத்தை விட்டுச் சொல்றேன். நேற்று வரைக்கும் நான் என் பெற்றோர் பக்கத்திலே தான் படுத்துத் தூங்கினேன்; அப்படி ஒரு பழக்கம்! இதுவரை நான் தனியாவே படுத்து உறங்கியதில்லே; அப்படி ஒரு பயம்! எனக்குப் போய்த் தனியறையா வாய்த்து விட்டது. தயவு செய்து என்னைத் தனியா விடாதீங்க. யாராவது துணைக்கு வந்து என் அறையிலே படுத்துக்குங்க!''

—இவ்வாறு பரிதாபமாகக் கூறி முடித்தான், கல்லூரியில் சேர்ந்து ஹாஸ்டல் என்பதையே அன்றுதான் பார்த்திருந்த பதினாறு வயதுப் பாலகன் சுந்தர்.



வட்டமேஜை

● நேர்மையாகப் பணியாற்றிய ஒரு உயர் காவல்துறை அதிகாரிக்கே இந்த அவலநிலை என்பதனை திரு. பொன். பரமகுரு அவர்களின் வாயிலாக அறியும் போது மனத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது.
கோவை—43, என். பக்லகிருஷ்ணன்.

● சிலம்புச் செல்வரின் சிந்தனையிலிருந்து வெளிப்பட்டிருந்த அந்த நாளைய அறிஞர்களின் அறிமுகம் இந்த நாளைய இளைய பாரதத்தினருக்கு, குறிப்பாக, தமிழக இளைஞர்களுக்கு சுவையான — தேவையான அறிமுகமாகும்.
பெங்களூர்—21, ப. மூர்த்தி.

● டாக்டர் .சௌந்தரம் அம்மையாரைக் கௌரவித்து, அஞ்சலி செய்த கல்கியே, உனக்கு நன்றி.
திருச்சி—20, ஆர். அப்துல் சலாம்.

● 'புனிதமான உறவுகள்' என்ற சிறுகதை படித்தேன். இதயமுள்ள ருக்மணியின் சொற்களை 'குருவின் போதனை'யாக ஏற்றுக் கொண்ட மனச்சாட்சியுள்ள ஸ்ரீநிவாசன் பாராட்டுக்குரியவர்.
ஸ்ரீரங்கம், வி.. சௌந்திரராஜன்.

● தமிழக முதலமைச்சரின் உண்மையான உடல்நிலையை உங்கள் தலையங்கத்தின் கடைசி ''பாராவில்'' வெகுவிவரமாக, யாருக்கும் புரியுமாறு ஒரு துளி கூட பொய் கலக்காமல் வெளியிட்டிருப்பதற்குப் பாராட்டு
பம்பாய். திருமதி பூமா ராமானுஜம்.

● சுபாவின் ''நிலவே நீயும் விலகாதே'' ஆரம்பமே படுஜோர். . .
முருங்கப்பேட்டை. பொன். ராஜேந்திரன்.

சிறுவனுக்கு மாற்றுச் சிறுநீரகம்

● ஐந்து வயதான எனது பேரன் ரெஞ்சிவி ரவிசங்கர் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடையவே 'வேலூர் ஸி. எம். ஸி. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு




சிறுநீரகம் மாற்றியமைக்க ரூ. 90.000 தேவைப்படுகின்றது. அவன் உயிரைக் காப்பாற்ற எங்களிடம் நிதியில்லாமையால் இதைப் படிப்பவர் தங்களால் ஆன பொருளுதவி தந்து இந்த உயிரைக் காப்பாற்றும் படிகேட்டுக்கொள்ளுகின்றேன். அன்பளிப்பை Doctor Chacko Korula Jacob, on behalf of E. Ravi Shankar Department of Nephrology, CMC Hospital Vellore-4 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.
பெங்களூர்—34, வீ. கிருஷ்ணமூர்த்தி.

● கிராமப் பகுதிகளுக்கு மணியார்டர் அனுப்பும் பலர், முகவரிப் பகுதியில் தெளிவாக முகவரியை எழுதுவதில்லை. இதனால் எம்மைப் போன்ற தபால்காரர்களுக்குஏற்படும் பிரச்சினைகள் ஏராளம். இத்தகைய மணியார்டர்கள் உரியவருக்குப் போய்ச்சேர அதிக நாட்களாகிறது.எனவே தாமதத்தைத் தவிர்க்கப் பொது மக்கள் முகவரிகளைத் தெளிவாக எழுதினால் நல்லது.
விருத்தாசலம்—1, அ. சிவாராவணன்.

● மயிலாடுதுறையில் உள்ள எனது மன்னிக்கு நான் எழுதிய கடிதம் பதினைந்து நாட்களுக்குப் பிறகு அவருக்குக் கிடைத்திருக்கிறது. எப்படி? மயிலாடுதுறைபோலீஸ் ஸ்டேஷன் அருகில் உள்ள தேங்காய் மண்டியில் கிழே அந்தக் கடிதம் கிடக்க, யாரோ இரு சிறுவர்கள் அதை எடுத்து உரத்த குரலில் கேலியாக வாசிக்க, மயிலாடுதுறை மாதர் சங்கத்தில் துப்புரவு செய்யும் கிழவி கேட்ட பெயராக இருக்கிறதே என எண்ணிப் பொறுப்புடன் கடிதத்தைச் சேர்ப்பித்திருக்கிறார். அவரைப் பாராட்டலாம். ஆனால் தபால் இலாகா ஊழியர்கள் இப்படிப் பொறுப்பற்ற தன்மையுடன் நடக்கலாமா?
மன்னார்குடி—2, சரஸ்வதி இராசேந்திரன்.

(கடைசி இருகடிதங்கள்பரிசைப்பகிர்ந்துகொள்கின்றன)




நெஞ்சை உருக்கும் நெசவாளர் நிலை

SPECIAL REPORT

கோ–ஆப் டெக்ஸின் விளம்பரங்களைப் பார்த்தாலே தள்ளுபடி என்பது தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு வருடம் முழுவதும் ஏதாவது ஒரு பண்டிகைக்குத் தள்ளுபடி கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். பண்டிகை முடிந்தவுடன் அமைச்சரின் அறிக்கை நாளிதழில் வரும். ''இந்த வருடம் கோ–ஆப் டெக்ஸின் விற்பனை ஒரு கோடியைத் தாண்டி விட்டது.'' அதே தினசரியில் எங்காவது ஒரு மூலையில் 'கைத்தறி நெசவாளர் பட்டினியில் சாவு' என்றோ வறுமையின் பிடியில் சிக்கியுள்ளார்கள் என்றோ செய்தி வெளியிடப்பட்டிருக்கும்! ஏனிந்த நிலை?

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 5 லட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டோர் கூட்டுறவு சொஸைட்டியில் இணைக்கப்பட்டுள்ளார்கள். மீதியுள்ளவர்களே தனியே தறி போட்டுத் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்வரை, சென்னையைச் சுற்றியுள்ள இடங்களான குன்றத்தூர், அனகாபுத்தூர், போரூர், சைதாப்பேட்டை போன்ற இடங்களில், காலை வேளைகளில் சென்றால், 'பாவு'க்கு கஞ்சியோ, சாயமோ போட்டுக் கொண்டிருப்பார்கள். பகலில் சென்றால், 'டடக்' 'டடக்' என்ற தறிகளின் சப்தம் கேட்டுக் கொண்டிருக்கும். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? பெரும்பாலான நெசவாளர் குடும்பங்களில் இந்த வேலையே மறந்து போய் விட்டது. இளம் தலைமுறையினர் வேறு வேலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். வேறு தொழிலுக்குச் செல்ல முடியாதவர்கள் மட்டுமே இந்த நெசவுத் தொழிலை நம்பி உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம்: 'சந்தேகமே இல்லாமல் சொல்லலாம் – விசைத் தறி தான் என்று. மக்களின் தேவைகள் வளர்ந்திருக்கின்றன. கைத்தறியைப் பயன்படுத்தி மக்களின் தேவைகளை ஈடு செய்ய முடியாது என்று மின்சாரத்தால் இயங்கும் விசைத் தறிகளைப் போட்டுக் 'கைத்தறி' என்றபெயரில் சரக்கை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விசைத்தறியில் நெய்யப்படும் டவல், வேட்டிகள், லுங்கிகள் எல்லாமே 'அசல் கைத்தறி' போலத்தான் இருக்கும். உற்றுக் கவனித்தால் தான் இது விசைத் தறியில் நெய்தது என்று கண்டுபிடிக்கலாம். கைத்தறி போட்டு நெய்வதென்றால் 6 மீட்டர் நீளமுள்ள, ஒரு வேட்டியை நெய்து முடிப்பதற்கு ஒருநாள் ஆகும். ஆனால் அதே சமயத்தில் விசைத்தறியைப் பயன்படுத்தினால், 30 மீட்டர் நெய்ய முடியும். இன்று கைத்தறி என்ற பெயரில் வெளிநாடுகளுக்குச் செல்லும் துணிகள் யாவும்,


O எம். முருகேசன்
''விடிவு காலம் எப்போது?''



O துணியில் பாடிக் பிரிண்டிங்



விசைத்தறியால் நெய்யப்பட்டவைதாம். 10 பேர் செய்யும் வேலையை சீக்கிரம் முடிப்பது மட்டுமல்ல, உற்பத்தி செலவும் குறைவுதான். அதனால்தான் பரம்பரை நெசவாளர்கள் கூட 'இருபது அம்சத் திட்டம்' அது. இது என்று ஏதோ ஒரு திட்டத்தில் கடன் வாங்கி விசைத்தறிகள் போட ஆசைப்பட்டுச் செயல் பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் கைத்தறியையே நம்பியும் பெரும்பாலோர் இருக்கின்றனர். அதிலும் சொந்தத் தறி இல்லாமல் இன்னொருவரின் தறியில் அமர்ந்து வேலைக்குச் சென்று சம்பாதிப்பவர்கள் நிலைமை மிகவும் மோசம். கால்களை உதைத்து உதைத்து, கண்களை மிகச் சிரமத்துடன் பயன்படுத்தி 10 மணி நேரம் வேலை செய்தால்தான் ஒரு சேலை கைத்தறியில் தயாரிக்க முடியும். கூலியோ 15 ரூபாய் தான் கிடைக்கும். இதே மணி நேரத்தில் 40 டவல்கள் நெய்தால் அதற்கும் இவ்வளவு தான் கூலி. தினமும் வேலை இருக்குமா என்றால் அதுவும் இல்லை. 'நூல் இல்லை' என்று பதில் அவ்வப்போது வந்து கொண்டிருக்கும். சொந்தமாகத் தறி போட்டுக் கொண்டிருப்பவர் பாடு இன்னும் திண்டாட்டம். நூலைவாங்கி, சாயம் போட்டு, நெய்து, பிறகு பக்குவப்படுத்தி, சேலைகளாகவோ, வேட்டிகளாகவோ, டவல்களாகவோ செய்து முடித்து, மார்க்கெட்டில் அவர் விற்று விட்டு வருவதற்குள் அவர் படும் பாடு சொல்லில் அடங்காது. இத்தனையும் முடித்து மார்க்கெட்டுக்குச் சென்று விட்டால், இவன்



காசநோயைப் பொருட்படுத்தாமல் வேலை

தயாரித்த துணி, இன்னும் மலிவு விலையில் தயாரித்த விசைத்தறிகளின் உற்பத்தியோடு போட்டி போட வேண்டிய நிலை! ஆக விலையும் கட்டி வராது. என்ன செய்வான் நெசவாளன்? வேறு வழியின்றித் தலையில் சுமையாக வைத்துக் கொண்டோ அல்லது நகரங்களில் தெருவில் பரப்பிக்கொண்டோ விற்றுக் கொண்டிருப்பான். இன்று சென்னையில் சில இடங்களில், பல குடும்பங்கள் 'ஐயா குழந்தைக்குச் சாப்பாடு இல்லை; மூன்று நாளாகப் பட்டினி', என்று நம்மைக் கையைப் பிடித்து இழுத்து நிறுத்திக் காசு கேட்பார்கள். கேட்டுப் பாருங்கள் அவர்களின் கண்ணீர்க் கதையை! அவர்களில் பலர் நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான்.

○ கந்தவேல் - அரசுக்கு சில ஆலோசனைகள்




○ கே. முருகேசன்— ''சூரம் டெக்ஸ்'' தலைவர்.



கண்ணீர்க் கதை!

வேறு ஒருவரிடத்தில் நெசவு வேலை செய்து கொண்டிருந்தவர் தான் ஏ. ராமசாமி. சேலம் மாவட்டம் சாளிபட்டியைச் சேர்ந்தவர். கிட்டத்தட்ட 15 வருடங்களாகத் தொழிலாளியாகவே வேலை பார்த்துவந்தவர் வங்கியில் 5000 ரூபாய் கடன் வாங்கிக் கடந்த எட்டு மாதங்களாகச் சொந்தமாகத் தறி போட்டு நெசவு செய்து கொண்டிருக்கிறார். ''ஆடி, ஆவணி மாதங்கள், நெசவுத் தொழிலுக்கு மிகவும் டல்லான மாதங்கள். புரட்டாசி, ஐப்பசியில், சாயம் போட்டால் காயாது – மழைக்காலம். வருடத்தில் ஆறு மாதங்கள் வேலை இருந்தாலே அதிகம். அந்த ஆறு மாதங்களில் நாம் உற்பத்தி செய்யும் சரக்கு, தீபாவளி, பொங்கல் சமயங்களில்தான் விற்பனை ஆகும். ஒரு குடும்பத்தில், ஒருவர் மட்டும் தறியில் அமர்ந்து வேலை செய்தால் போதாது. குடும்பமே தொழிலில் இறங்க வேண்டும். அப்போது தான் ஒரு வேளைச் சாப்பாட்டுக்காவது வழி உண்டு. நான் கடன் வாங்கி நான்கு தறிகள் போட்டிருக்கிறேன். என்னால் முதல் போட்டு நூல் வாங்க முடியாது. அதனால் கட்டு ஒன்றுக்கு 5 ரூபாய் அதிகமாக இருந்தாலும் கடனில்தான் வாங்குகிறேன்.



○ சுகத் தறிகளுடன் போட்டியிடும் விசைத்தறி

ஏதாவது சொஸைட்டியில் சேரலாம் என்றால், உறுப்பினர்களைத் தற்போது சேர்ப்பது இல்லை என்ற பதில் தான் கிடைக்கிறது'' —என்கிறார் ராமசாமி.

என்ன செய்கிறது கூட்டுறவு சொஸைட்டி?

அதுசரி, இந்தக் கூட்டுறவு சொஸைட்டிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? தமிழ்நாட்டிலேயே கொஞ்சம் பெரிய சொஸைட்டி, 'சூரம்டெக்ஸ்', இதன் தலைவர் கே. முருகேசனைச் சந்தித்தோம்..''நாங்கள் தயாரிக்கும் துணிகளைப் பெருமளவு வாங்குவது கோ—ஆப்டெக்ஸ்தான். நீங்கள் நினைப்பது போல் வருடத்தில், பாதி நாட்கள் தள்ளுபடி கிடையாது. 60 நாட்கள் தான் தள்ளுபடி விற்பனை நடக்கிறது. எங்கள் ஒரு வருஷத்து உற்பத்தியையும் 60 நாட்களில் விற்க முயற்சி செய்தாக வேண்டும். இதில் மிகவும் கொடுமை என்னவென்றால், தள்ளுபடி விற்பனையை நாங்கள் கோ—ஆப்டெக்ஸிற்குச் செய்து கொண்டிருக்கும் போது தான் தனிப்பட்ட ஆட்களும் எங்கள் சரக்குகளை வாங்க வருவார்கள். பெரியார் மாவட்டத்திலேயே மிகவும் பெரிய சொஸைட்டிகளில் எங்களுடையதும் ஒன்று. எங்கள் சரக்குகளுக்கு .கோ—ஆப்டெக்ஸ் பணம் தர ஆறு முதல் எட்டு மாதங்கள் ஆகின்றன. ஆனால் நாங்கள், நெசவாளிகள் சரக்குகளைக்கொடுத்தவுடன் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் கோ—ஆப்டெக்ஸின் தயாரிப்பு விதிகளை (Specification) சிறிது மீறினால் கூடத் துணிகளை வாங்க மாட்டார்கள். அவர்கள் 35 சதவீத லாபத்தைத் துணிகளில் வைத்து விற்கிறார்கள். நெசவுத் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்கள் டைகள். போன்றவற்றை மலிவு விலையில் நெசவாளருக்கு விற்க அரசு ஏற்பாடுசெய்ய வேண்டும். நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குக் கடன்கொடுக்க, 'வீவர்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' என்று ஆரம்பிக்க வேண்டும். கோ—ஆப்டெக்ஸ் பணம் கொடுத்தால் தான் நெய்வதற்கு நூல் தருகிறது. ஆனால் நெய்த துணிக்குப் பணம் தரப் பல மாதங்கள் எடுத்துக்கொள்கிறது. இந்த நியாயமற்ற நிலை மாற வேண்டும்.''

தில்லுமுல்லு

கைத்தறியாளர் கூட்டுறவு சொஸைட்டிகளில் தான் எவ்வளவு தில்லுமுல்லுகள்! ஈரோட்டைச் சேர்ந்த ஏ..முருகேசன் என்ற நெசவாளரைச் சந்தித்து 'நீங்கள் ஏன் சொஸைட்டியில் சேரவில்லை' என்று கேட்டதுமே பொரிந்து தள்ளி விட்டார் மனிதர். ''இன்றைக்கு சொஸைட்டிகளில் உறுப்பினராக உள்ளவர்களில் 80 சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்தமாகவே தறிகள் கிடையாது. சொஸைட்டியில் ஆர்டரைப் பெற்றுக் கொண்டு எங்களைப்போல் உள்ளவர்களிடம் கொடுத்து விடுவார்கள். கூலியும் கம்மி. ஆனால் இவர்கள் சொஸைட்டியில் பேசும் ரேட்டோ மிகவும் அதிகம். நிறைய உறுப்பினர்கள், விசைத் தறிகள் வைத்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி சொஸைட்டியின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். இது மிகவும் அநியாயம். இப்படி ஒரு உறுப்பினருக்குக் கொடுத்த ஆர்டரின் பேரில் தான் நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன். இந்தத் தொழிலிலிருந்து விலகவும் முடியவில்லை;

○ ராமசாமி -
வங்கிக் கடனால் பிழைத்துக்கொண்டேன்



○ அனகாபுத்தூர் ராமலிங்கம்
கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக்குழுத் தலைவர்



தொடர்ந்து வாழவும் முடியவில்லை.''

முருகேசனுக்கு 6 குழந்தைகள், மனைவி, குழந்தைகள் அனைவரும் இந்தத் தொழிலில் ஈடுபட வைத்திருக்கிறார். அப்போதுதான் கால் வயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடியுமாம்.

பெரியார் மாவட்டத்தில் மட்டும் 200க்கு அதிகமான சொஸைட்டிகள் உள்ளன. ஆனால் நன்றாகச் செயல்படுபவை பத்தோ, பதினைந்தோ தான். இதற்குக் காரணம் பெரிய இடத்து 'கனெக்ஷன்' தான். இதில் சில சொஸைட்டிகள், பள்ளிக்கூடம், பொறியியல் கல்லூரி என்று ஆரம்பிக்கும் அளவுக்கு வசதிகள் பெற்றுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் மட்டும் 25000–க்கு மேற்பட்ட விசைத்தறிகள் உள்ளன. பல்லடம், திருப்பூர், (கோயமுத்தூர் மாவட்டம்,) எடப்பாடி, கொமரப்பாளையம், பள்ளிப்பாளையம் (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் பெரியார் மாவட்டத்தில் இருக்கும் அளவுக்கும் அதிகமாக விசைத் தறிகள் உள்ளன. ஜமுக்காளம், பெட்ஷீட், தலையணை உறை, டவல், லுங்கி, வேஷ்டி, சேலை, இப்படி எல்லா ரகங்களையும் விசைத்தறியில் தயாரித்து விடுகிறார்கள். ஏற்றுமதியும் செய்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் சோக நிலைக்கு விசைத்தறிகளின் வளர்ச்சியே முக்கிய காரணம்.

வில்லன் விசைத்தறியே!

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையை பாழடித்துக் கொண்டிருக்கும் விசைத்தறிகளின் வளர்ச்சி பற்றி, டெக்ஸ்டைல் தொழிலில் ஈரோட்டில் மிகப் பிரபலமாக விளங்கும் திரு. கந்தவேல் அவர்களைக் கேட்டோம். ''இன்றையத் தேவைகளின் வேகத்துக்கு ஏற்ப விசைத்தறிகளின் வளர்ச்சி பெருகி உள்ளது. 38 அங்குல அகலம் முதல் 53 அங்குல அகலம் உள்ள எந்த வகையான துணிகள் தயாரிப்பது என்றாலும் அது கைத்தறியில் தான் தயாரிக்கப்பட வேண்டுமென்று சட்டமியற்ற வேண்டும். அதே போல் சேலைகள் யாவையுமே கைத்தறியில் தான் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் சட்டம் வர வேண்டும். நூல்களின் மேலுள்ள சுங்கத் தீர்வையைக் குறைத்தாக வேண்டும். நூற்பாலையிலிருந்து நேராக நெசவாளியின் கைக்கு நூல் போய்ச்சேர வேண்டும். இடைத்தரகர்களாக க்கோ–ஆப்டெக்ஸோ, அல்லது அரசோ, தனிப்பட்டநபாகவோ இருக்கக் கூடாது. இதன் மூலம் விற்பனை வரியைத் தவிர்க்கலாம். இவைகளைச் செய்வதன் மூலம் கைத்தறி நெசவாளர்களை ஓரளவு கைதூக்கி விட முடியும்''.

நெசவாளர்களின் துயரங்களை நாட்டுக்கு உணர்த்த காமராஜ் பிறந்த நாளை நெசவாளர் நாளாகக் கொண்டாடினார் கா.கா.தே. கா. தலைவர் குமரி அனந்தன். இந்தப் பிரச்னை பற்றி அவரிடம் பேசும் போது, பல உபயோகமான ஆலோசனைகளைச் சொன்னார்.

அனந்தன் ஆலோசனைகள்

1. சில ரகத் துணிகள் கைத்தறிக்கே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட வேண்டும். இந்த ரகங்களை விசைத்தறியாளர்கள் உற்பத்தி செய்யாமலிருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க முத்தரப்புச் கண்காணிப்புக் குழு நியமிக்க வேண்டும்.

2. 1981–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கைத்தறி, கைத்தறியாளர் பாது காப்புச் சட்டம் இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. இதை அமுல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை உடனடியாகக் களைய வேண்டும்.

3. உற்பத்தியான துணிகளை அரசு உடனடியாகக் கொள்முதல் செய்யவேண்டும். அதன் மதிப்புக்கு ஏற்ப உடனடியாகப் பணமோ அல்லது நூலோ பட்டுவாடா செய்ய வேண்டும்.

4. பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்குக் கைத்தறித் துணிகளையே பயன்படுத்த வேண்டும்.

5. நூல் விலை திடீர், திடீரென்று உயர்வது வழக்கமாகி விட்டது. இதுமட்டுமல்ல. சமயத்தில் மார்க்கெட்டிலிருந்து மறைந்தும் விடும். உற்பத்தி விலைக்கும் விற்பனை விலைக்கும் இடைவெளி மிக அதிகமாக உள்ளது. அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து நியாயமான விலைக்குச் சீராக நூலை விநியோகிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு பல ஆலோசனைகளைக் கூறிய குமரி அனந்தன், இத்தொழில் ரீதியாக வரும் காச நோயால் பாதிக்கப்படும் நெசவாளர்களுக்குச் சிறப்புச் சிகிச்சை தரவேண்டியதன் அவசியத்தையும் மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் வலியுறுத்தினார். தொழிற்சாலை ஊழியர்கள் பெறும் இ. எஸ். ஐ., போனஸ், பிராவிடண்ட் பண்டு, குழந்தைகளுக்குக் காப்பகம்போன்ற வசதிகளை நெசவாளரும் ஏன் பெறக் கூடாது என்று கேட்கிறார் குமரி அனந்தன்.



பூச்சிகளை விரட்டப் புதிய கருவி!

எலி, எறும்பு, கரப்பான் பூச்சி, போன்ற பலவற்றையும் சமையலறையிலிருந்து விரட்ட 'பெஸ்ட் ப்ரூப்' என்ற புதிய கருவி அமெரிக்காவில் இப்பொழுது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இக்கருவியில் 50 வாட் பல்பு ஒன்று உள்ளது. ஐநூறு ரூபாய் விலையுள்ள இக்கருவி 30 நாட்களில் அடியோடு பூச்சிகளை விரட்டிவிடுமாம்.

—நாமக்கல் ரமேஷ்குமார்.

குழந்தைகள் தினம்—நவம்பர் 14

உச்சியிலிருந்து ஓர் காட்சி



உலகமனைத்தும் தன்னைவிட உயரமானதென்றே அவன் நினைத்திருந்தான்...

அவனது தந்தை குனிந்து அவனை உயரத்தூக்கி வளர்ந்த பெரியவர்களின் பிரமிக்கும் கண்ணோட்டத்தைக் காட்டும் வரை...

என்றோ ஒருநாள் அங்கு தான் அவனது இடம். தன் காலின் பலத்திலே அங்கு நிற்பான் அவன்.

அந்த நினைப்புக்கும் கண்ணோட்டத்திற்கும் அவனை தயாராக்குங்கள்—அவன் ஆட்டங்கண்டு உதவிக்கு அழுது தவிக்காது இருக்கச் செய்யுங்கள்.

அதற்குத் தக்க வழி ஆயுள் இன்ஷுரன்ஸ் தான்

- எல்.ஐ.ஸியின் பாலிசித் திட்டங்கள்.
- சிறு குழந்தைகளுக்காகவே அமைக்கப்பட்ட திட்டங்கள் அவனுக்கு தோன்றவிருக்கும் சுமைகளையும் பொறுப்புக்களையும் உங்களை உணரச் செய்கின்றன.

— கல்வி
— சீரிய வாழ்க்கையை துவக்க மூலதனம்
— உத்தியோக எதிர்காலம்

இவையெல்லாம் உங்கள் பொறுப்புத்தான்—
இப்போதைக்கு—
சற்று காலத்திற்கு...
பின் எங்களுடையதும் கூட...
நாம் ஏன் சேர்ந்து செயல்படக் கூடாது??? சிந்தியுங்கள்!!!

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

நடக்காத தேர்தல்கள்

நெடுநாட்களாக கூட்டுறவு சொஸைட்டியில் தேர்தல்கள் நடக்காததால், உறுப்பினர்கள் சங்க நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கெடுக்க முடியாமல் போகிறது. இதனால் ஊழல்கள் அதிகமாகியுள்ளன. உடனடியாக கூட்டுறவு சொஸைட்டிகளின் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கூறுகிறார் குமரி அனந்தன்.

சென்னை குறளகத்தில் கைத்தறி இயக்குனர் அலுவலகத்தில் சென்று பார்த்தால் ஐ. ஏ. எஸ். இயக்குனர் தலைமையில் எக்கச்சக்கமான அதிகாரிகள் புறாக் கூண்டு போன்ற அறைகளில் அமர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பார்கள். கைத்தறிக்கென்று ஓர் இயக்குனரும் இத்தனை அதிகாரிகளும் இருக்கும்போதே நெசவாளருக்கு இவ்வளவு கஷ்டங்களா என்று நாமே சிந்திக்க ஆரம்பித்து விடுவோம். ஆனால் உள்ளே சென்று விசாரித்தால் ''அலுவலகத்தின் பெயர்தான் கைத்தறி இயக்குனர் அலுவலகம். ஆனால் நாங்கள் கைத்தறி தவிர, விசைத்தறிகள் நவீன நூற்பாலைகளின் நிர்வாகம் போன்றவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கின்றோம்'' என்ற பதில் வரும். கைத்தறியின் வீழ்ச்சிக்குக் காரணம் விசைத்தறிதான். இந்த இரண்டையும் ஒரே அதிகாரியின் பொறுப்பில் எப்படி விடலாம்? இது பாலுக்குப் பூனையைக் காவல் போட்டது போலல்லவா இருக்கிறது?

கோ — ஆப்டெக்ஸின் கோடிகள்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் திட்டத்திட்ட 15 கோடி மூலதனத்தில் செயல்படுகிறது. இதில் 2 கோடி ரூபாய் தான் கூட்டுறவு சங்கங்கள் போட்டிருக்கின்றன. மீதி மத்திய, (ரிசர்வ் வங்கி மூலம்) மாநில அரசு பணம் தான். கோ–ஆப்டெக்ஸ் 70 கோடி ரூபாய்க்குத் துணிகளைக் கொள் முதல் செய்கிறது. இதன் ஆலோசனைக் குழுத் தலைவராக இருப்பவர் அனகாபுத்தூர் ராமலிங்கம். இவர் குடும்பமே ஒரு நெசவாளர் குடும்பம். நெசவாளர்களின் கஷ்டங்களைத் துல்லியமாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார் ராமலிங்கம். ''நெசவாளர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும் போது ''எவ்வளவுக்கு எவ்வளவு குழியில் உட்கார்ந்து வேலை செய்கிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு வருவாயை எதிர் பார்க்கலாம். ஆனால் என்னதான் கஷ்டப் பட்டு வேலை செய்தாலும் ஒரு நெசவாளி வருடத்தில் 3000 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்க முடியாது. நூல் விலை கன்னாபின்னாவென்று ஏறுவதற்குக் காரணம் உற்பத்தி குறைவு தான். இந்தியாவில் 3 லட்சம் ஏக்கரில் தான் பருத்தி பயிரிடுகிறார்கள். இதை அதிகப்படுத்த வேண்டும். 1958–லேயே அரசு வாய்மொழி கட்டுப்பாடாக, மில்கள் பார்டர் போட்ட வேஷ்டிகளை நெய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. ஆனால் மில்கள் இவைகளை நெய்கின்றன''



கணவன்: நம் பெண் கல்யாணத்திற்கு ஹோட்டல் அதிபர் ஒரு ஸ்டீல் கிளாஸ் அன்பளிப்பு கொடுத்தாரே, அதில் என்ன எழுதியிருக்கு?''

மனைவி: 'கிருஷ்ண பவனில் திருடியது அல்ல' என்று.

—பழனிச்சாமி.

என்கிறார். குறிப்பிட்ட துணி ரகங்களைக் கைத்தறிக்கென்றே ஒதுக்குவது பற்றி இவரும் குறிப்பிடுகிறார். இதை மீறும் விசைத்தறியாளர்களைத் தண்டிக்கக் கடுமையான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்கிறார். ''வருடத்தில் இரண்டு மாதங்கள் தான் (60 நாட்கள்) தள்ளுபடி கொடுக்கிறோம். மற்றும் மத்திய, மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கடனில் துணி கொடுக்கிறோம். இவைகளைச் செய்யாவிடில் கைத்தறியாளர்களின் நிலை இன்னும் மோசமாகிவிடும். நாங்கள் தரும் தள்ளுபடிக்கு ஈடாக, மத்திய அரசு பணம் தரும். கைத்தறி சம்பந்தப்பட்ட கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க மத்திய அரசுக்குத் தான் அதிகாரம் உள்ளது. தள்ளுபடி கொடுக்கும் 60 நாட்களை உயர்த்த மத்திய அரசு தயங்குகிறது. ஒவ்வொரு முறையும் போராடித்தான் தள்ளுபடிக்கான உத்தரவை பெற வேண்டியுள்ளது. 1983–ல் ரம்ஜான் பண்டிகைக்குத் தள்ளுபடி தர முடியாத நிலை ஏற்பட்டது'' என்று வருந்தும் ராமலிங்கம் சில யோசனைகளும் தெரிவிக்கிறார்: ''விசைத்தறிகளைக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலையில் அரசு இருக்குமானால் அவைகளில் உற்பத்தி ஆகும் துணிகளுக்கான மார்க்கெட்டை உற்பத்தியாளர்களே தேடிக் கொள்ள வேண்டும் என்றும் இந்தியாவில் விற்கக் கூடாது என்றும் சட்டம் கொண்டு வரட்டும்'' என்கிறார்.

பல்வேறு ஊர்களுக்குச் சென்று பல கைத்தறியாளரையும், கூட்டுறவுச் சங்க, அரசாங்க அதிகாரிகளையும் நேரில் சந்தித்துப் பேசியதில் இரு விஷயங்கள் நிதர்சனமாகத் தெரிகின்றன. ஒன்று கைத்தறியாளர் துயர் துடைக்க யோசனைகளுக்குக் குறைவேயில்லை என்பது. இரண்டாவது, கைத்தறியாளர் இன்னல்கள் இப்போதைக்குத் தீரப்போவதில்லை என்பது!

கட்டுரை: **ப்ரியன்**

வண்ணப்படம், புகைப்படங்கள்: **'சுபா' ரவிசங்கர்**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka